



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:119 | 14-11-2025 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

14.11.2025 ஐப்பசி 28
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.13

திதி:
இன்று அதிகாலை 4.38 வரை
நவமி பின்பு தசமி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 1.06 வரை
மகம் பின்பு பூரம்.

யோகம் :
இன்று காலை 11.18 வரை
ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம் :
இன்று அதிகாலை 4.38 வரை
கரசை பின்பு மாலை 4.47 வரை
வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 1.06 வரை
அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 1.06 வரை
உத்திராடம் பின்பு திருவோணம்.

நல்ல நேரம்
காலை 12.15 – 1.15.
மாலை 6.30 – 7.30.

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# டெல்லி கார் குண்டு வெடிப்பை நிகழ்த்தியது பயங்கரவாதி உமர்: டிஎன்ஏ சோதனையில் உறுதி

**புதுடெல்லி,நவ.14:**

செங்கோட்டை கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்திய குழுவினர், இந்த தாக்குதல்களை நடத்துவதற்காக ரூ.20 லட்சம் நிதி திரட்டியதும், 2,000 கிலோ வெடிமருந்து கொள்முதல் செய்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


குண்டுவெடிப்பை நிகழ்த்தியது உமர் என்பதும் டிஎன்ஏ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

டெல்லி செங்கோட்டை அருகே கடந்த 10ந்தேதி மாலை காரின் வெடிகுண்டு வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 13 பேர் உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் அரியானா மாநிலத்தில் 3 ஆயிரம் கிலோ அமோனியம் நைட்ரேட் மற்றும் பல ஆயுதங்கள், பொருட்கள் கைப்பற்றப்பட்டதன் தொடர்ச்சியாக இந்த வெடிப்பு நிகழ்த்தப்பட்டு உள்ளது.

செங்கோட்டை சுற்றுப் பகுதி முழுவதும் உள்ள சிசிடிவி காட்சிகளை விசாரணை அமைப்பு ஆராய்ந்ததில், இந்தத் தாக்குதலை நடத்தியது பரிதாபாத்தைச் சேர்ந்த டாக்டர் உமர் ஓட்டிய 'ஹூண்டாய் ஐ20' கார் மூலம் வெடிகுண்டு வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தப்பட்டது கண்டறியப்பட்டது. மேலும், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை வளையத்தில் வைக்கப்பட்டுள்ளனர். கார் வெடிப்பு தொடர்பாக டெல்லி காவல்துறை, தேசிய புலனாய்வு முகமை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் தீவிர விசாரணை மேற்கொண்டதில், இது பயங்கரவாதச் செயல் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனிடையே வெடித்த காரில் இருந்த உடல் பகுதிகளைக் கைப்பற்றி, உமரின் தயாரின் மாதிரியுடன் டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டது. இதில் காரின் ஸ்டீயரிங் வீல் மற்றும் ஆக்ஸிலரேட்டருக்கும்



இடையில் சிக்கிய உமரின் கால் பகுதி மீட்கப்பட்டு, அது அவரது தாயாரின் டிஎன்ஏ பரிசோதனையுடன் 100 சதவீதம் ஒத்துப் போவதாக டெல்லி போலீசார் தெரிவித்துள்ளனர்.

**புதிய சிசிடிவி வீடியோ**

இந்த கார் வெடித்தபோது, அப்பகுதி கடைகளில் இருந்த சிசிடிவி காட்சிகள், சிலர் செல்போன்களில் பதிவான காட்சிகள் என பல்வேறு வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த விடியோவில், போக்குவரத்து நெரிசலில் வாகனங்கள் ஊர்ந்து கொண்டிருக்கும் பகுதியில், திடீரென்று கார் வெடித்துச் சிதறும் காட்சிகளும், மக்கள அலறி ஓடும் காட்சிகளில் இடம்பெற்றுள்ளது.

செங்கோட்டை அருகே மசூதிக்கு பக்கத்தில் உமர் சாலையில் நடந்து செல்லும் வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

பரிதாபாத்திலிருந்து டெல்லி வரை காரை ஓட்டி வந்த உமர் பதிவாகியிருக்கும் சிசிடிவி காட்சிகளை பல்வேறு சுங்கச் சாவடி களிலிருந்து கைப்பற்றப் பட்டுள்ளது.

அதே வேளையில், உமர் வாங்கியிருந்த மற்றொரு சிவப்பு நிறக் காரும் அரியானா மாநில பரிதாபாத்தின் கந்தாவ்லி கிராமத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

உடனடியாக அந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு, காருக்குள் வெடிபொருள்கள் ஏதேனும் இருக்கிறதா என்று ஆய்வு செய்யப் பட்டது. ஆனால் காரில் எந்த பொருளும் இல்லை. ஆனால், இதுவும் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தவே வாங்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய பல டாக்டர்கள் பரிதாபாத் மற்றும் ஜம்மு - காஷ்மீரில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**2 ஆயிரம் கிலோ வெடிப் பொருள்**

இந்த நிலையில் என்ஐஏ உள்ளிட்ட அமைப்புகள் நடத்திய விசாரணையில், மொத்தம் 4 இடங்களில் தொடர் குண்டுவெடிப்புகளை நிகழ்த்த உமர் மற்றும் குழுவினர் திட்டமிட்டிருந்தது தெரியவந்திருப்பதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.மொத்தம் 8 பயங்கரவாதிகள் 2 பேர் கொண்ட குழுவாகப் பிரிந்து 4 நகரங்களைக் குறிவைத்து, ஒரே நேரத்தில் கார் மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காக மருத்துவர்கள் முசம்மில், அதீல், உமர் மற்றும் ஷாஹீன் ஆகியோர் ஒருங்கிணைந்து ரூ. 20 லட்சம் நிதித் திரட்டியதாகவும், செங்கோட்டை தாக்குதலுக்கு முன்னதாக திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்த தொகையை உமரிடம் ஒப்படைத்தது தெரியவந்துள்ளது.

குருகிராம், நுஹ் மற்றும் சுற்றுப் பகுதிகளில் இருந்து 2,000 கிலோ என்பிகே (நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம்) வெடிப் பொருள்களை ரூ. 3 லட்சத்துக்கு வாங்கியுள்ளனர். இதனைப் பயன்படுத்தி ஐஇடி வெடிகுண்டுகளைத் தயாரித்துள்ளனர். இரண்டு முதல் 4 பேர் கொண்ட சிக்னல் செயலிக் குழுவை உருவாக்கி, இந்ததிட்டத்தை பாதுகாப்புடன் உமர் ஒங்கிணைத்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**பல்வேறு கோணங்களில் துருவித்துருவி விசாரணை**

கடந்த 2021 மற்றும் 2022 -க்கு மத்தியில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் பிரிவான அன்சார் கஸ்வத்-உல்-ஹிந்தின் அமைப்புடன் மருத்துவர் முசம்மில்லுக்குத் தொடர்பு ஏற்பட்டுள்ளது புலனாய்வு அமைப்புகளின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனிடையே, அரியானாவில் உமர் வாங்கிய சிவப்பு நிற ஈகோ ஸ்போர்ட்ஸ் காரை போலீசார் நேற்று இரவு கண்டுபிடித்து, பறிமுதல் செய்துள்ளனர். தற்போது மேலும் இரண்டு கார்கள் வெடிகுண்டு தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்த உமர் ஏற்பாடு செய்திருக்கலாம் என புலனாய்வு அமைப்புகள் சந்தேகிக்கின்றன. இதனடிப்படையில், பல்வேறு கோணங்களில் விசாரணையைத் துரிதப்படுத்தியுள்ளனர்.மேலும், பயங்கரவாதத் தாக்குதலுக்காக கைது செய்யப்பட்டுள்ள டாக்டர்களின் குழுவில் உள்ள அனைவரையும் கண்டுபிடிக்கும் பணியில் புலனாய்வு அமைப்புகள் ஈடுபட்டுள்ளன விசாரணையில் தீபாவளி பண்டிகைக்கு மக்கள் கூட்டம் அலைமோதும். அந்த சமயத்திலும் சதித்திட்டத்திற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள். ஆனால் அதை செயல்படுத்த முடியவில்லை. டிசம்பர் 6-ந் தேதி (பாபர் மசூதி இடிப்பு தினம்) கார் வெடிப்பை நிகழ்த்தலாம் என திட்டமிட்டு இருந்ததாக தெரிகிறது. ஆனால் அடுத்தடுத்து வெடிபொருளை கைப்பற்றி அவர்களின் சதித்திட்டத்தை போலீசார் முறியடித்து வந்த ஆத்திரத்தில் 10-ந் தேதி உமர் முகமது காரை வெடிக்க செய்திருக்கலாம் என கருதப்படுகிறது.

# மேகேதாட்டு அணை திட்ட வரைவு அறிக்கைக்கு எதிரான தமிழக அரசின் மனு: உச்ச நீதிமன்றம் நிராகரிப்பு

**புது டில்லி,நவ.14:**



காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் திட்ட வரைவு அறிக்கைக்கு எதிராக தமிழக அரசு தாக்கல் செய்த மனு, முன்கூட்டிய நடவடிக்கை என்று கூறி விசாரணைக்கு ஏற்க உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது.

காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்ட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஒப்புதல் வழங்க உத்தரவிடக் கோரி கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது. இந்நிலையில், கர்நாடகாவின் இந்த கோரிக்கையை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் பரிசீலிக்க தடை கோரி தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, "காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சி, காவிரி தீர்ப்பாயத்தின் உத்தரவை மீறும் செயலாகும். காவிரி தீர்ப்பாயத்தின் உத்தரவை கடந்த 2018, பிப். 16 அன்று உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தி உள்ளது.

காவிரி ஆறு பாயும் கீழ்ப்பகுதி மாநிலங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்வதே காவிரி தீர்ப்பாய இறுதித் தீர்ப்பின் நோக்கமாக இருந்தது. ஆனால், தற்போது அதை மீறும் வகையில் காவிரியின் குறுக்கே அணை கட்ட கர்நாடகா முயல்கிறது. 67.16 டிஎம்சி அடி கொள்ளவு கொண்ட நீரை தேக்கும் நோக்கிலும், 400 மெகாவாட் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்கிலும் ரூ. 9,000 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டத்தை கர்நாடகா செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இந்த திட்டம் நிறைவேற்றப்படுமானால், தமிழ்நாடு பெரிதும் பாதிக்கும்." என வாதிட்டார்.

கர்நாடக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஷியாம் திவான், "மேகேதாட்டு அணை கட்டுவதால் தமிழ்நாடு எந்த வகையிலும் பாதிக்கப்படாது. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரை வழங்குவதற்கு இத்திட்டம் தடையாக இருக்காது." என வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், "கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ள திட்ட வரைவு அறிக்கை, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு (CWRC) ஆகியவற்றின் பரிசீலனையில் மட்டுமே உள்ளது. CWMA மற்றும் CWRC ஆகியவற்றின் ஒப்புதல்களுக்குப் பிறகுதான் திட்ட வரைவு அறிக்கைஏற்றுக்கொள்ளப்படும் என்று மத்திய நீர் ஆணையம் ஏற்கெனவே தெளிவுபடுத்தி உள்ளது.

திட்ட வரைவு அறிக்கை அங்கீகரிக்கப்பட்டால், தமிழ்நாடு உள்பட பாதிக்கப்பட்ட தரப்பினர் சட்டப்படி நடவடிக்கைகளை எடுக்க உரிமை உள்ளது. அதேநேரத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு ஒதுக்கப்பட்ட காவிரி நீரை விடுவிக்க வேண்டிய கடமை கர்நாடக அரசுக்கு உள்ளது. தற்போதைய நிலையில், தமிழ்நாடு அரசின் மனு முன்கூட்டிய நடவடிக்கை. எனவே, இந்த மனு நிராகரிக்கப்படுகிறது." என தெரிவித்தனர்.

## முயல் வேட்டைக்கு சென்ற 2 பேர் மின்வேலியில் சிக்கி உயிரிழப்பு

**செங்கம், நவ.14:**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தை சேர்ந்த 4 இளைஞர்கள் முயல்வேட்டைக்கு சென்றனர். அப்போது குப்பநத்தம் பகுதியில் மின்வேலியில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர்.

சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மின் வேலியில் சிக்கி 17 மற்றும் 27 வயதான இளைஞர்கள் உயிரிழந்தது தெரிய வந்துள்ளது. சட்டவிரோதமாக மின்வேலி அமைத்த நில உரிமையாளர் பாஷா என்பவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தினர். நில உரிமையாளர் இளைஞர்களின் உடல்களை அருகில் இருந்த கிணற்றில் வீசியது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## நடிகர் ரஜினிகாந்த், கே.எஸ். ரவிகுமார் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, நவ.14:**

நடிகர் ரஜினிகாந்த், கே.எஸ். ரவிகுமார் உள்பட திரைப் பிரபலங்கள் பலரின் வீடுகளுக்கு இன்று வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை டிஜிபி அலுவலகத்திற்கு இன்று இ-மெயில் மூலம் நடிகர் ரஜினகாந்த், இயக்குனர் கே.எஸ். ரவிகுமார், நடிகைகளான பிரியா பவானி சங்கர், சாக்ஷி அகர்வால் உள்ளிட்டோரின் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதேபோல், பாஜக மூத்த தலைவர் ஹெச். ராஜா மற்றும் அவரது மகள் வீட்டிற்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து போலீசார் வெடிகுண்டு நிபுணர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சோதனை நடத்தி வருகின்றனர். இதுவரை எந்த வெடிகுண்டும் சிக்க வில்லை. போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீடு கட்டித் தருவதாக ரூ.14,599 கோடி மோசடி: நொய்டாவில் ரியல் எஸ்டேட் நிறுவனர் கைது

**புதுடெல்லி,நவ.14:**



ஜேபி இன்ஃப்ராடெக் லிட். எனும் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் நிறுவனரும் நிர்வாக இயக்குநருமான மனோஜ் கவுரை, பண மோசடி வழக்கில் அமலாக்கத் துறை கைது செய்துள்ளது.

டெல்லி அருகேயுள்ள நொய்டாவை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 2007 முதல் செயல்பட்டு வரும் ரியல் எஸ்டேட் நிறுவனம் ஜேபி இன்ஃப்ராடெக் லிட். குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களைக் கட்டும் இந்நிறுவனம், நொய்டாவில் இருந்து ஆக்ரா வரையிலான 165 கிலோ மீட்டர் தொலைவுள்ள ஆறு வழி எக்ஸ்பிரஸ் வழித்தட பராமரிப்பையும்மேற்கொண்டு வருகிறது. மும்பை பங்குச் சந்தையிலும் தேசிய பங்குச் சந்தையிலும் இந்நிறுவனம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜேபி விஷ்டவுன் மற்றும் ஜேபி கிரீன்ஸ் எனும் வீட்டு வசதி திட்டங்களில் முதலீடு செய்தவர்கள் அளித்த புகார்களின் அடிப்படையில், டெல்லி மற்றும் உத்தரப் பிரதேச காவல்துறையின் பொருளாதார குற்றப்பிரிவுகள் துறை வழக்குப் பதிவு செய்து மனோஜ் கவுரிடம் விசாரணை மேற்கொண்டது. மேலும், இந்த வழக்கில் அமலாக்கத் துறையும் விசாரணையை நடத்தி வருகிறது.

இந்தப் பின்னணியில், அமலாக்கத் துறை மனோஜ் கவுரை அமலாக்கத் துறை கைது செய்துள்ளது. இது தொடர்பாக அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "குடியிருப்புகள் கட்ட இருப்பதாக ஜேபி இன்ஃப்ராடெக் லிட் வெளியிட்ட விளம்பரங்களை நம்பி ஆயிரக்கணக்கானோர் வீடுகளை வாங்க முதலீடு செய்துள்ளனர். ஆனால், அந்தப் பணம் கட்டுமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் திருப்பி விடப்பட்டுள்ளது.

இதனால், வீடு வாங்க பணம் கொடுத்தவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்படாததால் அவர்கள் புகார்களை அளித்துள்ளனர். ரூ.14,599 கோடி ஏமாற்றப்பட்ட வழக்கில் மனோஜ் கவுர் கைது செய்யப்பட்டுள்ளார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சத்தீஸ்கரில் 6 நக்சல்கள் சுட்டுக்கொலை: பாதுகாப்புப் படை அதிரடி

**ராய்ப்பூர்,நவ.14:**

சத்தீஸ்கரின் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள இந்திராவதி தேசிய பூங்காவிற்குள் உள்ள காடுகளில் நக்சல்கள் பதுங்கி உள்ளதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. இந்த நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினருக்கும் நக்சல்களுக்கும் இடையே மோதல்கள் நடந்தன. இதில் நக்சல்கள் 6 பேர் கொல்லப்பட்டனர்.

என்கவுன்டருக்குப் பிறகு 3 பெண்கள் உட்பட 6 மாவோயிஸ்டுகளின் இறந்த உடல்கள் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டன.

இதுதொடர்பாக, பீஜப்பூர் போலீஸ் அதிகாரி ஜிதேந்திர யாதவ் கூறுகையில், சத்தீஸ்கர் என்கவுன்டரில் ரூ.27 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்ட நக்சல்கள் 6 பேர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஏகே-47, எல்எம்ஜி, ஐஎன்எஸ்ஏஎஸ் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களும் மீட்கப்பட்டன.







# திருக்குறள் குறள்-439

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை



எக்காலத்திலும் தன்னை மிக உயர்வாக எண்ணி வியந்து மதிக்கக் கூடாது, நன்மை தராத செயலைத்தான் விரும்பவும் கூடாது.

## சிந்திக்க ஒரு நொடி



குருடாக சில சமயம்
செவிடாக சில சமயம்
ஊமையாக சில
சமயம் இருந்தாலே
போதும்.....
அதுவே நம்
மகிழ்ச்சியின்
ரகசியமாகும்...

உஷா முத்துராமன்

# பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்பட பலர் உள்ளனர்.

## முதலமைச்சர் ஸ்டாலினுடன் ரோமன் கத்தோலிக்க பேராயர்கள் சந்திப்பு



முதலமைச்சர் ஸ்டாலினை நேற்று ரோமன் கத்தோலிக்க பேராயர்கள் சென்னை, மயிலாப்பூர் ஜார்ஜ் அந்தோணிசாமி, தருமபுரி லாரன்ஸ் பியஸ் துரைராஜ், செங்கல்பட்டு நீதிநாதன் அந்தோணிசாமி, கும்பகோணம் ஜீவானந்தம் அமலநாதன், சிவகங்கை லூர்து ஆனந்தம், அருட்தந்தைகள் சேவியர் அருள்ராஜ், அந்தோணிசாமி, அருட்சகோதரிகள் டாக்டர் மரியா பிலோமி, வைதேகி, புனித தாமஸ் கதீட்ரல் பசிலிக்கா ரெக்டர் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை ஆகியோர் சந்தித்து பேசினர்,

# இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை



தேனி மாவட்டத்தில் மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி.,வழங்கினார்.

## வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சி முகாம்



அரூரில் திமுக தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப் பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சி முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் சாலையில் நாற்று நட்டனர்



திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம் விக்கிரபாண்டியம் ஊராட்சியில் சாலையை உடனடியாக சீர்செய்ய வலியுறுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் சாலையில் நாற்று நட்டனர்.

## தீவிரத் திருத்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமிருந்து பெறப்படும் கணக்கீட்டு படிவங்களை பிஎல்ஓ செயலியில் பதிவு செய்யும் பணி



திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாகங்களுக்கான வாக்காளர் சிறப்பு தீவிரத் திருத்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமிருந்து பெறப்படும் கணக்கீட்டு படிவங்களை பிஎல்ஓ செயலியில் பதிவு செய்யும் பணியை கலெக்டர் சிவசவுந்தரவல்லி பார்வையிட்டார்.

## கலந்தாலோசனைக் கூட்டம்



**சென்னை, நவ.14:**

தமிழக தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் தலைமையில், பொங்கல் 2026 வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறைச் சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், வே. அமுதவல்லி, இ.ஆ.ப, கைத்தறி துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., கோ-ஆப்டெக்ஸ், மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தோழி விடுதி கட்டிடம் கட்டும் பணி



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக வளாகத்தில் ரூ.6.58 கோடி மதிப்பில் தோழி விடுதி கட்டிடம் கட்டும் பணிகளை அரசு தலைமைக்கொறடா ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமிபவ்யா தொடங்கி வைத்தனர்.

## சந்தவேலூரில் அறிவியல் கண்காட்சி



காஞ்சிபுரம் மாவட்டம் சந்தவேலூரில் அறிவியல் கண்காட்சியை முதன்மை கல்வி அலுவலர் நளினி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

## தூய்மைப் பணியாளர்கள் திடீர் போராட்டம்



தூத்துக்குடியில் கொட்டும் மழையில் தூய்மைப் பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி



கோவை கவுண்டம்பாளையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை கலெக்டர் பவன்குமார் பார்வையிட்டார்.

## 3000மீ ஸ்டீபில் சேஸ் பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற ஜி சின்னப்பராஜ்



23வது ஆசிய மாஸ்டர் தடகளம் போட்டியில் 3000மீ ஸ்டீபில் சேஸ் பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற ஜி சின்னப்பராஜ் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் ரா லட்சுமணனை நேற்று நவம்பர் 13 சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## வாக்காளர் திருத்தப் பட்டியல் விழிப்புணர்வு பேரணி



திருப்பூர் அரசு கலைக்கல்லூரியில் வாக்காளர் திருத்தப் பட்டியல் விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் மனிஷ் நாரணவரே துவக்கி வைத்தார்.

## சத்தியகிரீஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம்



புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சத்தியகிரீஸ்வரர் கோவிலில் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் சாமி தரிசனம் செய்தார்.

## எஸ்ஐஆர் தொடர்பாக மகளிர் சுயஉதவிக்குழுவினர் வரைந்த ரங்கோலி கோலம்



நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் எஸ்ஐஆர் தொடர்பாக மகளிர் சுயஉதவிக்குழுவினர் வரைந்த ரங்கோலி கோலத்தை கலெக்டர் துர்காமூர்த்தி, எஸ்பி விமலா பார்வையிட்டனர்.

## முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசுகள்



திண்டிவனம் அரசு கல்லூரி அருகே கூட்டுறவு வார விழாவையொட்டி மகளிர்க்கு கோலப் போட்டியும் ஆண்களுக்கு ஸ்லோ பைக் ரேஸும் விழுப்புரம் மண்டல இணைப்பதிவாளர் விஜய சக்தி உத்தரவின் பேரில் சரக துணைப்பதிவாளர் ஜீவிதா தலைமையில் நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## புதிதாக கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடைகளை மேயர் மகேஷ் திறந்து வைத்தார்




நாகர்கோவில் மாநகராட்சி ஆசாரிபள்ளம் மற்றும் ஒழுகினசேரி பகுதியில் புதிதாக கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடைகளை மேயர் மகேஷ் நேற்று திறந்து வைத்தார்.

## வானிலை எச்சரிக்கை: தூத்துக்குடி மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை

**சென்னை, நவ.14:**

தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் வலுவான மழை மேகங்கள் உருவாகியுள்ளது. மிக கனமழை பெய்யும் என்றும், கடல் பகுதியில் 55 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வகையான மீன்பிடி படகுகளும் உடனடியாக கரை திரும்பிட அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

## தோட்டா தரணிக்கு செவாலியே விருது! முதலமைச்சர் வாழ்த்து

**சென்னை, நவ.14:**

கலை, இலக்கியம் மற்றும் அறிவியலில் சிறந்து விளங்குபவர்களைக் கவுரவிக்கும் விதமாக பிரான்ஸ் அரசு 1957-ஆம் ஆண்டு முதல் 'செவாலியே' விருதை வழங்கி வருகிறது. அதன்படி இந்த ஆண்டிற்கான செவாலியே விருது, திரைப்பட கலை இயக்குநர் 64 ஆண்டுகளாக பணியாற்றி வரும் தோட்டா தரணி-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் வாழ்த்து இந்நிலையில், தோட்டா தரணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஆக்ஸ்போர்டில் ஒளிரும் தந்தை பெரியாரின் ஓவியத்தைத் தந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திய தோட்டா தரணிக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான செவாலியே விருது அறிவிக்கப் பட்டிருப்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது என்று முதல்வர் தெரிவித்துள்ளார். அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற தோட்டா தரணி, இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசையில் இணையவுள்ளது பெருமையளிக்கிறது என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தோட்டா தரணிக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலி னும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## எஸ்ஐஆர் பணியில் 5 கோடி படிவங்கள் விநியோகம்

**சென்னை, நவ.14:**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் 5 கோடி படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையம் தகவல் தெரி வித்துள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை 78.09 சதவிகிதம் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 6.41 கோடி படிவங்கள் அச்சடிக்கப்பட்டு இதுவரை 5 கோடி படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. புதுச்சேரியில் 10.21 லட்சம் படிவங்கள் அச்சடிக்கப்பட்டு இதுவரை 9.5 லட்சம் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. புதுச் சேரியில் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்கள் 93.04 சதவீதம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 12 மாநிலங்களில் இது வரை 72.66 சதவிகிதம் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணை யம் தெரிவித்துள்ளது.

## பொதுச் சின்னம் கோரி மநீம விண்ணப்பம்

**சென்னை, நவ.14:**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டி யிட பொதுச் சின்னம் ஒதுக்குமாறு மக்கள் நீதி மய்யம் கட்சி இந்திய தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்துள்ளது. கமல்ஹாசன் எம்.பி. தலைமையிலான மக்கள் நீதி மய்யம், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்காக விருப்பப்பட்ட பத்து சின்னங்களின் பட்டியலில் இருந்து ஒரு பொது சின்னத்தை ஒதுக்குமாறு விண்ணப்பத்தில் கோரியுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியின் பிரதிநிதிகள் தில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தின் அலுவலகத்தில் அதிகாரி களைச் சந்தித்து, இதற்கான விண்ணப்பத்தை நேரில் அளித்தனர். 2021 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யத்திற்கு, 'டார்ச் லைட்' சின்னத்தை தேர்தல் ஆணை யம் ஒதுக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் உரிமைத் தொகை பெற உதவுங்கள்: திமுக நிர்வாகிகளுக்கு மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

**சென்னை, நவ.14:**



திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் 'உடன் பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டசபை தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

அதன்படி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் 'உடன் பிறப்பே வா' நிகழ்ச்சியில் இன்று, போடிநாயக்கனூர், சாத்தூர் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை ஒன் டூ ஒன் சந்தித்து ஆலோசனை நடத்தினார். ஆலோசனையின்போது தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் பணி உள்ளிட்டவை குறித்து அவர்களிடம் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

அப்போது, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறாதவர்களில் தகுதியானவர்கள் இருப்பின் அவர்கள் உரிமைத்தொகை பெறும் வகையில் கட்சியினர் உதவிட வேண்டும் என்று கட்சியினரிடம் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

போடி தொகுதியை இம்முறை திமுக கூட்டணி வெல்ல வேண்டும்- தொகுதி நிர்வாகிகளிடம் முதலமைச்சர் கண்டிப்புடன் கூறியுள்ளார். மேலும், அரசின் சாதனைகளை தொகுதி முழுக்கவும் விளம்பரப்படுத்தவும் நிர்வாகிகளுக்கு முதல்-அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார்.

## அண்டை மாநிலங்களுக்கான ஆம்னி பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க ஈ.ஆர்.ஈஸ்வரன் கோரிக்கை



**உதகை, நவ.14:**

அரசின் வரி வசூல் முறைகளால் பாதிக்கப்படுகின்ற ஆம்னி பேருந்துகளின் போக்குவரத்து நிறுத்தப்பட்ட சூழ்நிலையில், மாநிலங்களுக்கு இடையே பயணிக்கின்ற பயணிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வெளியிட்டு உள்ள அறிக்கையில், தமிழ்நாட்டிலிருந்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களுக்கு ஆம்னி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்பு கேரளாவில் தமிழக எண் கொண்ட 30-க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை கேரள போக்குவரத்து துறை பறிமுதல் செய்து ரூபாய் 70 லட்சம் வரை அபராதம் விதித்துள்ளது.

இதனால் ஆம்னி பேருந்துகள் உரிமையாளர்கள் செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றனர். தற்போது மோட்டார் தொழில் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கும் தருவாயில் இது போன்ற பிரச்சனைகளால் வாகன உரிமையாளர்கள் மேலும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

கேரள அரசு போக்குவரத்து துறையின் இந்த செயலுக்கு காரணம் தமிழகத்திற்கு அண்டை மாநிலங்களில் இருந்து வரும் ஆம்னி பேருந்துகளுக்கு இருக்கை அடிப்படையில் தமிழக அரசு வரி வசூல் செய்வதுதான் காரணம் என கூறப்படுகிறது.

இதனால் பிற அண்டை மாநிலங்களிலும் தமிழக அரசு பதிவு எண் கொண்ட ஆம்னி பேருந்துகளுக்கு இருக்கை அடிப்படையில் வரி வசூல் செய்யப்படுகிறது. தமிழக அரசு பிற மாநில ஆம்னி பேருந்துகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரியை நிறுத்தினால்தான் தமிழகத்தில் இருந்து பிற அண்டை மாநிலங்களுக்கு செல்லும் ஆம்னி பேருந்துகளிடமிருந்து அண்டை மாநில போக்குவரத்து துறை வரி வசூலை நிறுத்தும் என கூறப்படுகிறது.

அரசின் வரி வசூல் முறைகளால் பாதிக்கப்படுகின்ற ஆம்னி பேருந்துகளின் போக்குவரத்து நிறுத்தப்பட்ட சூழ்நிலையில் அதிகமாக பாதிக்கப்படுவது மாநிலங்களுக்கு இடையே பயணிக்கின்ற பயணிகள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

எல்லா பகுதிகளுக்கும் ரெயில் போக்குவரத்து இல்லாத சூழ்நிலையில் மக்கள் வசதியான பயணங்களுக்கு ஆம்னி போன்ற பேருந்து வசதிகள் அத்தியாவசியமான ஒரு தேவையாக இருக்கின்றது. தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில மக்களின் நன்மைக்காக விரைந்து தீர்வு கண்டு மீண்டும் ஆம்னி பேருந்து சேவையை ஆரம்பிக்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் இதற்கான தீர்வு காண வேண்டுமென கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் சிவகாமி அம்மன் தேரோட்டம்

**கடலூர், நவ.14:**



உலகப் புகழ் பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவிலில் உள்ள சிவகங்கை குளம் மேற்குகரையில் திருக்காமக்கோட்டம் என்ற ஸ்ரீசிவகாமி சுந்தரி அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் உள்ள சிவகாமசுந்தரியின் பெயர் திருக்காமக் கோட்டமுடைய பெரியநாச்சியார் என்று கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. கோவிலில் வெளிச்சுற்றில் சித்தரகுப்தன், நடுக்கம் தீர்த்த விநாயகர், ஆதிசங்கரர், ஸ்ரீ சக்கரம் ஆகிய சந்நிதிகள் உள்ளன.

இச்சிறப்பு வாய்ந்த இக்கோவிலில் ஆண்டு தோறும் ஐப்பசி பூர உற்சவம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டின் ஐப்பசி பூர உற்சவம் கடந்த 6 ம் தேதி இரவு (புதன்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் காலை மாலை சுவாமி வீதியுலா நடந்தது. தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று விமரிசையாக நடைபெற்றது. காலையில் கோவிலில் இருந்து அம்மன் சிறப்பு அலங்காரத்தில் ஊர்வலமாக வந்து திருத்தேரில் எழுந்தருளியதும், தேர் வடம் பிடிக்கப்பட்டது. தேர் கீழ் வீதியில் இருந்து புறப்பட்டு, நான்கு முக்கிய வீதிகளில் வலம் வந்து நிலையை அடைந்தது. பக்தர்கள் பலர் கலந்துகொண்டு வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

நாளை பட்டு வாங்கும் உற்சவமும் மற்றும் பூரச்சலங்கை உற்சவமும், நாளை மறுநாள் (15-ம் தேதி) காலை தபசு உற்சவமும், இரவு ஸ்ரீ சிவானந்த நாயகி சமேத ஸ்ரீ சோமாஸ்கந்தர் திருக்கல்யாண உற்சவமும் நடைபெற உள்ளது. அத்துடன் விழா நிறைவுபெறுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் பொது தீட்சிதர்கள் செய்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## மாதவிடாய் பிரச்னையை சரி செய்யும் பிரண்டை!



எளிதில் கிடைக்கக்கூடிய பிரண்டை சிறந்த மருத்துவ குணங்கள் நிறைந்தது. மேலும் பலவித நோய்களை தீர்க்கவும், கட்டுப்படுத்தவும் அரு மருந்தாகும்.

பெண்களுக்கு மாதவிடாய் சமயத்தில் ஏற்படும் கோளாறுகளை சரி செய்ய பிரண்டையை போன்ற அருமையான மருந்து கிடையாது என சொல்லலாம்.வாயுத் தொல்லை இருப்பவர்கள் பிரண்டையை துவையலாக தயாரித்து சாப்பிட்டால் செரிமான சக்தி அதிகமாவதுடன், அஜீரணக் கோளாறுகளும் நீங்கும்.

* பிரண்டையை நெய் விட்டு வதக்கி கல் உப்பு தேவையான அளவு சேர்த்து சாப்பிட்டு வந்தால் மூல நோய் குணமாகும்.

* மலத்துவாரத்தில் எரிச்சல், அரிப்பு போன்ற பிரச்னைகள் இருந்தால் பிரண்டையை நெய்விட்டு வதக்கி உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பிரச்னைகள் தீரும்.

* பிரண்டையை சுத்தம் செய்து, சாறு எடுத்து அதற்கு தேவையான அளவு நல்லெண்ணெய் கலந்து வெறும் வயிற்றில் ஒரு வாரம் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் சீராகிவிடும்.

* மூட்டுவலி இருப்பவர்கள், பிஞ்சாக உள்ள பிரண்டையை சுத்தம் செய்து நல்லெண்ணெய் மூழ்கும் அளவுக்கு ஊற்றி வதக்கி, இறுதியில் அந்த எண்ணெயை மூட்டு வலி, முழங்கால் வலி போன்றவைகளுக்கு தேய்த்து வந்தால் வலி தீரும். எலும்புகளையும், மூட்டுகளையும் வலிமையாக்கி விடும். மேலும் எலும்பு முறிவைக் கூட குணப்படுத்தும் வல்லமை படைத்தது.

* உடல் எடை குறைக்க வேண்டுமானால் பிரண்டையை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.

* பிரண்டையை நன்றாக காயவைத்து, அதை நெருப்பில் போட்டு எரித்து, சாம்பலாக்கி வைத்துக் கொண்டு, ஒரு பங்கு சாம்பலுக்கு மூன்று பங்கு தண்ணீர் விட்டு களைத்து, சிறிது நேரம் கழித்து, தெளிந்த நீரை மட்டும் பீங்கான் பாத்திரத்தில் ஊற்றி 10 நாட்கள் வெயிலில் வைத்து, தண்ணீர் வற்றியவுடன் உப்பு மட்டும் தேங்கும். அந்த பிரண்டை உப்பை இரண்டு கிராம் அளவு எடுத்து பால் சேர்த்து சாப்பிட்டு வந்தால் ஊளைச் சதை குறைந்து விடும்.

* பிரண்டை சாறு கொண்டு வாய் கொப்பளித்தால் பல் சம்பந்தமான அனைத்து நோய்களும் குணமாகும்.எளிதாகக் கிடைக்கும் பிரண்டையை உணவில் சேர்த்து, உடல் நலம் பெறுவோம்.

# மேகதாது அணை: கோர்ட்டு தீர்ப்பு அதிர்ச்சி அளிக்கிறது - எடப்பாடி பழனிசாமி

**சென்னை, நவ.14:**

மேகதாது அணை விவகாரத்தை காவிரி ஒழுங்காற்றுக் குழுவில் கர்நாடகம் கோரியபோதே, திமுக அரசு வாய்மூடி மௌனியாக இருந்ததை கண்டித்துள்ளேன் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



மேகதாது அணை கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு அனுமதி அளித்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய நீர் ஆணையத்திடம் வழங்கும் போது, தமிழ்நாடு அரசு, காவிரி மேலாண்மை ஆணையம், ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றிடம் கருத்து கேட்ட பிறகே முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டின் ஜீவநதி காவிரி. காவிரி நதி நீரை நம்பித்தான் டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் இருக்கிறது. மேலும் 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் இருக்கிறது. கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இன்றைய தினம் சுப்ரீம் கோர்ட்டு அனுமதி அளித்துள்ளது மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. தமிழகத்தை பாலைவனமாக்கும் கர்நாடக அரசின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து சுப்ரீம் கோர்ட்டில் கடுமையான வாதங்களை வைக்காமால், இத்தீர்ப்புக்கு வழிவகுத்த திமுக அரசின் முதல்-அமைச்சருக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேகதாதுவில் அணை கட்டப்பட்டால், காவிரியில் உள்ள நம் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படும் என்று ஏற்கனவே அதிமுக சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. காவிரி மேலாண்மை ஆணையத்தின் 28-ஆவது கூட்டம் டெல்லியில் 1.2.2024 அன்று நடைபெற்றபோது கூட்டத்தின் விவாதப் பொருளில் மேகதாது அணை விவகாரத்தை காவிரி ஒழுங்காற்றுக் குழுவில் கர்நாடகம் கோரியபோதே, திமுக அரசு வாய்மூடி மௌனியாக இருந்ததையும் நான் கண்டித்துள்ளேன்.

அனைத்தையும் மீறி, உச்சநீதிமன்றத்தில் இதுபோன்றதொரு தீர்ப்பு வருவதற்கு, கர்நாடகாவில் உள்ள தங்களுடைய குடும்பத் தொழிலை காப்பதற்காக உறுதுணையாக இருந்த திமுக ஆட்சியாளர்களின் செயல் மன்னிக்க முடியாத குற்றமாகும். தமிழகத்தின் உரிமையை மீட்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன்.




## ஒரே நாளில் இருமுறை கூடிய தங்கம் விலை நிலவரம்



**சென்னை, நவ.14:**

ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (நவ.13) ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,400 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.95,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வந்த நிலையில், கடந்த 8-ம் தேதியில் இருந்து தங்கத்தின் விலை உயர்ந்து வந்தது. இதனையொட்டி, சென்னையில் இன்று (நவ.13) காலை 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.200 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,800-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதாவது, பவுனுக்கு ரூ.1,600 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.94,400க்கு விற்பனையானது.

ஆபரணத் தங்கத்தின் விலை இன்று காலை பவுனுக்கு ரூ.1600 கூடிய நிலையில், தற்போது மீண்டும் ரூ.800 கூடியுள்ளது. இதனால், இன்று ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2400 உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.100 உயர்ந்துள்ள நிலையில், ஒரு கிராம் ரூ.11,900 க்கு விற்பனை ஆகுகிறது. மேலும் பவுன் ரூ.95,200 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை காலையில் ரூ.9 உயர்ந்த நிலையில், தற்போது ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.183-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1,83,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# சிதம்பரம் அரசு பொது மருத்துவமனை ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்கு: கடலூர் கலெக்டர் ஆஜராக உத்தரவு

**சென்னை, நவ.14:**

சிதம்பரம் அரசு பொது ருத்துவமனையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்கில், கடலூர் மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி, சிதம்பரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் வரும் 18-ந் தேதி நேரில் ஆஜராக சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தைச் சேர்ந்த 73 வயதான முதியவர் சுப்பிரமணியன் ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், சிதம்பரம் நகராட்சி 4-வது வார்டில் அரசு பொது மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் ஏராளமான பொதுமக்கள் சிகிச்சைக்காக வருகை தருவர். ஆனால், மருத்துவமனைக்கு போதுமான அடிப்படை வசதிகள் இல்லை. ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசரகால வாகனங்களை நிறுத்துவதற்குக்கூட இடமில்லை. அந்த மருத்துவமனை வளாகத்தில் ஏராளமான ஆக்கிரமிப்புகள் உள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினால், மருத்துவமனை வளாகத்துக்கான அடிப்படை கட்டுமானங்களை செய்ய முடியும். இதுதொடர்பாகவும், ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியும் 2023 ஜூன் 7-ந் தேதி முதல் 2024 மார்ச் 8-ந் தேதி வரை நான்கு மனுக்களை மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் தாசில்தார், சிதம்பரம் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி, சிதம்பரம் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அனுப்பினேன். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்புகளையும் அகற்றவில்லை. எனவே, சிதம்பரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்களையும், ஆக்கிரமிப்புகளையும் அகற்ற உத்தரவிட வேண்டும், என்று கூறியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான அரசு பிளீடர் அறிக்கை தாக்கல் செய்தார். அதில், சம்பந்தப்பட்ட மருத்துவமனை வளாகத்தில் 56 ஆக்கிரமிப்புகள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், அவர் வாதிடும்போது, சம்பந்தப்பட்ட இடம் சிதம்பரம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் வருகிறது. எனவே, ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சிதம்பரம் நகராட்சிக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## கோவையில் 3 நாட்கள் நடைபெறும்

## தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு மாநாடு: பிரதமர் மோடி 19-ந்தேதி சிறப்புரை



**கோவை, நவ.14:**

கோவை கொடிசியாவில் 3 நாட்கள் நடைபெறும் தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி வருகிற 19-ந்தேதி வருகிறார்.

கோவையில் தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில் கோவை கொடிசியாவில் வருகிற 19-ந்தேதி இயற்கை விவசாயம் குறித்த மாநாடு தொடங்குகிறது. இந்த மாநாடு 21-ந்தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. இயற்கை விவசாயத்தை வலியுறுத்தியும், அதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்க வலியுறுத்தியும் இந்த மாநாடு நடக்கிறது.

இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பிரதமர் மோடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். மேலும் பிரதமர் மோடி தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த 50 இயற்கை வேளாண் விஞ்ஞானிகளுடன் தனி அரங்கில் கலந்துரையாடுகிறார்.

இந்த மாநாட்டில் தென்னிந்திய மாநிலங்களை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொள்ள உள்ளனர்.

தற்போது விவசாயிகள் பயன்படுத்தும் ரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் உள்ளிட்டவற்றால் மண் மலட்டு தன்மை ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. எனவே இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்கவும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டில் இயற்கை விவசாயம் சார்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பிரதமரிடம் வழங்கப்படும்.

தமிழகத்தில் தற்போது 10 சதவீதம் அளவிற்கு தான் இயற்கை விவசாயம் செய்யப்படுகிறது. இதுதவிர இயற்கை விவசாயத்தில் ஈடுபட்ட பல விவசாயிகள் போதிய மகசூல் கிடைக்காததால் மீண்டும் ரசாயன பயன்பாட்டிற்கு திரும்பும் நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். ணயிக்கும் நடைமுறைக்கு உச்ச விலை வரம்பு (Price Cap) விதிக்கப்பட வேண்டும். தரமற்ற மற்றும் போலி மருந்துகளின் பயன்பாட்டை ஒழிக்க சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

# அதிகபட்ச தண்டனை வழங்கப்பட்டதாக ஆவேசம்: நீதிபதி மீது காலணி வீச கருக்கா வினோத் முயற்சி

**சென்னை, நவ.14:**

சென்னை: ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் தனக்கு அதிகபட்ச தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாக கூறி ரவுடி கருக்கா வினோத் சென்னை 6-வது கூடுதல் நீதிமன்ற நீதிபதி மீது காலணியை வீச முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கிண்டி ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் ரவுடி கருக்கா வினோத்துக்கு பத்தாண்டுகள் சிறை தண்டனை விதித்து பூந்தமல்லி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த நிலையில் தி.நகரில் உள்ள டாஸ்மாக் கடை ஒன்றில் அடிதடியில் ஈடுப்பட்ட கருக்கா வினோத் அந்த கடை மீது பெட்ரோல் குண்டு வீசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவரை ஆஜர்படுத்துவதற்காக போலீசார் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள 6-வது கூடுதல் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தனர்.

நீதிபதி பாண்டியராஜ் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட கருக்கா வினோத் ஆளுநர் மாளிகை வழக்கில் தமக்கு அதிகபட்ச தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாக முழக்கமிட்டுவாறு தனது காலணியை கழட்டி நீதிபதியை நோக்கி வீச முயன்றுள்ளார். உடனடியாக சுதாரித்துக்கொண்ட போலீஸார் கருக்கா வினோத்தை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து நீதிபதி, இது போன்ற குற்றவாளிகளை நேரடியாக நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் காணொளி மூலம் ஆஜர்படுத்துமாறு காவல்துறைக்கு அறிவுறுத்தினார்.

# 500 கோடி ஆண்டுகளுக்கு பிறகு பூமி எங்கே இருக்கும் தெரியுமா? - விஞ்ஞானிகள் தகவல்..

**சிறப்பு செய்தி!**

விஞ்ஞானிகள் ஒரு எச்சரிக்கை கொடுத்திருக்காங்க. அது நம்ம பூமியோட எதிர்காலம் பத்தினது. ஆனா, பயப்பட வேண்டாம், இது நடக்குறதுக்கு இன்னும் 500 கோடி வருஷம் இருக்கு.

1. இப்போ சூரியன் ஏன் நிலையா இருக்கு? (சமநிலை)

ஒரு நட்சத்திரத்தோட கதை, பெரிய தூசி மற்றும் வாயு மேகத்துல ஆரம்பிக்குது. ஈர்ப்பு விசை (Gravity) அந்த மேகத்தை ஒண்ணு சேர்த்துச் சுருக்குறப்போ, அது ரொம்பச் சூடாகி, உள்ளே எரிதல் (அணுக்கரு இணைவு) தொடங்கிடும். அப்படித் தொடங்கி எரிஞ்சு, ஒளிர ஆரம்பிக்கிறப்போதான், அது ஒரு முழு நட்சத்திரமாப் பிறக்குது.

நம்ம சூரியன் இப்போ ரொம்ப அமைதியா, நிலையா இருக்கு. அதுக்குக் காரணம்:

உள்நோக்கி இழுக்கும் விசை: சூரியனோட ஈர்ப்பு விசை (Gravity) அதை உள்ளே இழுத்துச் சுருங்க வைக்குது.

வெளித் தள்ளும் விசை: சூரியனோட மையத்துல ஹைட்ரஜன் எரிபொருள் வெடிச்சு, வெளியே ஒரு அழுத்தத்தைக் கொடுக்குது.

இந்த இரண்டுக்கும் நடுவுல சமநிலை இருக்குறதாலதான், சூரியன் ஒரே சைஸ்ல நிலையா இருக்கு. ஆனா, இந்தச் சமநிலை ஒருநாள் மாறும்.

**2. சூரியன் பலூன் மாதிரி வீங்க ஆரம்பிக்கும் !:** சுமார் 500 கோடி வருஷத்துல, சூரியனுக்குள்ள இருக்கிற ஹைட்ரஜன் எரிபொருள் (Nuclear Fuel) தீர்ந்துடும்.

சமநிலை தவறும்: ஹைட்ரஜன் தீர்ந்ததும், சூரியனோட மையப்பகுதி உள்ளே சுருங்க ஆரம்பிக்கும்.

இந்தச் சுருக்கத்தால, மையத்துல இருக்கிற ஹீலியம் சூடாகி, கார்பனா எரிய (Fuse) ஆரம்பிக்கும். இந்த அதீத சக்திதான், சூரியனோட வெளி



அடுக்குகளைப் பிரமாண்டமா வீங்க வைக்கும்.

நீண்ட எரிதல் காலம்: ஹைட்ரஜனை எரிப்பதைவிட, ஹீலியம் எரியும் கட்டத்தில் நட்சத்திரங்கள் சுமார் 10 முதல் 20 பில்லியன் ஆண்டுகள் வரை தொடர்ந்து ஒளிரும்.

சிவப்பு ராட்சசன்: இந்த மாற்றம் காரணமாகச் சூரியன் இப்போ இருக்குறதைவிட 100 முதல் 1000 மடங்கு வரை பெருசாகி, ஒரு 'சிவப்பு ராட்சசக் கோளமா' (Red Giant) மாறும்.

முதல் பலி: இந்த விரிவாக்கத்துல, சூரியனுக்கு ரொம்ப பக்கத்துல இருக்குற புதன், வெள்ளி ஆகிய இரண்டு கோள்களையும் அது முழுசா விழுங்கிவிடும்.

**3. நட்சத்திரங்களின் இறுதி முடிவுஎன்ன?:** சூரியன் தன் வாழ்வின் கடைசி அத்தியாயமான 'முக்கிய வரிசைக்குப் பிந்தைய கட்டத்தை' (Post-Main Sequence phase) அடையும்போது, அதன் அளவைப் பொறுத்து அது சிவப்பு குள்ளன் (Red Dwarf), வெள்ளைக் குள்ளன் (White Dwarf), சிவப்பு ராட்சசன் (Red Giant) அல்லது சில சமயம் நியூட்ரான் நட்சத்திரமாகக்கூட (Neutron Star) வெடித்துச் சிதறும்.

**4. பூமிக்கு வரும் இரண்டு பெரிய ஆபத்துகள்:** சூரியன் இப்படி ராட்சசனா மாறின பிறகு, நம்ம பூமிக்கு என்ன ஆகும்னு லண்டன், வார்விக் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சொல்றாங்க:

**ஆபத்து 1:** சூரியன் இழுக்கும் (அலை விசை): ராப்பகல் சுழலும் சந்திரன், கடல்ல அலைகளை உருவாக்குற மாதிரி, இந்த வீங்கின ராட்சச சூரியன், பூமியையும் தன்னோட ஈர்ப்பு விசைக்குள் (Pulling Force) அதிகமா இழுக்கும்.

டாக்டர் எட்வர்ட் பிரையண்ட் தலைமையிலான ஆய்வாளர்கள், இந்த இழுவிசை (Tidal Forces) காரணமா, பூமி மெதுவா சூரியனை நோக்கிப்போய், கடைசியில ஒண்ணு சூரியனுக்குள்ள விழுந்துடும், இல்லன்னா உடைஞ்சு சிதறிடும்னு சொல்றாங்க.

**ஆபத்து 2: தீயில் கருகிப் போகும்:** பூமி எப்படியோ தப்பிச்சு, சூரியனுக்குள்ள விழாம சுத்தி வந்தாலும், இங்க வாழவே முடியாது.

இந்த ராட்சச சூரியனோட தீவிரமான வெப்பம், பூமியில் இருக்கிற தண்ணி எல்லாத்தையும் ஆவியாக்கிடும். நம்ம வளிமண்டலம் முழுவதும் உரித்தெடுக்கப்படும்.

முடிவுல, உயிர்கள் வாழத் தகுதியற்ற, எரிந்த பாறைக் கோளமாகத்தான் பூமி மிஞ்சும். மனிதர்களோ, வேற எந்த உயிரினமோ அங்க இருக்க வாய்ப்பே இல்லை.

**ஆய்வு கண்டுபிடித்தது என்ன? (அதிர்ச்சித் தகவல்)**

இந்த ஆய்வை நடத்திய விஞ்ஞானிகள், 15,000-க்கும் அதிகமான கிரகங்களின் அறிகுறிகளைத் தேடினார்கள்.

மொத்த நட்சத்திரங்களில் சுமார் 0.28% மட்டுமே பெரிய கிரகங்களைக் கொண்டிருந்தன.

130 பெரிய கிரகங்களை அவர்கள் அடையாளம் கண்டனர். இதில் 33 கிரகங்கள் அதுவரை கண்டுபிடிக்கப்படாதவை ஆகும்!

இந்த ராட்சச நட்சத்திரங்களைச் சுற்றி, பெரிய கிரகங்கள் மிக மிகக் குறைவாக இருப்பதைக் கண்டறிந்ததன் மூலம், அந்த நட்சத்திரங்கள் ஏற்கெனவே தங்கள் அருகில் உள்ள கிரகங்களை விழுங்கிவிட்டன என்பதை விஞ்ஞானிகள் உறுதிசெய்தனர். இதே கதிதான் பூமிக்கும் நேரும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆதாரங்கள்: இந்தத் தகவல்கள் சுமார் அரை மில்லியன் நட்சத்திரங்களைப் பார்த்து விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வின் அடிப்படையில் 'Monthly Notices of the Royal Astronomical Society' என்ற அறிவியல் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

# " சர்வேஷ் !"



தந்தையின் உரத்த குரலில் பயந்து போய் அறைக்குள் இருந்து வெளிப்படான் சர்வேஷ். அடுக்களைக்குள் வேலையாக இருந்த சர்வேஷின் அம்மா கல்யாணியும் என்னவோ ஏதோவென்ற கவலையுடன் வெளிப்பட்டாள். கையில் ப்ரோக்ரஸ் கார்டை வைத்திருந்த கோபால் மகனை எரிச்சல் கலந்த கோபத்துடன் பார்த்தான்.

" ஏண்டா...என்னடா மார்க் வாங்கியிருக்கே ? கணக்குல 80 , இங்கிலீஷ்ல 76 , தமிழ்ல 72... மத்த சப்ஜட்ல 70 , 71 ன்னு இவ்ளோதான் மார்க் வாங்க முடியுமா ?" சீறி விழுந்தான்.

" கணக்குல 100 மார்க் வாங்கணும்னு நினைச்சு எல்லா கேள்விகளுக்கும் ஒழுங்காதான்பா விடை எழுதினேன்..

" ஓஹோநினைச்சியா... நினைப்புதான் பொழைப்பை கெடுக்குது ! சரி மத்த சப்ஜட்கள்ல எப்படி ?"

" ஆனாலும்..." மெல்ல கல்யாணி இழுக்க கோபத்துடன் அவளை நோக்கித் திரும்பிய கோபால் , " உன் திருவாயை மூடிக்கிறயா ?" என்றதும் கப் சிப்பானாள் கல்யாணி.

" நீ சொல்லுடா !"

" இங்கிலீஷ்ல 95 மார்க் வாங்கணு ம்னு எதிர்பார்த்தேன் "

" எதிர்பார்ப்பில மண் விழுந்ததா ?"

" ஆனாலும்.." மீண்டும் கல்யாணியின் குரல் இடைமறிக்க கோபால் நெற்றிக் கண்ணைத் திறந்தான். உடனே வாயைமூடிக்கொண்டாள் கல்யாணி.

" தமிழ்ல 90 மார்க் நிச்சயம் வரும்னு நம்பிக்கிட்டிருந்தேன். "

" நம்பிக்கை பொய்த்துப் போச்சு. அப்படித்தானே ! " என்ற கோபால் தொடர்ந்தான்."

டேய் ! நினைப்பு , எதிர்பார்ப்பு , நம்பிக்கை இதெல்லாம் தேவைதான். ஆனால்செயல்ல காட்ற உத்வேகம் இருக்கணும். அந்த உத்வேகம் இருந்தால்தான் நீ சாதி க்க முடியும் !" என்றவன் மனைவியை நோக்கித் திரும்பினான். " நீ என்ன வோ சொல்ல வந்தியே. இப்போச் சொல்லு !"

" ஆனாலும் நம்ம பிள்ளையாண்டான் முதல் ராங்க் வாங்கியிருக்கான் பாருங்கப்ராக்ரஸ் கார்டில !" மனைவி சொன்னதும் வியப்புற்ற கோபால் கார்டை பார்க்க கீழே ஃபர்ஸ்ட் ராங்க் என்ற குறிப்பு இருந்தது.

" என்னது, இந்த மார்க்குக்கு முதல் ராங்க்கா ! " சிரித்தவன் , ' அப்போ செகண்ட் ராங்க், தேர்டு ராங்க் வாங்கினவங்களோட மார்க் என்ன அழகில இருக்கும் !' எண்ணம் தோன்ற விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான் !



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# திருமதி திருமிகுவானாள்

ஜானுவை பெண்ணியவாதின்னு ஒட்டுமொத்தமா முத்திரை குத்திட முடியாது ,ஏன்னா சில ஆண்கள் செய்யுற சில தப்பான பைத்தியக்கார செயலை ஆணுக்கு நிகர் பெண்ணும் சமம்னு செய்யுற சில அரைகிறுக்கு பெண்ணியவாதியோட அவளை நிச்சயமா ஒப்பிட முடியாது ..ஆம்பளை தண்ணி அடிச்சா,சிகரெட் குடிச்சா அதை பெண்ணும் செஞ்சா தான் பெண்ணியம் என்பது அர்த்தமில்லை என்பது அவள் கருத்து..நாகரீகம்னா உடம்பு தெரியிற மாதிரி லெக்கிங்ஸ் போட்டுக்கிட்டு திரியிறது எல்லாம் சுதந்திரம் ஆகாது என்பதை உணர்ந்தவள் ..வெறும் முப்பத்தி மூன்று சதவிகிதம் கொடுத்துப்புட்டு ஆணும் பெண்ணும் சமம்னு சொல்லுற வெத்து வேட்டு பசங்களை மதிக்காதவளும் கூட ... கல்வி -வேலை -யாரையும் சார்ந்து இல்லாமல் இருத்தல் (அண்ணன் -தம்பி ,தந்தை,கணவன் உள்பட ) தன் முடிவை தன்னிச்சையாக தானே எடுப்பது போன்ற நடவடிக்கையை என்று ஒரு பெண் சுயமாக செய்கிறாளோ அன்று தான் அவள் முழுமையான சுதந்திரத்தை பெற்று இருக்கிறாள் என்று நம்புபவள்...கற்பு பெண்ணை அடையாளப்படுத்தும் குறிகளில் குறியீடு இல்லை என்று உரக்கச் சொல்பவள் ..ஆண் -பெண் ஒழுக்கம் தான் கற்பு ..மனத்தூய்மை தான் கற்பு என்று ஜான்சிராணியாய் பல சபைகளில் தைரியமாய் பெண் சிங்கம் போல சொல்பவள் அவள் ஆயிரத்தில் ஒருத்தி அல்ல ,கோடியில் ஒருத்தி ...எப்போதும் சுடிதார் தான் உடுத்துவாள் அது பார்ப்பவர் கை எடுத்து கும்பிடும் வகையில் இருக்கும் ஆனால் அவள் ஆடையிலும் ஒரு ஸ்டைல் இருக்கும் ,மிடுக்கு இருக்கும் ..அவள் சுருள் முடி நெற்றியின் இரு புறமும் தோரணமாய் அழகாய் காட்சியளிக்கும் ...பவுடர் முகத்தில் பூசியிருந்தாலும் அது அடுத்தவரை அடிக்காத விதத்தில் அவளுக்கு பொருத்தமாய் இருக்கும் ... ஜானு அழகில் மட்டுமல்ல பேச்சிலும் அடுத்தவர்களை கவரக் கூடியவள் ,சிறந்த கள போராளியும் கூட,அவள் பேசினால் சபைகளில் அனல் பறக்கும் ...அவள் பேச்சு பல மக்களை கவர்ந்தது ..தன் பேச்சு மூலம் இந்த சமூகத்தில் பல நல்ல விஷயங்களை விதைத்தாள் . அவள் பேச்சில் மயங்கி போன கோடான கோடி இரசிகர்களில் ஒருவன் தான் ராம்..ரெண்டு பேரும் வெவ்வேறு சாதி என்றாலும் ,இவ்விருவரும் முற்போக்கு சிந்தனை உடையவர்கள் என்பதாலும் ,இருவரின் குணங்களும் ஒத்து போனதால் ராமையே ஜானு திருமணம் செய்து கொண்டாள்.. பொது மேடையில் மட்டுமல்லாது சொந்த வீட்டிலும் ,சொந்த வாழ்க்கையிலும் ஆண் -பெண் சமம் என்பதை நிரூபித்து காட்டியவள் ..கணவன் -மனைவி இருவரும் வேலைக்கு செல்வதால் ,வேலை முடிந்து வீட்டிற்கு வந்தால் கூட சமையல் வேலைகளிலும் இருவரும் சேர்ந்தே தான் செய்தனர் . சாப்பிட்டு முடித்த பாத்திரத்துக்கு அவள் சோப்பு போட்டு கொடுத்தால் அவன் கழுவி வைக்க வேண்டும் ,இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் எல்லா வேலைகளிலும் பகிர்ந்து செய்தனர் அதே சமயத்தில் கணவனுக்கு உடல் நிலை சரியில்லாத சமயத்தில் எல்லா வேலைகளையும் இவள் செய்வாள் ,இவளுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தால் அன்றைய தினம் எல்லா வேலைகளையும் அவன் செய்வான் ..இப்படி எல்லா வேலைகளையும் ஒருத்தருக்கு ஒருத்தர் பகிர்ந்து கொண்டு செய்தனர் .

ஒரு நாள் ஜானு பேச இருந்த நிகழ்ச்சியின் அழைப்பிதழில் திருமதி ஜானு ராம் என்று குறிப்பிட்டு இருந்ததை கண்டு கோபப்பட்டாள்,உடனே நிகழ்ச்சி அமைப்பாளருக்கு போன் செய்தாள். இங்க பாருங்க சார் ,எனக்கு கருத்து தெரிஞ்ச நாளிலிருந்தே என் அப்பாவின் பெயரை கூட இனிசியலாக போட்டதில்லை ,என்னை பத்து மாதம் சுமந்த தாயின் பெயரை தான் இனிசியலாக போடுவேன் ,எந்த காலத்திலும் ஒரு பெண் ஒரு ஆணுக்கு கட்டுப்பட்டவளா இருக்க கூடாதுன்னு நினைக்கிறவ இந்த ஜானு ,அப்பா பெயரையே இனிஷியலா போட மறுத்த பொண்ணுங்க ,இப்ப இடையில வந்த புருஷன் பெயரை என் பெயரோட போட்டா ஒத்துக்குவேனா ?? எங்கே ஒரு ஆணை கல்யாணத்துக்கு அப்புறம் பொண்டாட்டி பேரை சேர்த்து எழுத சொல்லுங்க பாப்போம் ??அது என்னங்க ஒரு ஆண் மட்டும் எப்போதும் திரு ??அதுவே



ஒரு பொண்ணா இருந்தா திருமணத்துக்கு முன்னாடி செல்வி

,திருமணத்துக்கு அப்புறம் திருமதி ??எங்களுக்கு கல்யாணம் ஆயிடிச்சு ,ஆகலைன்னு எதுக்கு வெளிப்படுத்துறீங்க ?? ஒரு ஆண் கல்யாணத்துக்கு அப்புறம் கழுத்துல தாலி கட்டிட்டு போக சொல்லுங்க பாப்போம் ,முடியாதுல அத போல தான் பொண்ணுங்களும் சில விசயத்துல சுயத்தை உணரணும் ?? இங்கே ஆணுக்கு ஒரு நீதி ,பொண்ணுக்கு ஒரு நீதியா இருக்கு ,இங்கே எல்லாமே மாறனும்..மாறுற வரைக்கும் என்னாலே முடிஞ்ச வரைக்கும் நிச்சயமா நான் போராடுவேன் .. நான் பேசுறது உங்களுக்கு திமிரா ,பிடிவாத தனமா தெரியலாம் ஆனா நான் செய்யுறது ஆணாதிக்கத்துக்கு சவுக்கடியா இருக்கும் ..என்னை கேட்காம அழைப்பிதழில் அப்படி பெயர் போட்டிருக்க கூடாது ..நான் நிகழ்ச்சிக்கு வரணும்னா திருமதி ஜானு ராமை தூக்கிட்டு திருமிகு ஜானுன்னு போடுங்க என்று சொல்லிட்டு போனை கோபத்தோடு வைத்தாள் ஜானு .. ஜானு போட்ட போடில் நிகழ்ச்சி அமைப்பாளர் மிரண்டு போனார் ,வேறு வழியில்லாமல் பர்மிசன் இல்லாமல் அப்படி பெயர் போட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரை திட்டி விட்டு வேறு அழைப்பிதழ் அடிக்க சொன்னார் அமைப்பாளர் . நிகழ்ச்சி மட்டும் நல்லபடியா முடியட்டும் ,அந்த பொண்ணுக்கு கொடுக்கிற ஊதியத்துல திரும்ப அச்சடிச்ச அழைப்பிதழ் காசை கட் பண்ணிட்டு தான் கொடுக்கணும் என்று மனதுக்குள் முடிவெடுத்தார் நிகழ்ச்சி அமைப்பாளர் அண்ணாச்சி ஆவுடையப்பன் ..ஆம்பளைன்னா சும்மாவா என தனக்கு தானே மார் தட்டி கொண்டார் ... அன்றைய தினம் நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது ,ஜானு பேசிய பேச்சில் தான் ஒட்டு மொத்த கூட்டமும் களைக்கட்டியது.என்னம்மா பேசுறா ,சூப்பரா இருக்குடி ,பொண்ணுன்னா இவ தான் பொண்ணு ,இவள மாதிரியெல்லாம் நம்மளாலே வீட்ல கூட பேச முடியாது ,இவளை மாதிரி ஊர்ல நாலு பேர் இருந்தா போதும் ,நாடும் திருந்திடும் ,இந்த கேடுகெட்ட சில ஆணாதிக்க திமிர் பிடிச்ச ஆம்பளைகளும் திருந்திடுவானுங்கன்னு கூட்டத்தில் இரு பெண்கள் ஜானுவை பற்றி பெருமை பட பேசி கொண்டனர் .. நிகழ்ச்சி முடிந்ததும் ஆவுடையப்பனை பார்க்க ஜானு வந்தாள்."அன்றைக்கு அது மாதிரி கொஞ்சம் கோபமா பேசினதுக்கு மன்னிச்சிடுங்க சார் ,பெண்களுக்கும் சுயம் இருக்கு ,அவ யாரையும் சார்ந்து இருக்க கூடாதுன்னு பேச்சுல மட்டுமில்லை ,வாழ்க்கையிலும் இருக்க கூடாதுன்னு நினைக்குறவ அதனாலே தான் அன்றைக்கு நிகழ்ச்சி அழைப்பிதழ்ல மாற்றி அடிக்க சொன்னேன் ,என்னதான் நான் செஞ்ச விஷயம் கரெக்ட்டுன்னாலும் ,அழைப்பிதழ் மறு அச்சு செஞ்சதாலே உங்களுக்கு கொஞ்சம் செலவு ஆகியிருக்கும் ,நான் வச்ச செலவால இந்த நிகழ்ச்சிக்கு எனக்கு சம்பளம் எதுவும் தர வேண்டாம் என்றாள் ஜானு ... வாழ்க்கையில் முதன் முறையாக அண்ணாச்சி ஆவுடையப்பனின் ஆணாதிக்க திமிர் தோற்று போயிருந்தது ..

-நௌஷாத் கான் .லி

# ஆன்மிக களஞ்சியம்

# கழறிற்றறிவார் நாயனார் வரலாறு

தொடர்-36





-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

சேரமான் பெருமான் சேர நாட்டு மன்னன். மகோதை என்னும் ஊரில் இருந்துகொண்டு கி.பி. 871 ஆண்டுகளைச் சார்ந்து அரசாண்டு வந்தார். பெருமாக்கோதையார் என்ற இயற்பெயரும் கழறிற்றிவார் என்ற சிறப்புப் பெயரும் பெற்ற இவர் 63 நாயன்மார்களில் ஒருவராகச் சேர்க்கப்பட்டபோது சேரமான் பெருமான் நாயனார் என வழங்கப்பட்டார். இவர் சிவ பூசையின்போது தில்லை நடராசப் பெருமானின் மணியோசையைக் கேட்கும் பேறு பெற்றிருந்தார் என்றும், அதனால் கழறிற்று அறிவார் எனப் போற்றப்பட்டார்.

சேரமான் பெருமாள் சங்கரநாத சேர அரசரின் மகன் என்றும், வேறு சிலர் செங்கோற் பொறையன் என்னும் சேரனின் மகன் என்றும் கூறுவார். பெரிய புராணச் சரிதப்படி இவர் திருவஞ்சைக்களத்தில் சேரர் குடியிலே பிறந்தவர். கொடுங்கோளூர் அரசன் செங்கோற் பொறையன், ஆட்சி துறந்து தவம் புரிய காட்டிற்குச் சென்றான். அமைச்சர்களும் அறிஞர்களும் மாக்கோதையாரிடம் வந்து அரசை ஏற்று நடத்துமாறு கூறினர். அரசாட்சியை விரும்பாத மாக்கோதையார், திருவஞ்சைக்களம் ஆலயம் சென்று இறைவனிடம் முறையிட்டார். இறைவனும் அவருக்கு அருள் செய்து, விலங்குகள் பேசும் மொழியை அறிந்து கொள்ளும் ஆற்றலைத் தந்து அரசாட்சி புரிய ஆணையிட்டான். அதுமுதல் சேர நாட்டிற்கு மன்னனாக முடிசூட்டிக் கொண்டு, சேரமான் பெருமாள் என்னும் பெயரில் அவர் ஆட்சி புரிந்தார். விலங்குகள் பேசும் மொழியை உணரும் ஆற்றல் பெற்றதால் அவர் ‘கழறிற்று அறிவார்’ என்று அழைக்கப்பட்டார்.

ஒரு நாள் சேரமான் பெருமாள் நகர்வலம் வந்தபோது, எதிரே சலவைத் தொழிலாளி ஒருவர் வந்தார். அவர், உவர் மண்ணைத் தன் தலையில் சுமந்தவாறு வந்துகொண்டிருந்தார். அது மழையால் அவர் உடல் மேல் வழிந்து, காய்ந்து, திருநீறு பூசியிருக்கும் கோலத்தில் காட்சி தந்தது. அவரைக் கண்ட சேரமான், உடல் முழுதும் நீறு பூசிய சிவனடியார் என்றேண்ணி உடன் யானையிலிருந்து கீழிறங்கி அவர் பாதம் பணிந்து வணங்கினார். உடனே பதறி விலகிய அந்த வண்ணார், ‘அடியேன் அடி வண்ணான்’ என்று சொன்னார். சேரமானும் ‘அடியேன் அடிச்சேரன். நீங்கள் சிவனின் திருநீற்றுக் கோலத்தை எனக்கு நினைவு படுத்தினீர்கள். வருந்தாது செல்லுங்கள்’ என்று சொன்னார்.

சேரமான் பெருமாள் சுந்தரருக்கு தோழர் ஆனார். சேரமான் பெருமாள் நீராடிக் கொண்டிருக்கும் போது சுந்தரர் திருவஞ்சைக்களத் திருக்கோயிலையடைந்து, சிவபெருமானை அடையும் தனது விருப்பத்தை எடுத்துக் காட்டும் வகையில் ‘தலைக்குத் தலைமாலை’ என்ற திருப்பதிகத்தைப் பாடினார். அது கேட்டு மகிழ்ந்த சிவபெருமான், சுந்தரரை அழைத்துவருமாறு திருக்கயிலையில் இருந்து வெள்ளையானையுடன் தேவர்களை அனுப்பி வைத்தார். சுந்தரரும் அதன்படி வெள்ளை யானையில் ஏறி கயிலைக்குப் புறப்பட்டார்.


இதனை தமது ஆற்றலால் உணர்ந்து கொண்ட சேரமான் பெருமாள் நாயனார், தமது குதிரையின் மேல் ஏறி திருவஞ்சைக்களத்தை அடைந்தார். சுந்தரர் யானையின் மீதேறி விண்ணில் செல்வதைக் கண்டவர், தமது குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதினார். உடன் மேலெழுந்த குதிரை வானில் சென்று, யானையை வலம் வந்து, அதற்கு முன்னே சென்றது. சேரமான் திருக்கயிலையை அடைந்து ‘திருக்கயிலாய ஞான உலா’ பாடி சிவபெருமானைத் துதித்தார். இறைவன் அதைக் கேட்டு மகிழ்ந்து ‘நீ சிவகணத்தோடு ஒருவனாகி இங்கே இருப்பாயாக!’ என்று அருள் பாலித்தார். சேரமான் பெருமாள் நாயனார் என்னும் கழறிற்றறிவார் நாயனார் சிவகணங்களுள் ஒருவரானார்.

- தொடரும்

# நேரு மாமாவும் குழந்தைகள் தினமும்

பண்டிட் ஜவர்ஹலால் 1889, நவம்பர் 14ம் தேதி அலகாபாத்தில் நேரு பிறந்தார்.அவருடைய சிறு வயதில் அவர் வீட்டிலிருந்தே கல்வி பயின்றார். தனது 15 வது வயதில் இங்கிலாந்து சென்ற அவர், ஹரோவின் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை அறிவியல் கல்வி பயின்றார். பிறகு அவருக்கு பார்-ல் இணையுமாறு இன்னர் டெம்பிலில் இருந்து அழைப்பு வந்தது. 1912ல் இந்தியாவிற்கு திரும்பிய அவர் நேரடியாக அரசியலில் நுழைந்தார். மாணவராக இருந்த காலத்திலிருந்தே அயல் நாட்டின் பிடியில் இருந்து பாதிக்கப்பட்டு விடுதலைக்காக போராடுகின்ற தேசங்கள் மீது அவர் ஆர்வம் காட்டி வந்தார். அயர்லாந்தின் சின் பியன் இயக்கத்தில் அவர் அதிக ஆர்வம் காட்டினார். இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் அவர் ஈர்க்கப்பட்டு அதில் இணைந்து போராடினார்.

1912ல் பங்கிபோர் காங்கிரஸ் மாநாட்டில் அவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.1919ல் அலகாபாத்தில் ஹோம் ரூல் லீக்கின் செயலர் ஆனார். 1916ல் மகாத்மா காந்தியை முதன் முதலில் அவர் சந்தித்தார். முதல் சந்திப்பின் போதே அவர் மகாத்மா காந்தியால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டார். 1920-ல் உத்திர பிரதேசத்தின் பிரதாப்கர் மாவட்டத்தில் முதல் கிஸ்ஸான் யாத்திரையை மேற்கொண்டார். 1920 முதல் 1922 வரை ஒத்துழையாமை இயக்கத்திற்காக அவர் இரண்டு முறை சிறையில்



அடைக்கப்பட்டார்.

பண்டிட் நேரு 1923 செப்டம்பர் மாதம், அனைத்து இந்திய காங்கிரஸ் குழுவின் பொது செயலரானார். 1926ல் இத்தாலி, சுவிஸ்சர்லாந்த், இங்கிலாந்த், பெல்ஜியம், ஜெர்மனி, ரஷியா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். இந்திய தேசிய காங்கிரஸின் பிரதிநிதியாக பெல்ஜியம் புருசல் பகுதியில் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட நாடுகளின் கூட்டத்தில் அவர் பங்கேற்றார். 1927 ல் மாஸ்கோவில் நடைபெற்ற அக்டோபர் சோஷியலிஸ்ட் புரட்சியின் 10வது ஆண்டு விழாவில் அவர் கலந்துக்கொண்டார். 1926-ல் மெட்ராஸ் காங்கிரஸ் மாநாட்டில் ஈடுபடுவதற்கு விடுதலை போராட்டத்தில் நேரு தூண்டுகோலாக இருந்தார். 1928ல் சைமன் கமிஷனுக்கு எதிராக நடைபெற்ற ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கியதால் காவலர்கள் அவர் மீது தடியடி நடத்தினார். 1928, ஆகஸ்ட் 29 அவர் அனைத்து கட்சி மாநாட்டில் கலந்துக்கொண்டார். அவர் தந்தை திரு. மோதிலால் நேருவின் பெயரில் கொண்டுவரப்பட்ட இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நேருவின் அறிக்கையில் முக்கிய பங்குவகித்தார். அதே ஆண்டில், இந்தியாவுடனான ஆங்கிலேயரின் இணைப்பை துண்டித்து "சுதந்திர இந்தியா" என்ற அமைப்பை அவர் நிறுவினார். பின்பு அதன் பொது செயலராகவும் பொறுப்பேற்றார்.

நாட்டிற்கு சுதந்திரம் பெருவதையே நோக்கமாக கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் லாகூர் அவையின் 1929ம் ஆண்டு தலைவராக நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். சத்தியாகிரகம் மற்றும் காங்கிரசால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு இயக்கங்களில் பங்கேற்றதற்காக 1930 முதல் 1935 அவர் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். 1935, பிப்ரவரி 14ம் தேதி அல்மோரா சிறையில் அவர் தனது சுயசரிதையை எழுதி முடித்தார். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டபின் 1936, பிப்ரவரி மார்ச் மாதம் லண்டனில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட அவரது மனைவியை சந்திக்க சென்றார். நாட்டில் உள்நாட்டு போர் ஆரம்ப நிலையிலிருந்தபோது அவர் ஸ்பெயினுக்கு பயணம் மேற்கொண்டார். இரண்டாவது உலகப் போர் துவங்கும் முன் அவர் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டார்.

பண்டிட் நேரு, அக்டோபர் 31, 1940ல் இந்தியாவை வலுகட்டாயமாக உலக போரில் பங்கேற்க வைப்பதை கண்டித்து தனிநபராக அவர் சத்தியாகிரகம் மேற்கொண்டபோது கைதுசெய்யப்பட்டார். 1941 டிசம்பரில் மற்ற தலைவர்களுடன் இவரும் விடுதலை செய்யப்பட்டார். ஆகஸ்ட் 7, 1942 ல் வரலாறு சிறப்புமிக்க "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திற்கான தீர்மானத்தை மும்பையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழுவில் முன்மொழிந்தார். ஆகஸ்ட் 8, 1942ல் மற்ற தலைவர்களுடன் இவரும் கைது செய்யப்பட்டு அகமத் நகர் கோட்டைக்கு அழைத்து செல்லப்பட்டார். இதுவே இவருடைய இறுதியான மற்றும் நீண்டகால சிறைவாசமாகும். இதே போன்று இவர் 9 முறை கைது செய்யப்பட்டார். ஜனவரி 1945 ல் அவர் விடுதலைச் செய்யப்பட்ட பிறகு துரோகம் இழைக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கும் இந்திய தேசிய இராணுவ படையினருக்கும் அவர் சட்ட ரீதியாக கையாள ஏற்பாடு செய்தார். மார்ச் 1946ல் பண்டிட் நேரு தெற்கு ஆசிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். ஜூலை 6, 1946 நான்காவது முறை காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1951 முதல் 1954 வரை மீண்டும் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும்நவம்பர் 14 அன்று குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது., இது இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளை நினைவுகூரும் ஒரு நாளாகும். உலகளவில், உலக குழந்தைகள் தினம் நவம்பர் 20 அன்று கொண்டாடப்படுகிறது, இது ஐக்கிய நாடுகளின் குழந்தைகளின் உரிமைகள் பிரகடனத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

இந்தியாவில் குழந்தைகள் தினம்

தேதி: நவம்பர் 14

காரணம்: இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு குழந்தைகள் மீது கொண்டிருந்த அன்பின் நினைவாக, அவரது பிறந்தநாளைக் கொண்டாடுவது.

கொண்டாட்டம்: குழந்தைகளின் உரிமைகள், கல்வி மற்றும் நலன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தினத்தின் நோக்கமாகும்.

தினம் ஒரு தலைவர்கள்

# அன்னி வூட் பெசண்ட் வரலாறு

அன்னி வூட் பெசண்ட் அக்டோபர் 1, 1847 செப்டம்பர் 20, 1933) என்பவர் பெண் விடுதலைக்காகப் போராடியவர், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் ஆவார்.

வாழ்க்கைக் குறிப்பு

ஒரு சாதாரண ஐரியக் குடும்பத்தில் லண்டனில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தவர் அன்னி வூட். தந்தை வில்லியம் பைஜ்வூட் அயர்லாந்தில் பிறந்து லண்டனில் குடியேறியவர். அன்னி ஐந்து வயதாக இருக்கும் போது தந்தையை இழந்தார். அன்னை ஹரோ நகரில் ஆண்கள் பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். அன்னி தனது 19வது வயதில் 1867 ஆம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயது மத குருவை மணந்தார். டிக்பி, மேபேல் என்ற இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். கணவருடன் இணைந்து வாழ்வது அன்னிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பெண்ணுக்கு ஏற்பட்ட நோயினால் மனமுடைந்து போன அன்னி நாத்திகரானார். கணவர் பெசண்ட், மனைவியை கோயிலுக்குச் செல்லும் படியும், கிறிஸ்தவ மதக் கொள்கைக்கு ஏற்ப நடக்கும் படியும் வற்புறுத்தினார். சுதந்திர மனப்போக்குக் கொண்ட அன்னி கணவரிடம் இருந்து 1873 இல் பிரிந்து வாழ முடிவெடுத்தார்.

1880களில் அன்னி பெசண்ட் கணவரிடம் இருந்து பிரிந்த பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதத் தொடங்கினார் அன்னி. சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் எழுதினார். அன்னியின் அரசியல் போக்குகணவரிடம் இருந்து அவரை மேலும் பிரித்தது. பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். இறுதியாக கணவன், குழந்தைகளை விட்டுப் பிரிந்து லண்டனுக்குத் திரும்பினார். அதிகாரபூர்வமாகப் பிரிவினை கிடைக்கவில்லை. இரண்டு குழந்தைகளும் பிராங்கின் பொறுப்பிலேயே இருந்தனர்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப் படிப்பைத் தொடர்ந்தார். மூடப் பழக்கவழக்கங்களுக்கெதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.

சீர்திருத்தவாதி

"நியூமால் தூசியன் அமைப்பு" என்ற சீர்திருத்தச் சங்கத்துக்குத் தலைவியானார் அன்னி பெசண்ட். நாடாளுமன்ற அங்கத்தினர்கள் கடவுளின் பெயரால் சத்தியம் செய்யத் தேவையில்லை என்று வற்புறுத்தி கூட்டங்களில் பேசினார். "லிங்க்" என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி, இந்தியாவிலும் அயர்லாந்திலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக எழுதினார். பெண்கள் விடுதலை, தொழிலாளர் உரிமைகள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற பலவற்றிலும் தனது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

பிரம்மஞான சங்கம்

THE SECRET DOCTRINE என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் 1889 ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திக வாதத்தைக் கைவிட்டு ஆத்திகரானார். பிளேவட்ஸ்கியின் பிரும்மஞான சங்கத்தில் உறுப்பினரானார். இதனை அடுத்து மார்க்சியவாதிகளுடன் தனக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். 1891 இல் பிளேவட்ஸ்கி இறந்ததை அடுத்து பிரும்மஞானத்தில் ஒரு முக்கிய புள்ளியானார். அன்னி பெசண்ட். அச்சபையின் சார்பில் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சியில் கலந்து கொண்டார்.

1893 ஆம் ஆண்டில் பிரும்மஞான சபையின் உறுப்பினராக முதற் தடவையாக இந்தியா வந்தார். சபையின் அமெரிக்கக் கிளையின் தலைவரான வில்லியம் ஜட்ஜ் என்பவருடன் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து அமெரிக்கக் கிளை தனியாகப் பிரிந்தது. மீதமிருந்த சபை ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்பவராலும் அன்னி பெசண்டினாலும் தலைமை வகிக்கப்பட்டது.






இந்தியாவில் அன்னி பெசண்ட்

இந்தியா வந்த அன்னி பெசண்ட், சென்னையில் அடையாறில் பிரும்மஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்துபல நூல்களை எழுதினார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படி பெற்றார். இந்திய உடை தரித்து இந்துவாகவே வாழலானார்.



இந்திய விடுதலைப் போராட்டத்தில் இணைவு

அன்னி இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவராதலால், ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக காமன் வீல்' என்ற வாரப் பத்திரிகையை 1914 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1915 சூன் 14 இல் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன் மூலம் அவர் அரசியலில் இழுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைமைப் பதவி

1907-ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து, லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னி பெசண்ட் தனது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார்.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங்கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜூன் 15 ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அறிவித்தது. இதனால் நிலை குலைந்த ஆங்கில அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது.

டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். லாகூரில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் 1929 இல் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சி கோரி அறிக்கை வெளியானது. காங்கிரஸ் சோசலிச சார்பாக கருத்துக்களை வெளியிட்டமை அன்னி பெசண்டின் கொள்கைகளுக்கு உரியதாக இருக்க வில்லை. இதனால் அவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கங்களில் சேரவில்லை. காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன்போலவே ஈடுபாடு காட்டி வந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றினார். 1929 இல் "பொதுநலவாய இந்தியா" என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்.

இறுதிக் காலம்

தனது எண்பத்தியோராவது அகவையில் தீவிர அரசியலில் இருந்து விலகிய அன்னி பெசண்ட் இறுதிக் காலங்களில் இந்திய மெய்யியலாளரான தனது வளர்ப்பு மகன் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார். பிரும்மஞான சபையின் முன்னேற்றத்தில் முனைப்பாக ஈடுபட்டார். எண்பத்தேழாம் அகவையில் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 இல் சென்னையில் உள்ள அடையாறில் அன்னி பெசண்ட் காலமானார். அவரது மறைவிற்குப் பின்னர், ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆல்டஸ் ஹக்ஸ்லி, ரோசலின் ராஜகோபால் ஆகியோர் இணைந்து கலிபோர்னியாவில் "ஹப்பி வலி பாடசாலை"யை அமைத்தார்கள்.இப்பாடசாலை தற்போது அன்னி பெசண்டின் நினைவாக "பெசண்ட் ஹில் பாடசாலை" எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னி பெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது.

அன்னி பெசண்ட் அம்மையாரை கௌரவிக்கும் விதமாக சென்னையின் அம்பத்தூர், தண்டையார் பேட்டை பகுதிகளில் உள்ள ஒரு சாலைக்கு அன்னி பெசண்ட் சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் சென்னையில் உள்ள ஒரு பூங்காவுக்கு அன்னி பெசன்ட் பூங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது.



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சீரியல் அண்ணா. மிர்ச்சி செந்தில் ஹீரோவாக நடித்து வரும் இந்த சீரியலில் அவருக்கு தங்கையாக வீரா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை சுசித்ரா.

இவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலம் ஆவார். தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை தொடர்ந்து இன்ஸ்டாவில் பதிவு செய்து ரசிகர்கள் மத்தியில் லைக்ஸ்களை பெற்று வருகிறார்.

இந்த நிலையில், சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ளார்.

# பிரான்ஸ் அரசின் செவாலியர் விருதை பெற்றார் கலை இயக்குநர் தோட்டா தரணி



இந்திய அளவில் தடம் படித்த தமிழ் சினிமாவின் ஆஸ்தான கலை இயக்குனர் தோட்டா தரணி 64 ஆண்டுகளாக திரைத்துறைக்கு தனது பங்களிப்பை அளித்து வருகிறார்.

இந்நிலையில் தோட்டா தரணியின் கலைத் துறைப் பங்களிப்பைப் பாராட்டி, அவருக்குப் பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான "செவாலியர்" விருது அறிவிக்கப்பட்டது.

நேற்று நவம்பர் 13-ம் தேதி சென்னையில் உள்ள அலையன்ஸ் பிரான்சைஸ் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் அவருக்கு செவாலியர் விருது வழங்கப்பட்டது. இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் இந்த விருதை அவருக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வோடு சேர்த்து, அதே வளாகத்தில் 'எனது சினிமா குறிப்புகளில் இருந்து' என்ற தலைப்பிலான தோட்டா தரணியின் ஓவியக் கண்காட்சியும் நடைபெற்று வருகிறது. இந்தக் கண்காட்சி நாளை நவம்பர் 14-ம் தேதி வரை அங்கு நடைபெற உள்ளது.

கலை, இலக்கியம் மற்றும் அறிவியலில் சிறந்து விளங்குபவர்களைக் கவுரவிக்கும் விதமாக பிரான்ஸ் அரசு, 1957-ம் ஆண்டு முதல் செவாலியர் விருதை வழங்கி வருகிறது.

முன்னதாக தமிழ் சினிமாவில் மறைந்த பழம்பெரும் நடிகர் சிவாஜி கணேசன் (1995), கமல்ஹாசன் (2016) உள்ளிட்டோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர். தற்போது, அந்தப் பட்டியலில் தோட்டா தரணியும் இணைந்துள்ளார்.

ஓவியரான தோட்டா தரணி, கலை இயக்குனராக சினிமா காட்சிகளுக்கு தத்ரூபமாக செட் அமைப்பதில் பெயர் பெற்றவர்.

நாயகன், சிவாஜி, தசாவதாரம், வரலாறு, சச்சின், பொன்னியின் செல்வன் போன்ற பல படங்களுக்கு கலை இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

நாயகன் படத்தில் வரும் மும்பை தாராவி காட்சிகள், காதலர் தினம் படத்தில் வரும் மும்பை நெட் செண்டர், இந்தியன் திரைப்படத்தின் சுதந்திரப் போராட்டக் காட்சிகள, ஜீன்ஸ் திரைப்படத்தின் சில அமெரிக்கக் காட்சிகள், சிவாஜி படத்தில் இடம்பெற்ற 'வாஜி.. வாஜி..' பாடல் செட் ஆகியவற்றை சென்னையிலேயே தோட்டா தரணி அமைத்தார்.

ஆனால் சினிமாவை தீவிரமாக பின்தொடர்பவர்களால் கூட அவை சென்னையில் எடுக்கப்பட்ட காட்சிகள் என்பதை நம்ப கடினமாக இருக்கும். அவ்வளவு தத்ரூபமாக உண்மைத் தன்மையுடன் அவரின் செட்கள் அமைந்தன.

கடைசியாக, அவர் 'குபேரா', 'ஹரிஹர வீர மல்லு', 'காட்டி' ஆகிய படங்களுக்குக் கலை வடிவமைப்பை மேற்கொண்டிருந்தார்



நடிகை நிகிலா விமல் அழகிய உடையில் கியூட் போட்டோஷூட். எப்படி இருக்கிறார் என பாருங்க.

# அந்த படத்திற்கு பிறகு நாட்டில் பாதி பேர் என்னை கொல்ல விரும்பினர்







2023 ஆம் ஆண்டு வெளியான 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படத்திற்குப் பிறகு, நாட்டின் பாதி பேர் தன்னைக் கொல்ல விரும்பினர் என்றும் மற்ற பாதி பேர் தன்னை ஆதரித்து பாதுகாத்ததாகவும் நடிகை அதா சர்மா கூறியுள்ளார்.

அண்மையில் நேர்காணல் ஒன்றில் பேசிய அதா சர்மா, "ஆபத்தான வேடங்களில் நடிக்கும்போதுதான் ஒரு தொழில் மதிப்புமிக்கது. நான் '1920' திரைப்படத்துடன் துறையில் நுழைந்தேன். எனது முதல் படம் ஒரு பெரிய சாகசம். 'தி கேரளா ஸ்டோரி' வரும் வரை நல்ல ஸ்கிரிப்டுக்காகக் காத்திருந்தேன்.

அந்தப் படத்திற்குப் பிறகு, எனது வாழ்க்கை முற்றிலும் மாறியது. அதன் பிறகு, நான் நடித்த 'பஸ்டர்: தி நக்சல் ஸ்டோரி' படங்களின் போது கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டேன். நாட்டின் பாதி பேர் என்னைக் கொல்ல விரும்பினாலும், மற்ற பாதி பேர் என்னைப் பாராட்டி என்னைப் பாதுகாத்தனர்.

கதாபாத்திரத்தில் உணர்ச்சிகரமான காட்சிகளும், ஆக்ஷன் காட்சிகளும் இருக்க வேண்டும். என் கதாபாத்திரத்தில் உணர்ச்சிபூர்வமான தொடுதல் இருக்க வேண்டும், என் குடும்பத்தினர் அதைப் பற்றி கொஞ்சம் கவலைப்படும் அளவுக்கு அது இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கூறுகள் எதுவும் இல்லையென்றால், நான் ஏன் அந்த வேடத்தில் நடிக்க விரும்புகிறேன்?" என்று தெரிவித்தார்.

# கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள 'ரிவால்வர் ரீட்டா' படத்தின் டிரெய்லர் வெளியானது





கீர்த்தி சுரேஷ் கதை நாயகியாக நடித்துள்ள 'ரிவால்வர் ரீட்டா' படத்தை தி ரூட், தி ஃபேஷன் ஸ்டுடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. சரஸ்வதி சபதம் படத்தை இயக்கிய ஜே.கே. சந்துரு இப்படத்தை எழுதி இயக்கியுள்ளார். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் படப்பிடிப்பு கடந்தாண்டே நிறைவடைந்துவிட்டது. இப்படத்தின் பெயர் டீசர் வெளியாகி, படமும் ஆகஸ்ட் மாதம் ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், படம் குறிப்பிட்ட தேதியில் ரிலீஸ் ஆகாமல் தொடர்ந்து தாமதமாகிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் வருகிற 28-ந்தேதி ரிலீஸ் ஆகும் என அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், 'ரிவால்வர் ரீட்டா' படத்தின் டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. .

கடைசியாக கதை நாயகியாக கீர்த்தி சுரேஷ் நடித்திருந்த ரகு தாத்தா படம் சரியாக ஓடவில்லை. ஆதலால் ரிவால்வர் ரீட்டாவின் வெற்றிக்காக கீர்த்தி சுரேஷ் காத்திருக்கிறார்.

# நெகட்டிவ் கதாபாத்திரத்தில் மிரட்டும் மம்மூட்டி.. 'களம்காவல்' டிரெய்லர் ரிலீஸ்



குரூப், ஒஷானா படங்களுக்குக் கதை எழுதிய ஜித்தின் கே ஜோஷ் இயக்கத்தில் மம்மூட்டியின் அடுத்த திரைப்படமான களம்காவல் உருவாகி உள்ளது. படத்தின் இசையை முஜீப் மஜீத் மேற்கொண்டுள்ளார். இந்த படத்தில் விநாயகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.கிரைம் திரில்லர் படமாக உருவாகியுள்ள இந்தப் படத்தில் காவல்துறைக்குச் சவால்விடும் நெகட்டிவ் கதாபாத்திரத்தில் மம்மூட்டி நடித்திருக்கிறார். இப்படத்தை அவரின் தயாரிப்பு நிறுவனமான மம்மூட்டி கம்பெனி தயாரித்துள்ளது.அண்மையில் படத்தின் முதல் பாடல் வெளியான நிலையில் படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது .இப்படம் நவம்வர் 27 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

# அஜித்தை நேரில் சந்தித்து பேசிய நடிகர் சூரி



நடிகர் சூரி, அஜித் குமரருடன் நேரில் சந்தித்த புகைப்படத்தை பகிர்ந்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "அவரை பார்த்த நொடியிலேயே புரிந்தது. உண்மையான வெற்றி உருவாக்கப்படுவதல்ல; அது தினமும் உழைப்பாலும், மனவலிமையாலும் சம்பாதிக்கப்படுவது.

அவருடன் நடந்த அந்த உரையாடல் அமைதியாக இருந்தாலும் ஆழமான அர்த்தம் கொண்டது" என்று தெரிவித்துள்ளார்.

கடைசியாக சூரி நடிப்பில் மாமன் படம் வெளியாகி இருந்தது. அஜித் நடிப்பில் குட் பேட் அக்லி வெளியாகி இருந்தது. முன்னதாக சிறுத்தை சிவா இயக்கிய வேதாளம் படத்தில் அஜித் உடன் காமெடி கதாபாத்திரத்தில் சூரி நடந்திருந்தார்.

இந்நிலையில் இந்த திடீர் சந்திப்பு பல்வேறு ஊகங்களை ஏற்படுத்தி உள்ளது. அஜித் அடுத்ததாக குட் பேட் அக்லி இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் மீண்டும் நடிக்க உள்ளதாக கூறப்படும் நிலையில் அதில் சூரி நடிப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# காந்தா- திரைவிமர்சனம்




பிளாக் அண்ட் ஒயிட் காலகட்டத்தில் கதை நகருகிறது. அந்த காலத்தில் பிரபல நடிகராக இருக்கும் துல்கர் சல்மான், அவரை உருவாக்கிய இயக்குநர் சமுத்திரக்கனி மற்றும் நாயகி பாக்யஸ்ரீயை சுற்றிதான் கதையின் முதல் பாதி அமைந்திருக்கிறது.

இயக்குநர் சமுத்திரகனி கனவு கதையாக உருவாக்கும் திரைப்படம் சாந்தா. சாதாரணமாக இருந்த துல்கர் சல்மானை நடிப்பின் சக்கரவார்த்தியாக காரணமான சமுத்திரகனியின் படத்தில் நடிக்க வைக்க முயற்சிக்கிறார்.

ஆனால், கதையின் கிளைமேக்ஸில் மாற்றம் வேண்டும் என்று துல்கர் சல்மான் தயாரிப்பு நிறுவனத்திடம் பேசுகிறார். என் கதையை எப்படி நீ மாற்ற முயற்சிக்கலாம் என்று துல்கர் சல்மானுக்கும்-சமுத்திரகனிக்கும் இடையே ஈகோ பிரச்சனை எழுகிறது.

இந்த ஈகோ பிரச்சனைக்கு இடையே படத்தை எப்படியாவது முடிக்க வேண்டும் என்று சமுத்திரகனி நாயகனின் அடாவடியை பொறுத்துக் கொண்டாலும், தான் எழுதிய கிளைமேக்ஸூடன் படம் முடிய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். இதற்கிடையே, துல்கர் சல்மான் மற்றும் நாயகி பாக்யஸ்ரீ இடையே புரிதல் ஏற்படுகிறது. பாக்யஸ்ரீயின் உதவியை சமுத்திரகனி நாடுகிறார்.

இந்த மோதல் இறுதியில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது படத்தின் மீதிக்கதை

**நடிகர்கள்**

பழம்பரும் நடிகர் கதாபாத்திரத்தில் நடிப்பு சக்கரவர்த்தி என்ற பட்டப்பெயருடன் நடித்திருக்கும் துல்கர் சல்மான், நடிப்பில் பிச்சி உதறியிருக்கிறார். அவரது தோற்றம், பிரமிக்க வைக்கும் நடிப்பு கதாப்பாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார்.

பழம்பெரும் இயக்குநர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சமுத்திரக்கனி வேறு ஒரு பரிணாமத்தில் அசத்தலாக நடித்திருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் பாக்யஸ்ரீ-க்கு, அந்த காலத்து நடிகையின் முக அழகு. கதாப்பாத்திரத்திற்கு நியாயம் சேர்த்திருக்கிறார்.

காவல்துறை அதிகாரியாக நடித்திருக்கும் ராணா டகுபதியின் நடிப்பு அதிரடியாக அமைந்துள்ளது.

**இயக்கம்**

பழம்பெரும் நடிகர் ஒருவரின் கதாப்பாத்திரத்தை மையமாக கொண்டு இயக்குநர் செல்வமணி செல்வராஜ் கதையை எழுதியிருக்கிறார். அதை திரைக்கதையாக மாற்றி சுவாரஸ்யமாக நகர்த்திச் சென்றிருக்கிறார். படத்தின் நீளம் சற்று அதிகம் என்றாலும், ஆங்காக்கே சில தொய்வுகள் இருந்தாலும் படம் ரசிக்கும்படியும், விறுவிறுப்பாகவும் செல்கிறது.

**இசை**

படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மற்றும் பின்னணி இசை படத்திற்கு கச்சிதம்.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவாளர் டானி சஞ்செஸ் லோபெஸின் ஒளிப்பதிவு அந்த காலத்திற்கே நம்மை பயணிக்க வைக்கிறது.




நடிகை அனிகா சுரேசந்திரன் ட்ரெண்டி உடலியல் கிளாமராக இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்கள். ஹோட்டல் ஒன்றில் சாப்பிட சென்ற அவர் எடுத்த ஸ்டில்கள் தான் இவை.

# நாட்டாமை படத்துல என்ன சாதி இருக்கு?




செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாஜக பிரமுகரான சரத்குமாரிடம், முந்தைய காலகட்டத்தில் எஜமான், தேவர் மகன், நாட்டாமை போன்ற சாதிய படங்கள் மக்களால் ரசிக்கப்பட்ட நிலையில், தற்போது சாதிக்கு எதிரான பைசன் போன்ற படங்கள் வருகிறது. இதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது.


அதற்கு பதில் அளித்த சரத்குமார், "நாட்டாமை படம் சாதிய படம் கிடையாது. அது ஒரு பஞ்சாயத்துத் தலைவர் கதை. அதே போல் தேவர் மகன் படம் அந்த பகுதியில் படம் எடுத்ததால் தேவர் மகன் என்று பெயர் வைத்தார்கள்.

பைசன் படம் சாதியை பற்றிய படமில்லை. ஹாலிவுட் படங்களில் கூட கறுப்பின மக்களின் துன்பங்களை பற்றி பேசுகிறார்கள். அதனால் பழைய காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கிறது, அது நடக்கக்கூடாது என்று படம் எடுப்பது தவறில்லை" என்று தெரிவித்தார்.



நடிகை ரித்து வர்மா ட்ரெண்டி உடையில் அழகிய போட்டோஷூட். ரசிகர்களை கவரும் அழகிய ஸ்டில்கள் இதோ.

# 'கனகா' பாடலில் ஸ்ரேயா




தமிழில் மெட்ரோ மற்றும் கோடியில் ஒருவன் படங்களை இயக்கியவர் ஆனந்த கிருஷ்ணன். இவர் தற்போது 'நான் வயலன்ஸ் (NON Violence) என்ற படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் பாபி சிம்ஹா, மெட்ரோ சிரிஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

இந்நிலையில், நான் வயலன்ஸ் படத்திலிருந்து நடிகை ஸ்ரேயா நடனமாடியுள்ள 'கனகா' பாடலின் லிரிக்கல் வீடியோ வெளியாகியுள்ளது.

திருமணம் ஆனதில் இருந்து தமிழில் நடிப்பதை குறைத்துகொண்ட ஸ்ரேயா, இந்தாண்டு வெளியான ரெட்ரோ படத்தில் பாடல் ஒன்றுக்கு சிறப்பு நடனம் ஆடி கம்பேக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜமௌலி படத்தில் மந்தாகினியாக பிரியங்கா சோப்ரா- பர்ஸ்ட் லுக் வெளியீடு



எஸ்.எஸ். ராஜமௌலி மகேஷ் பாபுவை வைத்து பிரமாண்ட படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் பிரியங்கா சோப்ரா நாயகியாக நடிக்கிறார். பிரித்விராஜ் (கும்பா கதாபாத்திரம்) வில்லனாக நடிக்கிறார். கீரவாணி இசையமைக்கிறார்.

இப்படத்தின் நிகழ்ச்சி வருகிற 15-ந்தேதி பிரமாண்டமாக நடைபெற இருக்கிறது. இதற்கு Globetrotter எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் படத்தின் பெயர் உள்ளிட்ட பல அறிவிப்புகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், பிரியங்கா சோப்ராவின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. மந்தாகினி கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

# ரஜினி படத்தில் இருந்து விலகினார் சுந்தர் சி

கமல்ஹாசன் தயாரிப்பில் ரஜினிகாந்த் நடிக்கவிருந்த படத்தில் இருந்து இயக்குநர் சுந்தர் சி விலகி உள்ளார்.

ரஜினியின் 173-வது படத்தை சுந்தர் சி இயக்குவதாக இருந்த நிலையில் இயக்குநர் சுந்தர் சி இந்த அறிவிப்பு வெளியிட்டு உள்ளார். இதுதொடர்பாக சுந்தர் சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தவிர்க்க முடியாத காரணங்களால் ரஜினி படத்தில் இருந்து விலகுகிறேன். புதிய படம் குறித்து ஆவலுடன் எதிர்பார்த்த ரசிகர்கள் எனது மனமார்ந்த மன்னிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். ஆர்வத்துடன் காத்திருந்தவர்களை அதிருப்திக்குள்ளாக்கியதில் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.






### வாழ்க்கையின் வெளிச்சம்

சில நிமிட வார்த்தை,
சில வருட வாழ்க்கை...
நிச்சயமில்லா மகிழ்ச்சி..

நீண்ட ஆயுள் இல்லாத
உலகில் யாரை வெல்ல
சண்டை போட்டு
கொண்டுள்ளோம்?

எதனை கொண்டு போக
இத்தனை முயற்சி —
கூட இருப்பது கடைசி வரை
கூடவே வருமா?

விளக்கை அணைத்துவிட்டு
இருட்டை குற்றம் சொல்லும்
போல், காயங்களை சேர்த்து
வைத்து கொண்டு கண்ணீரை
குற்றம் சொல்வது ஏன்?

வழியா இல்லை!
பின் எதற்கு வலி என்கிறாய்?

சொல்ல முடியாத
வார்த்தைகளையே
இங்கே சொல்லிக்கொண்டே
இருக்கிறோம்...

வாழ்க்கை கடினம்
தான், ஆனால் அதில்
தான் இனிமையும்
மறைந்திருக்கிறது.

யாரும்முழுமையில்லை,
அனைவரும் ஒரு கதையின்
பாத்திரமும் எதோ ஒரு
வகையில் ஊனம் தான்.

பகை வைத்தால் போர் நீளும்,
மன்னித்தால் மனம் நீளும்.

வாழும் வரை சண்டையிடுவது
வாழ்க்கை அல்ல, சாந்தியுடன்
இருப்பதே சாதனை.

ஒவ்வொருவரின் இதயத்திலும்
ஒரு நல்ல எண்ணம்
இருக்கிறது அதை காண
தெரிந்தால் உலகமே உயர்ந்து
நிற்கும்.

நேற்று வலியைத் தந்தவரே,
இன்று நமக்கு பாடமாகி
விடுவார்.

நல்லவர் என்றும்
தோற்பதில்லை
தீமைகள் நெடுங்காலம்
நிற்பதும் இல்லை.

எதையும் விட அன்பு தான்
நீண்ட நாட்கள் வாழும்,
அதை இழக்காதே.



அனைவரையும்
அனைத்துக்கொள்ள
காரணம் வேண்டாம்.
கொஞ்சம் காருண்யம்
போதும்

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

---

ஒரு சூஃபியின் கவிதை
உனது குழந்தைத்தனமான
பாவனையை முதன்முதலாய்
தாயை போல இரசிக்கிறது
இறைவனை மட்டுமே
இதுவரை வணங்கிய மனது
எனது பாங்கொலியை
எந்த எதிர்பார்ப்புமில்லாமல்
பேரன்பு கொள்கிறது
உனது காதல் இப்படி
நமக்குள் பரஸ்பரம்
செய்துகொள்ள
தூயக்காதலிருக்கும்
போது இந்த
சமூகத்துக்கு எதற்கு
நம் மதங்கள்? உன்
அபிநயங்களால்
இதயத்தின் ஆழம்
வரை பேசாமல் பேசுகிறாய்
தஸ்பி ஓதும் போது கூட
உன் ஞாபகங்கள் வருவதை
தடுக்க முடியவில்லை அதிரும்
நகராவின் சப்தத்திற்கு நடுவே
ஒலிக்காத உன் குரல்
என்னுள்ளே
கேட்டுக்கொண்டே
இருக்கிறது என் ப்ரியமான
சுஜாதா!! நிச்சயம் ஒருநாள்
என் ரூஹ் படைத்தவனிடம்
சேரும்–ஆனால்



தோற்றுப்போன என்
காதல் மட்டும் காற்றாய்
உன்னையே
சுற்றிக்கொண்டிருக்கும்!!

**நௌஷாத் கான் .லி**



### காதல் தூதுவன் !

அவளின் அண்டை வீட்டு
பழக்கம் இருந்தும்...
அவளுக்கு நான்
செல்ஃபோனில் குட் மார்னிங்
மெசேஜ் அனுப்பியதில்லை...

பொங்கல், தீபாவளி,
காதலர் தினம் என எதற்கும்
வாழ்த்துக்கள் கூட நான்
அனுப்பியதில்லை....

அவளை கவர்வதற்காக நான்
அழகான உடை உடுத்தவோ,
தலைமுடியில் அலங்காரம்
செய்யவோ,சிக்ஸ் பேக்
பாடி மெயின்டன் செய்யவும்
முயலவில்லை...

ஆனால் அன்று அவள்...
எனக்கு புது உடை எடுத்து
தந்து... உங்களுக்கு
மேட்ச்சாயிருக்கும்
போட்டுகிட்டு காந்தி பார்க்
வாங்க என்றாள்...

எனக்குள்... பாரதிராஜாவின்
பாடல்களில் வரும் வெள்ளை
தேவதைகள் என்னை சுற்றி
பூமழை பொழிவது போல்
தெரிந்தது...

என்னை காதலிக்கும்
ஒருவளா...

அவள் தந்த ப்ளூ டீ
சர்ட்டும் கருப்பு ஜீன்ஸும்
அணிந்து காந்தி பார்க்கில்
காத்திருந்தேன்...

' இங்க என்ன
பண்றீங்க... !'
வேகமாய் என்னை
பின்னால் வந்து
இழுத்தாள்....

"சீக்கிரம் வாங்க டைம்
ஆகுது !" என்று ஆட்டோவில்
என்னை ஏற்றினாள் !

ஆட்டோ நேராக பயணித்தது
'திருமண பதிவு அலுவலகம் !'
என் பெயர் பலகையை தாங்கி
இருந்த இடத்தில் !

"வாங்க ... வாங்க... சீக்கிரம்
வாங்க என் கைகளை
பற்றி இழுத்துக் கொண்டு
அலுவலகத்திற்குள்
ஓடினாள்... !"

என்னை சுற்றி வெள்ளை
தேவதைகள் இன்னும்
வட்டமடிக்க எனக்கு ஒன்றும்
புரியவில்லை....

உள்ளே வாட்டசாட்டமாய் ஒரு
இளைஞன் காத்திருந்தான்
கையில் மாலையுடன்....

"சார் சாட்சி ரெடி !' என்றாள்
என்னை கைகாட்டி...

அவளும், அந்த இளைஞனும்
மாலை மாற்றிக்கொள்ள
என்னை ரிஜிஸ்தரில்
கையொப்பமிட வைத்து...
"தேங்க்யூ அண்ணா !"
என்றாள் பாசமிகு திடீர்
சகோதரியாய் !

என்னைச் சுற்றி வட்டமடித்த
வெள்ளை தேவதைகள்
இப்போது பூமாலைக்கு
பதிலாய் கண்ணீர் மழை
பொழிய ஆரம்பித்தனர் !
நானும்....



**எம்.பி.தினேஷ்**
கோவை

### மூன்று முத்துக்கள்

" மனக்கசப்பு ஏற்படுவது
சகஜம் மணவாழ்க்கையில்
ஏற்படுவது
சர்வ சாதாரணம் .... "

வேதனைக்கு
உள்ளாக்கியவர்
எளிதில் மறந்திடுவர்...."

வேதனையில் உழன்றவர்
மீளுவதில்லை
வடுவாய் நெஞ்சில் ... "

அடுத்தவரை அழ வைத்து
அதில் ஒரு மயான சிரிப்பு...."

அடுத்தவர் புன்னகையில்
ஒரு ஏவுகணை அச்சத்தில்
முகம் மாறும் பேரலை ..."

குத்திப் பேசி குதர்க்கம்
காட்டும் சின்ன ஆசை
எண்ணலை ..."

எகிரி பேசி வாயடைக்க
வைக்கும் தனிக்கலை.... "

முகம் கொடுத்து பார்க்காமல்
அசிங்கப்படுத்தும்
ஆணவ தற்பெருமை ..."

மௌனமாய் இருந்து
விட்டால் செவிடாய்
பழகிவிட்டால் பார்த்தும்
பார்க்காதது போல்
நினைத்துவிட்டால் ..."



அமைதி
சாந்தம்
கருணை
ஆனந்தம்
பொங்கி
வழியுமே..."

**ஆர்.சீதாராமன்**
சீர்காழி.

### நமக்கும் மேலான...

என்னைவிட இரண்டொரு
வயது மூத்தவள் தான் நீ

அதனாலென்ன

தன் சக்திக்கு
மீறியதை குழந்தைகள்
கேட்பதில்லையா?

எட்டாத உயரத்தில்
இமயமலை
இருந்தாலும் அடைய
முயற்சிப்பதில்லையா?

நமக்கும் மேலே உள்ள
நிலவில் கால்பதிக்க
விரும்பவில்லையா?

நமக்கும் மேலான ஒன்றை
அடைவதுதான் சாதனை
என்றாகும்
போது



நான் உன்மீது
கொண்ட
காதல்
தவறாகுமா?

**எஸ் .சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை

### சிநேகிதம்

ஹீட்டர் திடீரென பழுதானது
உத்திரவாத காலம் இருந்தது
பத்து நாட்கள் பக்கவாதம்

துவைக்கும் இயந்திரம் மக்கர்
கைவினைஞர் சீர் செய்தார்
இரண்டு நாட்கள் தொல்லை

டிவி சண்டித்தனம் புரிந்தது
கம்பெனி நிவர்த்தி செய்தது
உதிரி கிடைக்க தாமதமாச்சு

மிக்ஸி ஓட்டத்தை நிறுத்திற்று
புதிது வாங்கித்
தொலைத்தேன் பழையதை
வாங்க மறுத்தனர்

பிரிட்ஜ் குளிர்ச்சியாய்
இல்லை வாயு நிரப்பியதும்
இயங்கிற்று இரண்டாயிரம்
ரூபாய் செலவு

ஓராண்டில் இத்தனை
சிக்கலா? மனிதனுக்கு
எத்தனை
நெருக்கடி?



நிபுணரின்
யோசனை
நெத்தியடி
ஒயரிங்
புதிதாய் மாற்றணுமாம்!

**பி. சுரேகா,** சென்னை.



### செல்லில் மூழ்காதே!

செல்லில் மூழ்கிப்
போகாதே செல்லா காசாய்
ஆகாதே! பள்ளிப் படிப்பை
மறந்தேதான்
பொழுதை போக்க
நினைக்காதே!

உள்ளே பலவித நிகழ்வுண்டு
உனக்குத் தேவை
எதுவென்று நல்லோர்
கருத்தை நாடிடுக
நன்மை சேதியில் கூடிடுக!


எல்லா நேரமும்
செல்போனில் எதையோ
பார்த்து அலைமோதி
நல்லா இருக்கும்
கண்,மனமும்
நலிந்தே போய்விட
விடலாமோ?

இல்லா கற்பனை பல கோடி
இருப்பது போலே நினைத்தே
தான் சொல்லா வகையில்
போகாதே செல்லா காசாய்
ஆகாதே!



பல்லோர்
நேரம்
பசிதாகம்
வந்தால்
தீர்ப்பது
போல்நீயும்
தேவைக்கு
மட்டும்
செல்பாரு தவிர்த்தால்
வருமே அவப்பேரு!

**வெ.தமிழழுகன்**
எம்ஏ.பிஎட் ,சேலம்.




### என் அருமை தேவதைகள்

மனதில் ஒவகை ஊட்டும்
மழலை செல்வங்களே
உங்கள் தினமாக நேரு
மாமாவின் பிறந்த தினம்
என்பதை அறிவீர்களா
நீங்கள் வீட்டில் நடமாடும்
தேவதைகள் உங்கள்
குரல் சங்கீதத்தை விட
இனிமையானது அன்றோ
நீங்கள் இல்லையெனில்
வாழ்வில் ஏது பிடிப்பு
வீட்டின் வாரிசாக
வரும் நீங்கள் தான்
இருள் நீக்கும் கதிரவன்
பலவிதக் குரல் எழுப்பும்
நீங்கள்தான் விடியலில்
கேட்கப்படும் புள்ளினங்கள்
வாழ்க்கையின் வசந்தம்
என் அருமை தேவதைகளே
சின்னப் பதம் வைத்து
நீங்கள் வலம் வருவது
அனைவருக்கும்
மகிழ்ச்சியே
குழந்தைகள் தினம்
கொண்டாடும் நேரத்தில்



குழந்தைகளே
நீங்களே
எங்கள் வீட்டு
தேவதைகள்

**உஷா முத்துராமன்**



### "பொன் மகள் வந்தாள்"

கருவான நாள் கண்ணே!,
உனை உறுதி செய்ய,

சிறுமொட்டு போல் உள்ளே
உயிருணர்ந்து,

விரிகின்ற திரையில்,
மருத்துவம் உனை
வெளிச்சமிட்டுக் காட்ட,

இருதயத்தின் ஓசைகள்
இசையாக அவளுக்குப்
புரிந்த தருணம்,

சிலிர்த்துக் கொண்டதே
புறமும் அகமும்!

கண்ணுக்குத் தெரியாமல்
உள்ளுக்குள் வளர்ந்த
கண்மணி!

பிள்ளையோ பெண்ணோ,
இன்னு யிரின் நீட்சி நீ!

இருப்பை உணர்த்த
வயிற்றில் உதைக்கிறாய்,
வளையவே வந்து மெல்ல
கிசு கிசுக்கிறாய்!

பிரிதோர் நன்னாளில்
பெற்றவளுக்கு
மறு ஜென்மம் தந்து,

உற்றவள் நீ, மடியில்
விழுந்தாய்! கையில் உனைக்
கொண்ட நாளில்,

கண் விழித்து, கருத்தாய்
வளர்த்து பெண்ணாய்
பெற்ற பேரின்பம் தந்தாய்,



இன்னுயிரே,
பொன்மகளே!
நீ, இன்று
போல் என்றும்
நன்றே வாழ்க!
நலமே சூழ்க!!

**மீனா சேகர்**



நிலவாய் பிரகாசித்த
அன்னை முகம்தான்
நான் வணங்கும் சாமி
அவளுக்கும் நிகர்
இப்பிரபஞ்சத்தில் யாரிங்கு
காண்பி ? பசியென்று
சொல்லும் முன்பே
பேரன்புடன்அவளிட்ட தோசை
ஏழேழு பிறவியிலும் அவளே
என் அன்னையாய்
வரம் வாங்கவே ஆசை !

**நௌஷாத் கான் .லி**

### காகிதம்

தாவரக்குடும்பத்தின்
தரமான மாற்றுருவம்

இதயத்தின் ஓசையை
எழுத்தாக்கித் தேக்கும்

உள்ளத்தை எடுத்துச்செல்லும்
வெள்ளைத் தூதுவன்

கணினிக் காலத்தில்
குறைந்து போனாலும்
பயனில் என்றும் மாற்றமில்லை

எண்ணத்தை வாங்கி
வண்ணத்தில் காட்டும்

ஓடும் கப்பலை நாடும்
குழந்தைகள் கொள்ளை
இன்பம் உள்ளத்தில்
கொள்ளும்

பட்டம் விட்டு மகிழ்வு
தரும் பட்டம் வாங்கி
மரியாதை வரும்
வகையில் பலவாகக்கப்பலாகி
சிறுபிள்ளைகளையும்
விஞ்ஞானியாக்கும்

கலைமகளும் காகித வடிவில்
கருணையோடு
கல்வி தருவாள்

திருமகளும் பணமாகி
மகிழ்ச்சி தருவாள்

நிதிக்கும் காரணமாகும்
நீதிக்கும் காரணமாகும்

வடிவில் பல கொண்டு
தடைகள் பல வென்று
காலமெல்லாம் உடன்
வரும் காகிதம்
காட்சிகளின்
பிரதிபலிப்பு
சாட்சிகளின்
கண்ணாடி



**தமிழ்நிலா**

## நூல் விமர்சனம்:

நூலின் பெயர்: பாரிஜாதமே
நூல் ஆசிரியர்:
எஸ்.பர்வீன் பானு
வெளியீடு: அல் அவ்வல்
பதிப்பகம்
விலை : ₹375
தொடர்புக்கு : 95661 37065




எழுத்தாளர் பர்வீன் பானு எழுதும் கதைகள் எல்லாமே மனதை உருக்கும்.

கசப்பான வேண்டாத நினைவுகளை மூளையிலிருந்து அழித்துவிட முடியும் என்ற ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கதை.

அப்பாவை இழந்து அம்மா பவானி, அக்கா கார்த்திகா , தங்கைகள் ருத்ரா- உத்ரா உடன் வாழும் வைகறை வருணன் , கல்லூரிக் காலத்தில் தனக்கு ஏற்பட்ட கசப்பான காதல் அனுபவத்திலிருந்து மீண்டு , மின்சாதனங்கள் விற்பனை செய்யும் தன் சொந்தக் கடை மூலம் வாழ்க்கையில் உயர்ந்து நிற்கிறான். அவனுக்கு திருமணத்திற்காகப் பார்க்கும் வரன்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் தட்டிப் போகிறது.

அம்மாவை இழந்து அப்பாவின் அரவணைப்பில் வாழ்ந்த யயாதி , அவள் அக்கா தாரிணிக்கு திருமணம் ஆகி சஞ்சு என்ற மகளும் பிறந்த பின் தந்தை இறக்க, அக்காவின் ஆதரவில் வாழும் நிலை ஏற்படும் போது, மெல்ல மெல்லத் தன் நிலை உணர்ந்து, அவள் வீட்டில் இருந்து வெளியே வந்து விடுதியில் தோழி பல்லவியோடு தங்கி கல்லூரிப் படிப்பை தொடர்கிறாள்.

பல்லவியின் ஸ்கூட்டி பிரேக் சரியாகப் பிடிக்கவில்லை எனச் சொல்லியும் கேளாது, யயாதி அதை எடுத்துச் சென்று வைகறை கார் மீது மோதி போலீஸ் கேஸாகி பல்லவி தலையீட்டால் அது ஒரு சுமூகமான முடிவுக்கு வருகிறது. தோழி தாராவை, வைகறைக்கு பெண் பார்த்த நிலையில் அவள் வேறு ஒருவனைக் காதலிப்பதால், அவனிடமே சொல்லி திருமணத்தை 6 மாதத்திற்கு ஒத்திவைக்கும்படி கேட்கும் போது, மீண்டும் உரசலாகிறது.

ஆனாலும் யயாவிற்கு அவன் மேல் ஒரு ஈர்ப்பு உருவாகி காதல் மலர்கிறது. தோழி பல்லவியும் யயாவை தெனாலி படத்தில் வரும் ரமேஷ் கண்ணா போல வைகறை பெயரை , நண்பகல், மிட் நைட், லேட் நைட் என மாற்றி மாற்றி சொல்லி கலாய்க்கிறாள்.

சித்தி மகள் எங்கேஜ் மென்ட்டிற்கு அக்கா தாரிணி அழைத்துப் போன இடத்தில் வருணனை மீண்டும் சந்திக்கிறாள், அங்கே அக்கா மகள் சஞ்சு திடீரென தொலைந்து போக, அவள் அக்கா கோபமாகி, அப்பா "உன்னை என் தலையில் கட்டிட்டு போய்ட்டாரே " என வார்த்தையை விட நொறுங்கிப் போகிறாள் யயா, பின்னாளில் சஞ்சு தன்னால் நிரந்தரமாகத் தொலையப் போகிறாள் என்பதை அறியாமல்....

வைகறை பார்க்கும் போதெல்லாம் அவள் மீது தவறான பிம்பம் விழுகிறது, அவன் கடை எதிரே உள்ள கடையில் பொம்மை வேஷம் போட்டு விடுமுறையில் வேலை செய்ய , ஒரு குழந்தையின் கம்மல் தவறுதலாக உடையின் பாக்கெட்டில் விழ, திருட்டுப்பழி சுமத்தப்பட்டு, அக்கா தன் கணவன் சம்பத்துடன் வந்து அவள், அப்படிப்பட்ட பெண் அல்ல என எழுதிக் கொடுத்து, தன்னோடு அழைத்துச் செல்கிறாள்.

ஒரு மாற்றத்திற்காக யயாவை கனடாவிலிருந்து வந்திருந்த சாஜித்- நிவ்யா தம்பதியரை பார்க்க, தனக்குப் பதிலாக தாரிணி அனுப்பி வைக்க, மூளை தொடர்பாக ஆராய்ச்சி செய்யும் அந்த தம்பதியரை பெங்களூரில் சந்திக்கிறாள். அங்கே யதேச்சையாக மீண்டும் வைகறையைப் பார்க்கிறாள். அதுதான் அவள் சுய நினைவோடு கடைசியாக அவனைப் பார்த்தது.

அவள் விரும்பிய போதெல்லாம் தன் கசப்பான அனுபவத்தால் விலகிப் போனவன், அவள் தன் நினைவை இழந்து பித்து பிடித்து இருக்கும் நிலையில், அவளை விரும்பி வருகிறான். எதனால் அவள் இப்படி ஆனாள்? இருவரும் வாழ்வில் இணைந்தனரா? என அறியப்படியுங்கள் , இந்த கண்ணீர்க் காவியமான " பாரிஜாதமே"

**ஸ்ரீகாந்த்திருச்சி**






**எழுத்தாளர் வல்லிக்கண்ணனார்!**

நேரிசை வெண்பா!

பன்முக ஆற்றலர்
பாங்கான வல்லியே!

நன்முக மாயெழுத்தர்
நல்லமுறை.. சொன்முறை
சாகித்ய நல்விருதை
சாந்தாகப்பெற்றவர்!

தாகம் இலக்கியத்தில் தான்!

இதழாசான் நல்ல
எழுத்தாளர் வல்ல

விதமாய்ச்சிறுகதையும்
வீறாய்ப்...புதுக்கவியும்

யாத்தாரே வல்லியாம்
கண்ணன் எழிலாக

பாத்திறமும்
கொண்டாரே பார்!
(வல்லி...வல்லிக்கண்ணன்)

முனைவர்
இராம.வேதநாயகம்.

**நுரையீரல் அழற்சி! (நிமோனியா)**

நேரிசை வெண்பா!

நுரையீரலில் நேர்ந்த
அழற்சியை நீக்க

பெரியோர் முதலாய்
சிறுவர்... வரையில்

விழிப்புணர்வு
கொண்டேதான்
வீறுடன் வாழ்ந்தே
இழப்பை எதிர்த்தல் இனிது!

கடின உழைப்பாலே
காற்றைச்சுவா சித்தே
உடலுக்கனுப்பிடும்
உள்ள...
கடமை நுரையீரல் செய்யும்
நுணுக்கப்பணியாம்
இருமலையும் நீக்கல்
இனிது!



முனைவர்
இராம.வேதநாயகம்.

**பறவைகளைக் காப்போம்!**

நேரிசை வெண்பா!

இயற்கையின் அற்புதம்
ஈடில் பறவை நயன்மை
முறையுடன் நாளில்...
வியப்பை அளித்திடும்
அன்பாகக்காணும்
பறவை களிப்பையே
நல்கிடும் காண்!


பறவை பலவிதம்
ஒவ்வொன்றும் காணும்
சிறப்பாக வண்ணமாக
சீர்மை.. வியப்புடன்
பல்வேறு நன்மைகளைப்
பாங்காகத் தந்தேதான்
நல்லுலகில் வாழும் நனி!

முனைவர்
இராம.வேதநாயகம்.



காதலே .. என் காதலே..
ஒரு முகம் இருமுகமென்று
எனக்கென்று எந்த
முகங்களுமில்லை
உன்னைத் தவிர.
இஷ்டப்படுவதற்கும்
– என்னோடு
கஷ்டப்படுவதற்கும் –நான்
நஷ்டப்படுவதற்கும்
உன்னை விட்டால்
இவ்வுலகில் வேறு
யாரடி ?!
உன் மீது
என்ன பிரியமோ
நீராடும் போது
உன்னை அள்ளி
பூசிக்கொண்டது
அந்த மஞ்சள் .. நீ வைக்கும்
போது மட்டும் தான்
அந்த கல்நெஞ்சக்காரி
மருதாணி காதலோடு
சிவக்கிறது
மனிதப்பிறவி எடுத்தால்
அந்த பிரம்மன் கூட
கண் வைத்து விடுவானடி !
உன் அம்மாவிடம் சொல்லி
கண்ணுக்கு இடும் மையை
உன் கன்னத்திலும்
கொஞ்சமிடு கண் திருஷ்டி
வழி மாறி போகட்டும்

நீ பிங்க் சாரி உடுத்தும்
போதெல்லாம் பார்பி டாலாக
மாறி போகிறாய்
உலக அதிசயமாய்
உன்னை பற்றி கவிதை
எழுதலாம் என்று
நினைக்கும் போதெல்லாம்
உன் கண் வீச்சில்
நிலைகுலைந்து போகிறேனடி
என்ன செய்ய ? ஏது செய்ய ?
ஒரே ஒரு நிமிடம் என்
கனவிலும் , கண்ணிலும்
வராதே கொஞ்சமாய்
கொஞ்சும் காதல்
கவிதையை
கால் பக்கத்திற்காவது
எழுதி விட்டு போகிறேன்



நௌஷாத் கான் .லி

**கவிதைப்புத்தகம் வாங்குங்கள்!**

கவிதைப் புத்தகம் வாங்கவேணும் அண்ணாச்சி!
கவிஞர்களை ஆதரியுங்கள் அண்ணாச்சி!

எத்தனையோ புத்தகங்கள் தினமும் வெளியாகுது!
அத்தனையும் தொட்டுப்பார்க்க ஆளில்லாம ஏங்குது!

மஞ்சள் புத்தகம் மர்ம நாவல் கோலப்புத்தகம் விக்குது!
மணக்கும் கவிதைப் புத்தகங்கள் பாதையோரம் கருகுது.!

இன்டெர்நெட்டு கூகுலிலே.. புத்தகம் வெளியாகுது!
எழுதியவன் வீட்டில் மட்டும் வறுமை விளையாடுது!

பெயரை மாற்றி.. வரியை மாற்றி.. கவிதை திருடு போகுது!
உயிரைக் கொடுத்து எழுதியவன் உசிரு கிடந்து மருகுது!

சாமிப் புத்தகம் போட்டாக்கூட.. காசு கையில் புரளுது!
சாகாவரம் பெற்றக்கவிதை விற்காமலே தேங்குது!

ராசிபலன் ஜோசியங்கள் கையை வீசிப் போகுது! ஆசைக்
கவிதைப் புத்தகங்கள் செல்லறிக்களாகுது!

சினிமா பார்க்க.. தின்று தீர்க்க அலையும் மனிதர் கோடியே!
சிந்தனையை தூண்டும் கவிதை புத்தகம் போட்டால் போண்டியே!

வே.கல்யாண்குமார்.

**நிலவுப்பேரரசி**

என் மௌனத்தின் மொழி
பெயர்ப்பாளன் அவன்!
என் மௌன மொழிகளின்
புரிதல் அவன்!
நான் காட்டும் மௌனத்தின்
நம்பிக்கை அவன்!
பேசத் தெரியாதவள்
நானில்லை!

என் மௌனமே எனது
பேரன்பையும் எனது
குணநலன்களையும்
என்னவனுக்கு
எடுத்துரைக்கும்போது–

மணிக்கணக்கில்
நான் வாதாடவோ– எனது
மன ஏக்கங்களை அவனிடம்
எடுத்துரைக்கவோ–
அதற்கான வாய்ப்பை
என்னவன் என்னிடம்
என்றுமே அளித்ததில்லை!

ஏனென்றால்– என் மாபெரும்
புரிதலே அவனான பொழுது
பின்பு– அகங்காரமோ
ஆணவமோ எனக்கெதற்கு?!

எத்தனையோ பேர்
எனக்கு
எதுவுமே எழுதத்
தெரியாதென்று
கூறுவதுண்டு!
ஆம்– அவர்கள்
கூறுவதும்
உண்மைதான்!

என்னவனைத் தவிர
நான் இதுவரை எதுவுமே
எழுதியதில்லையே!
அவனது இதயப்பலகையில்–
எனது விழிகளால்
எழுதியதைத் தவிர
எனக்கு எதுவுமே
எழுதத் தெரியாதுதான்!

வானத்தில் எண்ணற்ற
நட்சத்திரக் கூட்டங்கள்
வைரம் போல் மின்னி
மின்னிக் கண் சிமிட்டலாம்!

ஒற்றை நிலவு நான்
என்னில் தேய்வதும்
வளர்வதும் போல் குறைகள்
பல உண்டுதான்!


இருப்பினும்– அவன் இதய
மண்டலத்தில் உலா வரும்
ஒற்றை நிலவுப் பேரரசி
நான்தானே!

சில அன்னப்பறவைகளே
புறாக்களே– இதையு(இதய)
மற்றவர்களுக்குத்
தூதாகக் கொண்டு
சேர்த்து விடுங்கள்!



இதையும் அவர்கள்–
பலவாறு விமர்சிக்கலாம்!
நம்மைப் படைத்த
இறைவனையே
தூற்றும் இவ்வுலகத்தில்
நான் மட்டும் எம்மாத்திரம்?!

கோவைக்கவி புவனா
கோயமுத்தூர்



**குழந்தைகள்**

மண்ணகத்தில்
உலாவரும் சின்ன சின்ன
நட்சத்திரங்களே!
உங்கள் புன்னகையோடு
போட்டி போட முடியாமல்
பூக்களெல்லாம் நாணத்தில்
தலை குனிகின்றன!

கோடி கோடியாய்ச்
செல்வம் குவித்தவனும்
வறியவனாய் வருந்தி
துடிப்பது குழந்தை வரம்
வேண்டி தான்!

தளிர் கைகளை
பிஞ்சு கால்களை
வருடும் போதும்
ஒத்தடமாய்த்தரும்
அமிழ்த முத்தங்களை
துய்க்கும் போதும்
ஆயிரம் சோகங்கள்
மறைந்து சுகங்கள்
சொர்க்கமாய்ச்சூழ்ந்து
கொள்கின்றன!


ஆண் பெண்
பேதம் பார்க்காமல்
ஊட்டமான உணவுகளோடு
ஊட்டமான உணர்வுகளை
ஊட்டி வளர்த்திட்டால்
பேதையும் மேதையாகும்!

குழந்தைகள்
பசுமையான நாற்றுகள்
பண்பட்ட நன்செய்
நிலங்களில் நட்டு வையுங்கள்
மழலைகள் வெறும்
வாரிசுகள் அல்ல

எதிர்காலத்தை
ஓவியமாக்கும்
வசந்த தூரிகைகள்!
இப்போதெல்லாம்
இறைவன் ஆலயங்களில்
இருப்பதில்லை
மழலைகளைச் சுற்றி
வண்டாய்
ரீங்காரமிடுகிறான்
மந்திர ஜெபங்களுக்கு
செவி சாய்ப்பதில்லை
மழலைப்
பேச்சுகளில்
மயங்கி
விடுகிறான்!



கவிஞர்
த.அனந்தராமன்
துறையூர்




**வெள்ளிமூக்குக்குதிரை!**

அழுக்குத்துணியை
ஏற்றினாலும் அழமாட்டேன்
சுத்தமான துணியை
ஏற்றினாலும் சிரிக்க
மாட்டேன் இன்பமோ
துன்பமோ பொறுமையாக
இருப்பேன்நீங்கள் என்னை
கழுதை யென்றாலும்
வெள்ளிமூக்குக்
குதிரை
நானென்று
அறிவேன்!



சின்னஞ்சிறு
கோபு,
சென்னை.



**ஜன்னலோரப் பயணம்**

காதில் இரகசியமாய்
கதை சொல்லி செல்கின்றது
தென்றல் காற்று..

உதடுகளில் பகிரங்கமாய்
முத்தமிட்டு விடுகின்றது
சாரல் மழை..

தொலைதூர மலைகளில்
தொலைந்து போகின்றது
மென் மனம்..

மேகங்களோடு கைகோர்த்து
பின்னே ஓடுகின்றன
நினைவுத் துகள்கள்..

அன்றைய பொழுதுக்கான
நம்பிக்கையை
விதைக்கின்றன
கதிரவனுக்காக
காத்திருக்கும்
இருள் சூழ் வானம்..

காலைகளை எல்லாம்
கவிதைகளாக்கி
அதன் வரிகளின் இடையே
மனதின் பாரங்களை
மறைத்துக் கொள்கின்றன
ஒவ்வொரு நாளும் – இந்த
ஜன்னலோர
பேருந்து
பயணங்கள்..



ஸ்டெஃபிஸ்
காட்பிரே
நாகர்கோவில்

**சிலாகித்தல்**

குறைபட்டுக் கொள்கிறாய்
இப்போதெல்லாம்
உன்னை நான்
சிலாகிப்பதே இல்லையென்று.

உனக்குத் தெரியாது
அல்லது
எனக்குத் தெரியாதா...

இனியும் உன்னை
நான்
சிலாகித்தால்
அது என்னை
நானே
சிலாகித்தது
போல்
ஆகிவிடுமென்று.



கீர்த்தி



**மழலையர் தினம்**

(14 – 11–2025)
நேரு மாமா

நேரு மாமா கனவில் வந்தார்

வெள்ளை உடையில்
துள்ளல் நடையில் கள்ளமற்ற
சிரிப்புடன் கனவில் வந்தார்
நேரு மாமா

கையசைத்து 'வருக' என்றார்
பை நிறைய புத்தகம்
கொடுத்து 'படி' என்றார்

'உரமாய் இரு. ஊக்கமாய்
உழை. பிறன் நலம் பேண்
தேசம் நேசி'

மாண்போடு இருக்க
பண்போடு வாழ்
உண்மை பேசி
வண்மையாய் வாழ்

ஏமாற்றிப்
பிழைக்காதே
ஏமாறவும் ஆகாது
பிறர் நலம் கருதி
தன் நலம் பேண்

இத்தனை அறிவுரை
உனக்கேன்? சுருங்கச்
சொல்லி விளங்க வைப்பேன்.

வள்ளுவம் கல். பாரதி படி.
மூத்தோர் சொல் கேள்.
பகுத்தறிவு கொண்டு
புரிந்து செயலாற்று;

பாரோர் உன்னை
'எவர் இவன்?' என்றே
திரும்பியே பார்ப்பர்.
விரும்பி உன்னனைப்
போற்றுவர்

என்றே சொல்லி கன்னம்
தட்டி; ரோஜா ஒன்றை
கையில் அளித்தார்.



நினைவு போல் கனவில்
இன்று நேரு மாமா
வந்தார்.

சசிகலா விஸ்வநாதன்

அடிப்படை அறமில்லை
துறவிலும் தூய்மையில்லை..

சொல்லில் உண்மையில்லை
உணர்வில் அன்பில்லை..

வணிகத்தில் தரமில்லை
வாக்கில் துணிவில்லை

கல்வியில் தெளிவில்லை
கற்றலில் ஆர்வமில்லை

வழிகாட்டலில்
வலிமையில்லை

ஏழ்மையில் செம்மை
யில்லை..

உழைப்பில்
செழிப்பில்லை
உயர்வில்
நெறியில்லை..

பணத்தில் பண்பில்லை
மனத்தில் ஈரமில்லை...

உள்ளவருக்கு உலகில்
இடமில்லை
இல்லார்க்கு எதுவுமில்லை..

வாழ்க்கை எறும்புக்குமுண்டு
யானைக்குமுண்டு
எட்டுக்கால் பூச்சிக்குமுண்டு
யாருமறியா உயிருக்கும்
உண்டு.. உறக்கத்தைக்
கழித்தால் உழக்கு அளவே
வாழ்க்கை..



உழக்கிலும் உண்மை
இலக்கானால்
வாழ்க்கை
உலகைவிடப்
பெரிதாகும்
வாழ்வோம் வாருங்கள்
உணர்ந்து...

ஹரணி தஞ்சாவூர்



**மலரும் வதனம்**

மலரின் ஆதாரங்கள்
விரிந்து சிரிப்பது போல
உன் வதனம் சிரிக்கும்
போது மலரின் வாசம் ஒரு
நேரமும் பிறக்குதே. உன்
உதடுகள் சிறிது விரிய
அது புன்னகையாகி உன்
வதனத்தை பிரகாசமாக்குதே
வெள்ளை வெளேரென்று
உன் முத்து பற்களை
பார்க்கும் போது மல்லிகை பூ
நினைவு வருகுதே
மெல்ல வீசிய தென்றல்
காற்று உன் முகத்தை
தொடும் போது உன்
புருவங்கள் விரியுதே
ஆதவன் சூடு தாங்காமல்
உன் முகம் சிவந்து போனதே
மெல்லிய குரலில் நீ
உதடுகள் விரியப்
பேசும்போது கண்களும்
பேசுதே
காலையில் மலர்ந்த மலரின்
மீது இருக்கும் பனித் துளி
போல உன் முகத்தின் மேலே
வியர்வைத் துளி தெரியுதே
காற்று பெரிதாக வீச
தலைமுடி அலை அலையாகப்
பிரிய இதில் உன் வதனம்
பிரகாசமாகுதே
உறங்கினாலும் உன்
முகத்தில் இருக்கும்
பிரகாசம் குறையாமல்
அதிகமாகுதே



பார்க்க
பார்க்க
பரவசம்
ஊட்டும் உன்
முகத்திற்கு
ஈடு ஏது?

உஷா
முத்துராமன்

**சாப்பாட்டு ராமன்**

மாமா மகன் சாப்பாடு
ராமனடி வயிறு கொஞ்சம்
பெரிது சோறு சேர்த்து
போட்டு விடு கட்டி தயிரை
வெட்டி போட்டு மோரை
சேர்த்து ஊற்றி

முறுக்கி முறுக்கி
கரைக்கிறான் பாரு
மொத்தமும் கரைய மட்டும்
ஊறு காயை நாக்கில்
வைத்து சப்பு சப்புன்னு
சப்புறான் பாரு

சட்டி சோற்றையும் பானை
வயிறு நிரம்ப மட்டும்
முட்டி முட்டி குடிக் கிறான்
மூலி பையன் முட்டி முட்டி
குடிக்கிறாண்டி தயிறு
மிச்சம் இல்லை

விரலை சப்பும் சப்பிலே
விரலு சூம்பி போச்சடி
பின் பொல்லாத மனிதன்
போடுராண்டி தூக்கம்
தான் கொறட்டை
சத்தம்கேட்டுக்கோ

சோம்பேறி நாயடி அவன்
சோத் துக்கு தான் ஆளடி
அவன் ஒத்த பார்வையிலே
உலகையே ஒன்னா
அளப்பான்டி மானங்கெட்ட
மாமன்

அறிவுகெட்ட அத்தை மகன்
சாப்பாட்டு ராமனடி அவன்
அத்தை பெத்த தங்கம்
வெளிய
சொன்னா
பங்கம் என்
அருமையான
கணவன் அடி



பேராசிரியர்
முனைவர்
வேலாயுதம் பெரியசாமி

**வறட்சி:**

விசும்பின் துளிகள்
விழுமா என்றே
பசும்புல் செடிகள்
தலைகாட்ட அங்கே
பிடித்த தொழிலாம்
உழவை நம்பி
வெடித்த நிலத்தில்
விசும்பும் விவசாயி!!
குடிக்கும் நீருக்கும்
தட்டுப்பாடு
முடியும்
எப்போது
இந்த
வறட்சி?



வைரமணி
சென்னை

**தமிழ்நாடு இ இதழ்**

**நினைவலைகள்**

உன் தேக குளிருக்கு
என் தேகத்தை
போர்த்தியவனே
உன் காம பசிக்கு
என் இதழின் தேனை
ருசித்தவனே காதலைச்
சொல்லி என்னை
கட்டி அணைத்தவனே
காலப்போக்கில்
காற்றாக கலைந்த
அந்த நாட்களெல்லாம்
இன்னும் ஊற்றாக
ஓடிக்கொண்டேதான்
இருக்கிறது
என் இதயக் கடலில்
உன் நினைவலைகள்

**தேன் அருவி**

உன் எச்சில் பட்ட
முத்த துளிகள்
நீர்வீழ்ச்சியாய்
என் கன்னத்தில்
காட்சியளிக்கிறதாம்
பார்ப்பவர்களெல்லாம்
அதை அருவி என்கிறார்கள்
எனக்கு மட்டும் தானே
தெரியும் அது என்னவனின்

**சில நாள்**

வாழ்க்கையில்
எத்தனையோ விஷயங்கள்
வந்து போகலாம்
மறந்து போகலாம்
ஆனால்... வந்து போகாதது
மறந்து போகாதது
அந்த சில நாட்கள் தானே

**ஒத்தடம்**

உன் முத்தத்தால்
ரணமான என் கன்னம்
இன்னும் குணமாகவில்லை
அவ்வப்போது வந்து
ஒத்தடம்
கொடுத்துவிட்டு போ
உன் உதடுகளால்



பாரதி முத்து
ஒட்டேரிவேலூர்

# வாசகர் கடிதம்

டெல்லி குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட நபர்களை மோடி நேரில் சென்று ஆறுதல் கூறினார். பயங்கரவாத சம்பவம் என மத்திய அரசு அறிவிப்பு. உள்ளூர் செய்திகள் அனைத்தும் அருமையாக உள்ளது. குல்கந்தின் மருத்துவ பயன்கள் தெரியாத பல விஷயங்களை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. நிலவில் நீர் இருப்பதை புகைப்படம் எடுத்து சந்திராயன் பூமிக்கு அனுப்பியது. கரூர் சம்பவம் தொடர்பாக மின்வாரிய அதிகாரிகளிடம் சிபிஐ விசாரணை. பெசன்ட் நகர் அஷ்டலஷ்மி கோயில் பற்றிய கட்டுரை அருமையாக இருந்தது. புதுக்கவிதைகள் அனைத்தும் கனஜோர். சுற்றுலா பகுதியில் பிச்சாவரம் பற்றிய கட்டுரை கண்களுக்கு விருந்து அளித்தது. சாத்தான்குளம் கொலை வழக்கு சம்பந்தமாக சிபிஐ பதில் அளிக்க கோர்ட் உத்தரவு. டெல்லி ரசுக்கட்டுப்பாட்டால் பொதுமக்களுக்கு நெஞ்சு பாதிப்புகள் ஏற்படுவதாக புகார். திருப்பதி தேவஸ்தானத்தில் அசைவ உணவு சாப்பிட்ட இரண்டு ஊழியர்கள் நீக்கம் குருவாயூர் கோவிலுக்கு முகேஷ் அம்பானி 15 கோடி நன்கொடை வழங்கினார். உடல் உறுப்பு தானம் செய்யப்பட்ட இறந்த உடலில் ரத்த ஓட்டத்தை ஏற்படுத்தி உறுப்புகள் புதுப்பிக்கப்பட்டது. ராகுல் தேஜஸ்வின் இருவரும் தூக்கம் இலலாமல் தவிக்கிறார்கள் என பாஜக குற்றச்சாட்டு. பண்டிகை கால வாகன விற்பனைகள் சூடு பிடிக்க துவங்கி உள்ளது . அமெரிக்க அரசு முடங்குவதை தடுக்க மசோதா நிறைவேற்றம். ட்ரம்பு நிம்மதி அடைந்தார். பாகிஸ்தானில் பரவி வரும் டெங்கு காய்ச்சலுக்கு 26 பேர் பலி. பிபிசி இயக்குனரும் உயர் அதிகாரிகளும் ராஜினாமா செய்து உள்ளனர். ஈக்குவட்டார் சிறையில் கைதிகள் மோதலில் 31 பேர் உயிரிழப்பு. இன்றைய செய்திகள் அனைத்தும் சிறந்த முறையில் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது. தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகளும் நன்றிகளும் தெரிவித்துக் கொள்கிறேன் மீண்டும் நாளை சந்திப்போம்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

டெல்லி குண்டு வெடிப்பில்
பாதித்தவர்களை நேரில் பார்த்து
ஆறுதல் கூறினார் பிரதமர் மோடி
இந்திய-அமெரிக்கா வெளியுறவு
அமைச்சர்கள் உரையாடல்
டிசம்பர் ஐந்தாம் தேதி இந்தியா
வருகிறார் ரஷிய அதிபர் புதின்
கர்நாடக தொழில் அதிபரை
கடத்திக் கொன்று உடலை
தமிழக எல்லையில்
வீச்சு#கொலையாளியை
சுட்டுப்பிடித்த போலீசார்
புதுக் கவிதைகள் அட்டகாசம்
வாசகர் கடிதங்கள் வெகு ஜோர்
நூல் விமர்சனம் அமர்க்களம்
துப்பாக்கி சுடுதல் போட்டியில்
கோவை மெட்ரிக் பள்ளி மாணவி
சாதனை#முதல்வர் பாராட்டு
பெரம்பலூரில் பெண்களுக்கான
விழிப்புணர்வு முகாம்
அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம்
தொகுதிகளில் வாக்காளர்
கணக்கெடுப்பு படிவம்
விநியோகம்
டெல்லி: காற்று மாசுபாட்டால்
ஏற்படும் நெஞ்சு
பாதிப்புகள்#டாக்டர்கள்
எச்சரிக்கை
ஈரோட்டில் கடத்தப்பட்ட குழந்தை
நாமக்கல்லில் மீட்பு
அலிபிரியில் அசைவ
உணவு சாப்பிட்ட இரு
ஒப்பந்த ஊழியர்கள் பணி
நீக்கம்#திருப்பதி தேவஸ்தானம்
நடவடிக்கை
ஆந்திரா: எரியும் கற்பூரத்தை
உண்டியலில் போட்ட
பெண்#ரூபாய் நோட்டுகள் கருகி
நாசம்
எஸ் ஐ ஆர்க்கு எதிராக சுப்ரீம்
கோர்ட்டில் வைகோ, செல்வப்
பெருந்தகை மனு தாக்கல்
குருவாயூர் கோயிலுக்கு
முகேஷ் அம்பானி ரூ.15 கோடி
நன்கொடை
போதைப் பொருளாக உடல்
வலி நிவாரண மாத்திரைகள்
விற்பனை#ரவுடி கைது
உடலுறுப்புக்களை தானம்
செய்வதற்காக இறந்த
பெண்ணின் உடலில் ரத்த
ஓட்டத்தைக் கொண்டு வந்த
டாக்டர்கள்
2025-26 நிதியாண்டில் 1.5
மெட்ரிக் டன் சர்க்கரை
ஏற்றுமதிக்கு அனுமதி#மத்திய
அரசு
பாகிஸ்தானுக்கு 19%
இந்தியாவுக்கு 50% #எங்கே
போனது மோடி_டிரம்ப்
நட்பு=ரகுராம் ராஜன் கேள்வி
டி-20 உலகக் கோப்பை
போட்டிக்கு இந்தியா தயாராக
உள்ளதா#கௌதம் கம்பீர்
விளக்கம்
பண்டிகைக்கால வாகன
விற்பனை புதிய உச்சம்
அமெரிக்க அரசு
முடக்கத்தை முடிவுக்கு
கொண்டு வர
மசோதா#டிரம்ப் நிம்மதி
டிரம்ப் உரையை திரித்து
வெளியிட்ட பிபிசி
உயரதிகாரிகள் ராஜினாமா
டிரம்ப் முன்னிலையில்
கம்போடியாவுடன்
கையெழுத்தான
ஒப்பந்தம்#நிறுத்தி வைத்தது
தாய்லாந்து
ஈக்வடார் சிறையில்
வன்முறை#கைதிகள் 31 பேர்
பலி
வெளிநாட்டு பொருட்கள் மீதான
சுங்க வரியை விமர்சனம்
செய்வோர் முட்டாள்கள்#டிரம்ப்
காட்டம்
பாகிஸ்தானில் டெங்கு
காய்ச்சலுக்கு இளம்பெண்
உயிரிழப்பு#இதுவரை 26 பேர்
பலி
மலேசியா அருகே கடலில்
மூழ்கிய படகு#ஏழு அகதிகள்
பலி
அணு ஆயுத சோதனை
நடத்தும் திட்டமில்லை#ரஷியா
உறுதி



**-பி.சுரேகா**
சென்னை

வணக்கம். 13.11. 25

அன்றைய தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் டெல்லி குண்டுவெடிப்பில் பாதித்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார் நம்முடைய பாரதப் பிரதமர் மோடிஜி என்ற செய்தி நமக்கும் ஆறுதலாக இருந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக இருக்க எனக்கு உதவியது பாராட்டுக்கள். திருக்குறளை அருமையான பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். மேல்மலையனூர் ஒன்றியத்தில் நியமன மாற்றுத் திறனாளிகள் பதவி ஏற்பு விழா என்ற செய்தி மகிழ்ச்சியாக இருந்தது. இது ஒரு ஊக்கமான தகவல் என்று எண்ணி படித்தேன். நலம் தரும் மருத்துவம் பகுதியில் வந்த குல்கந்தின் மருத்துவ குணங்கள் தெரிந்து கொண்டேன். இனி எப்போது குல்கந்து கிடைத்தாலும் சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ தீர்மானித்த செய்தி. பாராட்டுக்கள். நிலாவில் நீர் இருப்பதற்கான புகைப் படத்தை அனுப்பிய சந்திராயன்-2 ஆர்பிட்டர் என்று செய்தி மகிழ்ச்சியாக இருந்தது. இனி நிலவிலும் குடித்தனம் செய்யலாம் என்று எண்ண வைத்தது. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் வந்த தாந்தியா தோபே அவர்களின் வரலாறும் அவரைப் பற்றிய செய்திகளும் மிகவும் அற்புதம். வரலாற்றுச் செய்திகளை தெரிந்து கொள்ள நல்ல ஒரு பகுதியாக எண்ணி தினமும் ஆர்வமுடன் படித்து ரசிக்கிறேன். பல்சுவை பகுதியில் வந்த பெப்பர் காளான் எப்படி என்ற செய்தி புதுமையாக இருந்தது. நல்ல அருமையான புதுமையான செய்திகளை கொடுக்கும் இந்த பக்கத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

வாங்க சம்பாதிக்கலாம் என்று அழைத்து நல்ல நல்ல தகவல்களை சொல்லி சம்பாதிக்க காத்திருக்கும் பலருக்கும் ஊக்கமளிக்கும் செய்தி கொடுக்கும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். மருத்துவக் கல்லூரி வேள்வி யாகத்தில் முன்னாள் கவர்னர் தமிழிசை அவர்கள் கலந்து கொண்ட செய்தியும் படமும் பார்ப்பதற்கு அருமையாக இருந்தது. ரேஷன் கடையில் கலெக்டர் ஆய்வு செய்தது மிகவும் நல்லது. சுற்றுலா பக்கத்தில் வந்த பிச்சாவரம் பற்றி படித்ததும் அங்கு சென்ற நினைவுகள் மனதுக்குள் வந்தது. பிச்சாவரம் மாங்குரோவ் காடுகள் மிக அற்புதமாக இருக்கும். அந்த படகில் பயணிக்கும் சுற்றுலா பயணிகளை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. நல்ல நல்ல தகவல்களை மிக அற்புதமாக கொடுக்கும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

டெல்லி காற்று மாசுபாட்டால் அதிகரித்து வரும் நெஞ்சு பாதிப்புகள் என்று டாக்டர்கள் எச்சரிக்கை செய்தது அதிர்ச்சியான தகவல்.

உடல் உறுப்புகளை தானம் செய்வதற்காக இறந்த பெண்ணின் உடலில் ரத்த ஓட்டத்தை கொண்டு வந்த டாக்டர்கள் என்ற செய்தி விஞ்ஞானத்தின் அற்புதத்தை கண் முன்னே காட்டியது.

விஞ்ஞானம் இப்படி வளர்ந்து பல நன்மைகளை தருவது மகிழ்ச்சியாக உள்ளது.

அமெரிக்காவின் அரசு முடங்கியதை படித்திருக்கிறோம். அந்த அரசு முடக்கத்தை முடிவுக்கு கொண்டு வர மசோதா என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் சொன்ன செய்தி அயல்நாட்டு செய்திகளை அருமையாக தெரிந்துகொள்ள முடிந்தது.

எல்லா பக்கத்திலும் நல்ல செய்திகளை மிக அற்புதமாக தொகுத்துக் கொடுத்து விடியலுக்கு புதிய சந்தோஷத்தை கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**

















LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com 7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்பட கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

**டிரைவர்கள் தேவை**

சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.

ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்

தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.

**ACCOUNTANT**
Tally knowledge must

**OFFICE STAFF**
+2 or Degree

SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.
93676-77779

**WANTED**
Arc-Welder-
Compressor Air Tank-6
Gas-Welder Compressor
Air Driyer-5
Service-Engineer-
Compressor-7
Helper-3
Compressor Fitter-2
**Jayam Equipments**
Ganapathy,
Coimbatore-06
9944642406

**WANTED**
We are Looking For
**BUSINESS PARTNERS**
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
98945 72840






**WANTED**
CHENNAI PROJECT
PIPING
- FABRICATORS
- TIG / ARC WELDERS
- SUPERVISORS
- GRINDERS
90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

**PERMANENT JOB**
- Plumbers
( பிளம்பர்கள் )
- Water Purification
Service Technicians
MNC COMPANY
9003101308

**ஆட்கள் தேவை**
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெயிள் ஷூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் கான்ட்ராக்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome
jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

**MACHINE REPAIR TECHNICIAN WANTED**
Construction Company in
**CALICUT, Kerala**
requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.
GOOD SALARY
Accommodation Available
85938 12049

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd
**International Courier Service**
**ஆண் / பெண் வேலைக்கு தேவை**
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

**WANTED**
**ALAGU SANITARY & HARDWARES**
Ramnagar, Gandhipuram, CBE
- Experienced Staff -
- Sales - Accounts Asst
- Godown Incharge
3 - 5 years experience. F/M
Freshers are also welcome
Attactive Salary + Inc
89032 19125

**INDUSTRIAL SALES EXECUTIVE WANTED**
FOR REPUTED BEARING DISTRIBUTOR DEGREE/ DIPLOMA IN ENGG WITH EXPERIENCE JOP IS COIMBATORE BASED AND EXTENSIVE TRAVELLING IN AND AROUND.
Send Resume to
cbe@pibl.co.in

**ADMIN EXECUTIVE**
Salary: 18K to 20K
Experienced system knowledge
**BILLING EXECUTIVE**
Salary: 18K to 20K
Any / Preferred B.Pharm, D.Pharm
**MARKETING EXECUTIVE**
Salary: 30K to 35K
(Monthly. Inc + Allow) Min 3yrs Exp
Shri Kalki Speciality's (P) Ltd., D.No. 4/22, Ramakrishna St, T.Nagar.
Ph: 8925266127 / 8925713334

**WANTED**
FOUNDRY SUPERVISOR
SENIOR ACCOUNTANT
ACCOUNTS ASSISTANT
Sathy Road, Kovilpalayam
88700-04951 / 52

**WANTED**
**Receptionist**
FOR DENTAL CLINIC
(FEMALE CANDIDATE)
94432 43070
Peelamedu, Coimbatore

**ஆட்கள் தேவை**
கோவையில் உள்ள நிறுவனத்திற்கு GI PIPES வெல்டிங் தெரிந்த (3 முதல் 5) வருடம் அனுபவம் உள்ளவர்கள் சைட்டில் வேலை செய்யும் நபர்கள் உடனடி தேவை.
93444 55102
72000 55102

**ஆட்கள் தேவை**
கோவை காட்டூரில் உள்ள இரும்பு வணிக நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
கேஸ்கட்டர்கள்
மார்கர்கள்
ஹெல்பர்கள்
அனுபவத்திற்கேற்ற நல்ல சம்பளம் தரப்படும்
0422 2230352
99949 91236

**WANTED**
- Marketing / Sales Manager & Executives
- Service Manager & Supervisor
- Telecaller / CRO (F)
- Store incharge(M)

SWASTIK REFRIGERATION TRADERSS
Airconditioner Spare parts Distributors
Kodambakkam & Porur
98410 42122

**WANTED**
FEMALE / MALE STAFF
For Office at RS Puram
1. ADMIN / ADMIN ASSISTANT
2. ACCOUNTANT
3. OFFICE BOY
Min 3yrs Experience
email: haasyacom@gmail.com
93622 22222

**WANTED**
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE (Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

**WANTED**
30 years old reputed engineering & manufacturing company requires
**Mechanical CADD Draftsman**
(DME - Exp : 2-3 Years only)
**Office Assistant** (Female Candidates only)
with computer knowledge & Tally
(Exp 1-2 years) for office @ valasaravakkam
Apply by mail vintechchennai@yahoo.co.in
*Preferences given to nearby candidates

**REQUIRED**
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

**JOB VACANCY**
- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

AMRIT MEDICAL CENTRE
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm


**ஆட்கள் தேவை**
திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்சரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்
தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
Ct: 93800 72095 / 98416 46097

**WANTED**
**EXECUTIVES**
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

**DETECTIVE Intel.**
#168, Defence Colony, Ch-32.
46 ஆண்டுகள் துப்பறிவதையே தொழிலாக கொண்ட
Dr. V. குலோத்துங்க சோழன்
Best English Write/Speak with Computer skill
HIGH PROFILE LECTURERS -M/F
To Enroll Students to Educate
"DETECTIVE COURSES",
INCOMPARABLE with IAS, IPS, Dr., BE, BL..
Prepared by us i.e. 15 days Internship/ 6 Mths / 1Yr/ Certificates and Degree upto Ph.D level
Lawyers : Gather Evidence for Sr. Lawyers.
Marketing Professionals: Solving Problems of MNC's, Big Business Circles, etc.
TARGET ORIENTED, SALARY UPON TALENTS.
kulo.cholan@gmail.com
Ct: 94440 53979



# பல்சுவை களஞ்சியம்




## கர்ப்பிணிப் பெண்கள் வேர்க்கடலையை சாப்பிடலாமா?



அனைவருக்கும் பிடித்த வேர்க்கடலை இதய நோயை தடுக்கவும், கர்ப்பிணிப் பெண்களின் உடல்நல ஆரோக்கியத்திற்கும் மிகவும் உதவுகிறது. வேர்க்கடலையில் என்னென்ன நன்மைகள் இருக்கிறது

வேர்க்கடலையில் உடலுக்கு நன்மை செய்யும் கொழுப்பு அதிகம் உள்ளது.

வேர்க்கடலையில் உள்ள தாமிரச் சத்து நமது உடலில் எல்.டி.எல். () எனப்படும் கெட்ட கொழுப்பைக் குறைத்து நன்மை செய்யும் எச்.டி.எல். () கொழுப்பை அதிகப்படுத்துகிறது.

வேர்க்கடலையில் உள்ள வைட்டமின் பி3 மூளையின் செயல்பாட்டைத் தூண்டுவதோடு, நினைவாற்றலையும் அதிகரிக்க உதவுகிறது.

உடல் பருமன் உள்ளவர்கள் உடலைக் குறைக்க விரும்பினால், சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக ஒரு கைப்பிடி அளவு வறுத்த வேர்கடலையைச் சாப்பிடவும். இத்துடன் சீனி சோ;க்காத காபி அல்லது டீ அருந்தவும். பிறகு ஒரு மணி நேரம் கழித்துச் சாப்பிட அமர்ந்தால், உணவை அதிக அளவில் சாப்பிட முடியாது. இதன் பொருட்டு உடல் எடையும் படிப்படியாகக் குறையும்.

வேர்க்கடலையை தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வருவதன் மூலம், இதய நோய் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் குறைகிறது. இதில் உள்ள நல்ல கொழுப்பு சத்தான மோனோஅன்சேச்சுரேட் ஒலீக் அமிலம் போன்ற ஆன்டி ஆக்ஸிடென்ட் ஆகியவை இதய வால்வுகளை பாதுகாக்கிறது. நிலக்கடலையில் உள்ள பாலிபீனால்ஸ் என்ற ஆன்டி ஆக்ஸிடென்ட் நோய்வருவதைத் தடுப்பதுடன் இளமையைப் பராமரிக்கவும் உதவுகின்றது. இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும் சோடியத்தின் அளவு, வேர்க்கடலையில் மிகவும் குறைவாக காணப்படுவதால் வேர்க்கடலை சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்காது. மாறாக இரத்த கொதிப்பு குறையும்.

## கருவேப்பிலை பொடி செய்வது எப்படி?



கறிவேப்பிலை பொடி செய்வதற்கு முதலில் ஒரு வாணலியை சூடு செய்து அதில் 2 டேபிள் ஸ்பூன் அளவிற்கு கடலைப்பருப்பு, நான்கு டேபிள் ஸ்பூன் உளுத்தம் பருப்பு, 2 டேபிள் ஸ்பூன் கொத்தமல்லி விதை, 1/4 ஸ்பூன் மிளகு, ஒரு ஸ்பூன் கருப்பு எள் ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவற்றோடு நான்கு பல் பூண்டினை சேர்க்கவும்..........

இதனை குறைவான தீயில் வைத்து இரண்டிலிருந்து மூன்று நிமிடங்கள் நன்கு வறுத்துக்கொள்ள வேண்டும்........

இவை ஓரளவு வறுபடும் பொழுதே சிறிதளவு கட்டிப் பெருங்காயத்தை சேர்த்து அதையும் நன்கு வறுத்துக் கொள்ளவும். கறிவேப்பிலை பொடிக்கு கூடுமானவரை கட்டிப் பெருங்காயத்தை பயன்படுத்துதல் நல்லது......

இப்பொழுது உங்கள் காரத்திற்கு ஏற்ப இதில் பத்திலிருந்து பதினைந்து காய்ந்த மிளகாய்களை சேர்க்கவும். மிளகாய் பருப்பின் சூட்டிலேயே நன்கு வெந்ததும் இரண்டு கைப்பிடி அளவிற்கு கறிவேப்பிலையை சேர்க்க வேண்டும்.

கறிவேப்பிலையை இதில் சேர்க்கும் முன்பு நன்கு கழுவி சுத்தம் செய்து நிழலில் காயவைத்த பிறகு சேர்க்க வேண்டும். இதனை ஒரு நிமிடம் வரை நன்கு வறுக்கவும்.......

கறிவேப்பிலை நல்ல மொறுமொறுப்பாக வறுபட்டதும். இதனை ஆறவைத்து ஒரு மிக்ஸி ஜாரில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனுடன் தேவையான அளவு உப்பு மற்றும் சிறிதளவு வறுத்த புளி சேர்த்து பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.....

பொடி சூடாக இருப்பதால் இதனை ஆற வைத்து ஒரு கண்ணாடி சாரில் சேமித்து வைக்கலாம். ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும்......

இந்த கறிவேப்பிலை பொடியை சாதம், இட்லி, தோசை என அனைத்திற்கும் பயன்படுத்தலாம். சுவையான இந்த கறிவேப்பிலை பொடி சத்துக்களும் நிறைந்திருப்பதால் தினமும் ஒரு ஸ்பூன் அளவு உணவில் சேர்த்துக் கொள்ளுதல் மிக நல்லது.

தொகுப்பு


**கோ.சுரேஷ்குமார்.**
இயற்கை உணவு ஆர்வலர்,
கோவில்பட்டி,

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர்; பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன? | சூரிய காந்தி |
| பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்? | கிளி |
| இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான்? | நிலா |
| அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன? | அம்மி குளவி |
| ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன? | மூக்கு |
| ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு அது? | சந்திரன் |



# ஜோக்ஸ்

காதல் One Side -ஆ பண்ணினாலும்
Two Side-ஆ பண்ணினாலும்
கடைசியா Suicide- தான் பண்ணக்கூடாது

இப்படிக்கு
காதல் பற்றி Four Side-ம் யோசிப்போர் சங்கம்

———————————

உன் பெயரைக்கூட நான் எழுதுவதில்லை..
ஏன் தெரியுமா?

"பேனா" முனை உன்னை குத்திவிடுமோ என்று..

இப்படிக்கு
Spelling தெரியாமல் சமாளிப்போர் சங்கம்

———————————

"டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே...

இதையேன் பெரிசா சொல்றீங்க...?"

"அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!"

———————————

ஒருவர்: டாக்டர் செலவு மட்டும் எனக்கு மாசம் ஐந்நூறு ரூபாய் ஆகுது.

மற்றொருவர்: டாக்டரோட செலவைப் போய் நீங்க ஏன் பண்றீங்க?

———————————

"சென்னையிலே தண்ணிக் கஷ்டமாமே?"

ஆமா! குடிகாரங்க பெருத்துப் போயிட்டாங்க!"

———————————

Bank லோன் கிண்டல்..!

"ஹலோ! நாங்க பேங்க்லேர்ந்து பேசறோம், உங்க அக்கவுண்டை பேஸ் பண்ணி உங்களுக்கு 10 லட்ச ரூபாய் வரைக்கும் லோன் சாங்ஷன் ஆகியிருக்கு சார்...



அப்படியா! உடனே அந்தப் பணத்தை என்னோட சேவிங்ஸ் அக்கவுண்ட்லயே போட்டுருங்க!

?!?!?!

———————————

இஞ்ஜினியரிங் Class Room-ல்..

ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும் வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?

———————————

"தேள் கொட்டினால் பயங்கரமா வலி இருக்கும்னு சொல்வாங்க...

நீங்க இப்படி சிரிக்கிறீங்களே...?"

"தேள் கொட்டினது என்னோட மனைவிக்கு...!"

———————————

திருடன் 1: டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாமகூட ஒளிச்சி வச்சிட்டோமே.....

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்ல வரும்ல... அப்ப பார்த்துக்கலாம்.

———————————

"என் உயிரைக் காப்பற்றிய நர்சையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

"எப்படிக் காப்பாத்தினா?"


"ஆபரேசன் ரூமிலேயிருந்து பின்வழியா என்னைத் தப்பிச்சிப் போக வச்சது அவதான்!"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## பக்தரின் ஆசையை நிறைவேற்றிய பாபா

நம் நாட்டில் எத்தனையோ மகான்கள் வாழ்ந்து மறைந்திருந்தாலும் இன்றும் மக்களால் வழிபடப்படுபவர்கள் ஒரு சிலர் தான். அதிலும் "சீரடியில்" வாழ்ந்து, முக்தி அடைந்த "ஸ்ரீ சாய் பாபாவைப்" பற்றி கேள்விப் படாதவர்கள் இருக்கவே முடியாது.

இவரது அருளால் தங்களின் பல கஷ்டங்கள் தீர்க்கப்பட்டு மகிழ்வோடு இருக்கும் பக்தர்கள் கோடான கோடி பேர். அப்படி மக்களுக்காக மக்களுடன் வாழ்ந்து முக்தியடைந்த பாபா தன் பக்தன் ஒருவனின் முற்பிறவி ஆசையை நிறைவேற்றிய சம்பவத்தைப் பற்றி இங்கு காண்போம். ஒரு சமயம் "சீரடி" தலத்தில் இருக்கும் "சாய் பாபாவை" தரிசிப்பதற்கு, அவருக்கு முன்னேமே நன்கு பரிட்சயமான ஒரு பக்தை வந்தார்.




சாயியை தரிசித்து அவர் கிளம்பிய போது அவரை நிறுத்திய சாய் பாபா, அவரிடம் இன்று மதியம் அவர் வீட்டிற்கு ஒரு "எருமைமாடு" விருந்தாளியாக வரப்போவதாகவும், ஆதலால் அது உண்ண "போளிகளை" தயாரிக்குமாறு கூறினார். அதை ஏற்ற அந்த பக்தையும் சாய் பாபா கூறியவாறே, போளிகளை தயார் செய்து வைத்து அந்த எருமைமாட்டிற்காக காத்திருந்தார்.

சரியாக சாய் பாபா கூறிய அந்த மதிய நேரத்தில் ஒரு எருமைமாடு, அந்த பக்தையின் வீட்டிற்கு முன் வந்து நின்றது. அதைக்கண்டதும் அந்த பக்தை, சாய் பாபா கூறியவாறே அனைத்து போளிகளையும் அந்த எருமைக்கு உண்ணக் கொடுத்தார். அதையெல்லாம் உண்டு முடித்ததும் அந்த எருமை அங்கிருந்து, சற்று தூரம் நடந்து சென்று கீழே விழுந்து இறந்தது.

இதைக் கண்டதும் அந்த பக்தை திடுக்கிட்டு, நேரே சாய் பாபாவிடம் சென்று இவ்விஷயத்தை கூறினார். அதைக் கேட்ட சாய் பாபா, "இறந்த அந்த எருமைமாடு அதன் முற்பிறவியில் தனது பக்தனாக இருந்ததாகவும், அப்பிறவியில் அந்த பக்தன் இறக்கும் தருவாயில் அவனுக்கு மிகவும் பிடித்த "போளிகளை" உண்ணமுடியாத ஏக்கத்தோடு இறந்து போனதாகவும், இப்போது எருமைமாடாக பிறவியெடுத்திருக்கும் தன் பக்தனின் ஆசையை தான் நிறைவேற்றியதால், அந்த ஆசை நிறைவேறிய மனதிருப்தியோடு அந்த எருமை இறந்து விட்டதாக" கூறினார். இதைக் கேட்ட அந்த பக்தை "எல்லோரின் இம்மையையும், மறுமையையும் அறிந்தவரான" சாய் பாபாவின் கருணையை எண்ணி அவரை உள்ளன்போடு வணங்கினார்.

## கோடி புண்ணியம் தரும் கோரக்கர் வழிபாடு



வடக்கு பொய்கை நல்லூரில் உள்ள கோரக்கர் சித்தர் ஆசிரமத்தை எந்த நாட்களிலும் சென்று வழிபடலாம். இங்கு ஒவ்வொரு நாளும் 3 கால பூஜைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக குருவாரம் எனப்படும் வியாழக்கிழமை (கோரக்கர் பிறந்த நாள் என்பர்) அன்று வழிபடுவது சிறப்பாகும்.

வியாழக்கிழமைகளில் காலை முதல் உபவாசம் இருந்து இரவு வழிபட்டு, பிரசாதம் உண்டு, கோவில் வளாகத்தில் தங்கி உறங்கி, விடியல் நீராடி கோரக்கரை வழிபட்டு திரும்பினால் மனக்கவலைகள் அகலும்.

மேலும், பவுர்ணமி அன்று வழிபட்டால் ஒரு மாதம் வழிபட்ட பலன் கிடைக்கும். அதிலும், ஐப்பசி மாதத்தில் வரும் பவுர்ணமி அன்று அன்னாபிஷேக வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெறும். அன்று கோரக்கரை தரிசிப்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஐப்பசி பரணி தினத்தன்று வழிபட்டால் ஓராண்டு வழிபட்ட பலன் கிடைக்கும். தொடர்ந்து, 13 பவுர்ணமிகள் கோரக்கரை தரிசித்தால் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அதுமட்டுமின்றி, கோரக்கரை வழிபட்டால் திருமணமாகாத இளம் பெண்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தைபேறு இல்லாத தம்பதிக்கு குழந்தைபேறு கிட்டும். புற்றுநோய் முதலிய அனைத்து நோய்களில் இருந்தும் விடுபடலாம். மன வளர்ச்சி குன்றியோர் இங்கு வந்து சென்றால் மனநலம் பெறுகிறார்கள்.

களவுபோன பொருட்கள் திரும்ப கிடைக்கின்றன. தொலை தூர பயணம் மேற்கொள்ளும் போது இவரை வணங்கி புறப்பட்டால் சிறப்பான பயணமாக அமைவதோடு செல்வ வளமும் கூடும் என்கின்றனர் பக்தர்கள்.

கருவறையில் உள்ள சிவன், உமை, சித்தர் திருவடிகளுக்கு பாலாபிஷேகம் செய்து வழிபடுவது குடும்ப பிரச்சினைகளை நீக்குவதோடு, வெளியில் சொல்ல முடியாத கவலைகளையும் அகற்ற துணையாகிறது. நூற்றுக்கணக்கான துறவிகள் உலக நாடுகளில் இருந்து கோரக்கரை வழிபட்டு ஞான விரிவு பெறுகிறார்கள்.

கோரக்கர் படத்தை வீடுகளில் வைத்து பூஜிப்பதும், பயண நேரங்களில் சட்டை பையில் வைத்து கொண்டு பயணிப்பதும் நன்மை தருவன. இவரை இயல், இசை, நாடக கலை வல்லுநர்கள் வழிபட்டு புதிய வாய்ப்புகளை பெற்று உயர்கிறார்கள். சித்தர்கள் போற்றிய பெரும் சித்தர் கோரக்கர். அதனால் அவரை தொழுவது சித்தர் உலகையே பூஜித்து கோடி புண்ணியப்பலன் பெறுவதற்கு சமமாகும்.

## ஆகாச மார்க்கமாக வந்தருளும் ஆகாச மாரியம்மன்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே நாச்சியார்கோவிலில் பிரசித்தி பெற்ற ஆகாச மாரியம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் ஆகாச மாரியம்மனுக்கு திருவுருவத் திருமேனி கிடையாது. ஜோதி வடிவில் அம்மனை பக்தர்கள் வழிபடுகின்றனர். சமயபுரம் மாரியம்மனே இந்த கோவிலில் அருவமாக இருந்து ஆட்சி செய்கிறார் என்கிறார்கள்.

**தல வரலாறு**

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு, திருநறையூரில் கவரைச் செட்டியார்கள் என்ற வணிக சமூகத்தார் பாரம்பரியமாக கண்ணாடி வளையல் வியாபாரம் செய்து வந்தனர். இவர்கள் குதிரையில் ஊர் ஊராக சென்று வியாபாரம் செய்யும் பழக்கத்தை உடையவர்கள். ஒருமுறை, சமயபுரம் கோவிலுக்கு பங்குனி பெருவிழாவின்போது வணிகம் செய்ய வந்தனர். இரவில் அங்கேயே தங்கி, உறங்கினர்.

அவர்களில் பெரியவர் ஒருவரின் கனவில் தோன்றியசமயபுரம் மாரியம்மன், இளம்பெண் வடிவம் எடுத்து கைகளுக்கு கண்ணாடி வளையல்களை அணிவிக்க கூறினார். அந்த பெரியவரும் அப்பெண்ணின் பொன்னிற கைகளில் வளையல் அணிவிக்க முயன்றார். ஆனால் அணியும்போது வளையல்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக உடைந்து கீழே விழுந்தது. இதனால் வியாபாரி குழப்பமடைந்து, என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்.

தெய்வீக அம்சமாக தோற்றமளித்த அப்பெண்ணின் கைகளை வளையல்களால் அலங்கரிக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டவர், "தாயே, வளையல்கள் அனைத்தும் உடைந்து விட்டன. உன் அழகிய கைகளை வளையல்களால் அலங்கரிக்க என்னிடம் இப்போது வளையல்கள் இல்லை. என் ஊருக்கு வந்தால் உன் இரு கைகளுக்கும் விதவிதமான வளையல்கள் அணிவித்து அலங்கரிப்பேன். உனக்கு முல்லை, மல்லிகை மலர்களைச் சூட்டுவேன்" என்று அன்புடன் வேண்டினார்.

இதைக்கேட்டு இளம்பெண் வடிவில் வந்த அம்மன் சிரித்து மறைந்தாள். உடனே, வியாபாரி கனவு கலைந்து எழுந்தார். அவரின் அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வளையல்கள் அனைத்தும் உடைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். தவிர, அவருடன் வந்திருந்த மற்ற வியாபாரிகளுக்கு அம்மை போட்டிருப்பதையும் கண்டார். இதனால் அந்த பெரியவர் மிகவும் மனம் வருந்தினார். இது சமயபுரத்தாளின் சோதனை என்பதை அறிந்த அவர் கோவிலை நோக்கிக் கைகூப்பி வணங்கி நின்றார்.

விடிந்ததும் கோவில் அர்ச்சகர் அந்த வியாபாரியிடம், "ஐயா, வெளியூரிலிருந்து வந்திருக்கும் வளையல் வியாபாரி தாங்கள் தானே? உடைந்த வளையல்களுக்கு பதிலாக இந்த பொற்காசுகளை வைத்துக் கொள்ளுங்கள். சமயபுரத்தாள் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்றார். மேலும், அம்மை நோய் தாக்கியவர்களுக்கு மாரியம்மனின் அருட்பிரசாதமான திருநீற்றை வழங்கினார். அவர்கள் அதை நெற்றி மற்றும் உடல் முழுவதும் பூசியவுடன் அம்மை நோய் குணமடைந்து எழுந்தார்கள்.

கனவில் வளையல் போட்டுக் கொள்ள வந்தவள் சமயபுரம் அன்னையே என்பதை உணர்ந்து கொண்ட அவர், சக வியாபாரிகளிடமும் கூறினார். இதனால் மகிழ்ச்சி அடைந்த வியாபாரிகள், தங்கள் அனைவருக்கும் அன்னை காட்சி தரவேண்டும் என்று வேண்டினார்கள். அதை ஏற்று அன்னை ஆகாயத்தில் அன்ன வாகனத்தில் காட்சி தந்து அருளாசி வழங்கினாள். அன்னையை தரிசித்த வியாபாரிகள், "தாயே, ஆகாச மாரி.. ஆகாச மாரி.." என போற்றி புகழ்ந்து வணங்கினர். பின்பு, "எங்கள் ஊருக்கு வந்து அருள வேண்டும்" என்று ஆகாச மாரியம்மனை மனமுருக வேண்டினார்கள்.

இதைக் கேட்ட சமயபுரம் மாரியம்மன் அவர்களிடம், "உங்கள் ஊர் எது?" என்று கேட்க, "நளிர்வாய் முல்லை முறுவலிக்கும் திருநறையூர்" என்றனர். அவர்களது பக்தியை மெச்சிய அன்னை, "முல்லைக்கும், மல்லிக்கும், கை வளையல்களுக்கும் ஆண்டுதோறும் வைகாசி மாத அமாவாசைக்கு அடுத்த வெள்ளிக்கிழமை சமயபுரத்திலிருந்து ஆகாச மார்க்கமாக திருநறையூருக்கு வந்து, பத்து நாட்கள் தங்கிவிட்டு மீண்டும் சமயபுரம் திரும்பி விடுவேன்" என்று அருளினாள். சமயபுரத்தாள் சொன்னதுபோல் ஒவ்வொரு வருடமும் திருநறையூர் தலம் வந்து தங்கி அலங்காரத்துடன் காட்சி தந்து அருள்புரிகிறாள் என்பது ஐதீகம்.

**வெள்ளிக்குடத்துடன் ஆகாச மாரியம்மன் வைகாசி திருவிழா**



இந்தக் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும், வைகாசி மாதம் அமாவாசையை அடுத்த வெள்ளிக்கிழமை தொடங்கி, பதிமூன்று நாட்களுக்கு திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அப்போது சமயபுரம் மாரியம்மன் ஆகாய மார்க்கமாக இங்கு வந்து, திருவிழாவுக்கு என்று செய்யப்படும் விக்ரகத்தில் சேர்ந்து தரிசனம் கொடுப்பதாக ஐதீகம். இந்த ஊர் மக்கள் அளிக்கும் கண்ணாடி வளையல்கள், மல்லிகை, முல்லை பூக்களை ஏற்றுக் கொள்வதற்காகவே சமயபுரத்தாள் ஆகாய மார்க்கமாக இந்த ஊருக்கு வந்து திருவிழாவில் கலந்து கொள்கின்றாள் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

திருவிழா நடைபெறும் அனைத்து நாட்களும் செப்புக் குடத்தில் கலசம் வைக்கப்பட்டு விழா எடுக்கப்படுகின்றது. கலச நீரும், அம்மனுக்குச் சாத்தப்படும் எலுமிச்சை மாலையில் உள்ள எலுமிச்சம் பழமும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. திருவிழாவில் தர்ப்பை புல்லால் அம்மன் உருவாக்கப்படுகிறார். ஒவ்வொரு நாளும் லட்சுமி, சரஸ்வதி, மதனகோபாலன் போன்ற பல்வேறு வடிவங்களில் அம்மன் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகிறாள். கடைசி நாளில் ராஜராஜேஸ்வரி வடிவத்தில் உச்சம் பெறுகிறாள்.

பதிமூன்றாம் நாள் அம்மன் நின்ற கோலத்தில் தேரில் சமயபுரத்திற்கு எழுந்தருள்வதுடன் விழா நிறைவு பெறுகிறது. அச்சமயம் அம்மன் கையில் வெள்ளிக்குடம் சுமந்தவாறு வீதியுலா நடைபெறும். இதன்மூலம், அம்மன் சமயபுரம் செல்கிறாள் என்பது நம்பிக்கை. இக்கோவிலில், வைகாசி மாதம் நடைபெறும் திருவிழாவை தவிர மற்ற நாட்களில் அம்மன் உருவமற்றவராக அதாவது சூட்சும ரூபத்தில் இருக்கிறார்.

**கோவில் தோற்றம்**

திருமணத் தடை உள்ளவர்கள், குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் இங்குள்ள அம்மனை வேண்டிக்கொள்கின்றனர். வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள், அம்மனுக்கு மல்லிகைப் பூ, வளையல்களை காணிக்கையாக செலுத்துகின்றனர். மேலும், காவடிகள், அங்கப்பிரதட்சணம், மாவிளக்கு ஏற்றுதல் போன்ற பல்வேறு நேர்த்திக்கடனை செலுத்தி வழிபடுகிறார்கள்.

**அமைவிடம்**

கும்பகோணத்தில் இருந்து திருவாரூர் செல்லும் சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் நாச்சியார்கோவிலில் (திருநறையூர்) அமைந்துள்ளது, ஆகாச மாரியம்மன் கோவில்.

## அருணகிரிநாதருக்கு வழிகாட்டிய விராலிமலை முருகன்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முருகன் கோவில்களில் மிகவும் பிரசித்தி பெற்றது, விராலிமலை முருகன் கோவில். மலைமேல் அமைந்துள்ள இந்த கோவிலில் முருகப்பெருமான் வள்ளி - தெய்வானையுடன் மயில் மீது அமர்ந்து அருள்பாலித்து வருகிறார்.

**தல வரலாறு**

ஒரு காலத்தில் இந்தப் பகுதி குரா எனும் ஒரு வகை மரங்கள் நிறைந்த காடாக இருந்துள்ளது. ஒரு முறை வேடன் ஒருவன் வேட்டையாட வந்தபோது, வேங்கை ஒன்று அவன் கண்ணில் பட்டது. அவன், அதனை வேட்டையாட வேண்டும் என்பதற்காக விரட்டி சென்றான். அப்போது, அந்த வேங்கை வேகமாக ஓடி ஒரு குரா மரத்துக்கு அருகில் வந்ததும் காணாமல் மறைந்தது. இதனைக் கண்ட வேடன் ஆச்சரியப்பட்டான்.

அப்போது, திடீரென்று அங்கு தோன்றிய மயிலும், விபூதி வாசனையும் அங்கே முருகப்பெருமான் சூட்சுமமாக இருப்பதை உணர்த்தியது. பிறகு, ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அவ்விடத்தை ஆறுமுகனாரின் உறைவிடமாகக் கொண்டு முருகனின் விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினர் என்று கூறப்படுகிறது.

ஒரு முறை அருணகிரி நாதர் திருச்சியில் உள்ள வயலூர் தலத்துக்கு வந்தார். அங்குள்ள முருகப்பெருமானை திருப்புகழ் பாடி விட்டு புறப்படும்போது, 'விராலிமலைக்கு வா' என்று முருகப்பெருமான் அசரீரியாக அழைத்தார். இதையடுத்து, விராலிமலையை நோக்கி பயணித்த அருணகிரிநாதருக்கு விராலிமலை முருகன் இருக்கும் இடம் புலப்படவில்லை. அப்போது வேடன் உருவில் வந்த முருகப்பெருமான், அருணகிரிநாதருக்கு வழிகாட்டியதாக கூறப்படுகிறது. பின்பு அருணகிரிநாதர், விராலிமலை முருகப்பெருமானை வழிபட்டு அஷ்டமா சித்தி பெற்றார் என்கிறது தல புராணம்.

அருணகிரிநாதர், திருப்புகழில் இத்தலத்து முருகப் பெருமானை 18 முறை மனமுருகிப் பாடியுள்ளார். வசிஷ்டரும், அவரது மனைவி அருந்ததி தேவியாரும் இங்கு வந்து முருகப்பெருமானை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றதாக கூறப்படுகிறது.



**கோவில் அமைப்பு**

கோவில் 207 படிகளுடன் மலை உச்சியில் அமைந்துள்ளது. கோவிலில் இடும்பன், மீனாட்சி சுந்தரேசுவரர், சந்தானக்கோட்டம், காசி விஸ்வநாதர் விசாலாட்சி ஆகியோரது சன்னிதிகள் உள்ளன. கருவறையில் முருகப்பெருமான், சுமார் பத்தடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சி தருகிறார். இவர் ஆறுமுகங்கள், பன்னிரு கரங்களுடன், வள்ளி - தெய்வானை சமேதராக கல்யாண திருக்கோலத்தில் அருள்புரிகின்றார். பிரகாரத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், அருணகிரிநாதர், சண்டிகேஸ்வரர், பைரவர் சன்னிதிகளும் உள்ளன.

இந்த ஆலயத்தில் காற்றாடி மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மலை அடிவாரத்தின் தென்பகுதியில் சரவணப் பொய்கை உள்ளது.

**விழாக்கள்**

கோவிலில் ஆண்டுதோறும் சித்ரா பவுர்ணமி, வைகாசி விசாகம், கந்த சஷ்டித் திருவிழா (சூரசம்காரம்), கார்த்திகை தீபம், நவராத்திரி விழா, தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்பட பல்வேறு திருவிழாக்கள் வெகுவிமரிசையாக நடைபெறும்.

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள், நேர்த்திக்கடனாக தங்களுக்கு குழந்தை பிறந்ததும் இங்கு வந்து ஆறுமுகனிடம் குழந்தையை கொடுத்து விடுவர். பின்பு குழந்தையின் தாய்மாமன் அல்லது சிற்றப்பன்மார்கள் மூலம் ஆறுமுகனிடம் தவிட்டைக் கொடுத்து, குழந்தையை பெற்றுக்கொள்கின்றனர்.

எந்த முருகன் கோவிலிலும் இல்லாத வகையில், நைவேத்தியமாக சுருட்டு படைக்கும் பழக்கம் இக்கோவிலுக்கு உண்டு. ஒரு சமயம் கருப்பமுத்து என்ற பக்தர், பெருங்காற்று, மழைக்கு இடையில் வீட்டுக்கு செல்ல முடியாமல் குளிரில் நடுங்கி நின்றார். அப்போது அவருக்கு அருகில் நின்ற ஒருவர் குளிருக்கு இதமாக இருக்கும் என சுருட்டு ஒன்றை கொடுத்துள்ளார். பின்பு இருவரும் ஆற்றை கடந்து செல்லும்போது, அருகில் இருந்த நபரை காணவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த பக்தர் கோவிலுக்கு சென்று பார்த்தபோது, அங்கு முருகப்பெருமானுக்கு முன்பாக சுருட்டு இருப்பதைகண்டு, தம்மோடு வந்தது முருகப்பெருமான் என்பதை உணர்ந்து கொண்டார். அதன்பின்பு தான் கோவிலில் சுருட்டு படைக்கும் வழக்கம் ஏற்பட்டதாக கூறுகிறார்கள்.

கோவில், காலை 6 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

**அமைவிடம்**

திருச்சியில் இருந்து 27 கிலோமீட்டர் தொலைவிலும், புதுக்கோட்டையில் இருந்து வடமேற்கே 40 கிலோமீட்டர் தொலைவிலும் இக்கோவில் அமைந்துள்ளது. திருச்சி பேருந்து நிலையத்தில் இருந்து கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டியின் கோப்பை




சென்னை மற்றும் மதுரையில் நடைபெறவிருக்கும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டியின் கோப்பையை, கோவில்பட்டியில் கனிமொழி எம்.பி., கலெக்டர் இளம்பகவத், எம்எல்ஏக்கள் மார்கண்டேயன், ஊர்வசி அமிர்தராஜ், மேயர் ஜெகன் வரவேற்றனர்.

## “தூய்மையான எரிசக்திக்கான பசுமை எரிசக்தி” விழிப்புணர்வு நிகழ்ச்சி



கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியில் உள்ள புனித ஜோசப் பள்ளியில் நடந்த “தூய்மையான எரிசக்திக்கான பசுமை எரிசக்தி” விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்றார்.

## 363 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் கனிமொழி எம்.பி., ஆய்வு



தூத்துக்குடி மாவட்ட 6 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 363 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தை கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு செய்தனர்.

## எஸ்ஐஆர் படிவங்கள் வழங்கியதை கலெக்டர் சுகுமார் ஆய்வு செய்தார்



விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் எஸ்ஐஆர் படிவங்கள் வழங்கியதை கலெக்டர் சுகுமார் ஆய்வு செய்தார்.

## வீரமணி துணை முதல்வர் உதயநிதி சந்திப்பு



சென்னையில் திராவிடர் கழகத் தலைவர் வீரமணியை துணை முதல்வர் உதயநிதி சந்தித்து, ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலை வழங்கினார்.

## 25 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள்



நாமக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூபாய் 24 லட்சம் மதிப்பீட்டில் 25 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் நேற்று வழங்கப்பட்டது.

## காரிய மண்டபத்திற்கு அடிக்கல்



காஞ்சிபுரம் மாநகராட்சி 2-வது வார்டு சர்வதீர்த்த குளக்கரை அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள காரிய மண்டபத்திற்கு எழிலரசன் எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார்.

## ஏழை – எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி



திருப்பெரும்புதூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோதண்டம் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வினில் ஏழை - எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

## பாமக கலந்தாய்வுக் கூட்டம்



சென்னையில் பாமக மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் மற்றும் மாநில பொறுப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் அன்புமணி பேசினார்.

## சந்தனக்கூடு திருவிழாவில் அமைச்சர் டிஆர்பி ராஜா பங்கேற்றார்



திருவாரூர் மாவட்டம், பொதக்குடி சந்தனக்கூடு திருவிழாவில் அமைச்சர் டிஆர்பி ராஜா பங்கேற்றார்,

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடத்திற்கான பூமி பூஜை



மதுரை மத்திய தொகுதி அருள்தாஸ்புரம் பகுதியில் கட்டப்படவுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடத்திற்கான பூமி பூஜை அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் நேற்று நடந்தது.

## தியாகராசர் கல்லூரியில் தமிழியக்கத்தின் 8ம்ஆண்டு தொடக்க விழா




மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழியக்கத்தின் எட்டாம் ஆண்டு தொடக்க விழாவில் அமைச்சர் பிடிஆர் பழனிவேல்தியாகராஜன், நேற்று கவிஞர் பாவலர் அறிவுமதிக்கு ஒரு லட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய தமிழியக்க விருதினை வழங்கினார். பூமிநாதன் எம்எல்ஏ,, தியாகராசர் கல்லூரி நிர்வாக அறங்காவலர் அரி தியாகராசன் அவர்கள், பேராசிரியர் ஞானசம்பந்தன் மற்றும் தமிழியக்க பொதுச் செயலாளர் பேராசிரியர் அப்துல் காதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நவீன வகுப்பறைகளுக்கு கவர்னர் ரவி அடிக்கல் நாட்டினார்




ஆவடிராணுவகவசவாகனங்கள்தயாரிக்கும் ஏவிஎன்எல் நிறுவனத்தின் ஆதரவுடன் அதன் கார்பரேட் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலையில் உள்ள கிராமப்புற மேம்பாட்டு சமூக பள்ளியில் நவீன வகுப்பறைகளுக்கு அடிக்கல் நாட்டி,சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கானகழிவறை கட்டட வளாகத்தையும் கவர்னர் ரவி திறந்து வைத்தார்.

## தேசிய ஒருங்கிணைப்பு சுற்றுப்பயணம்



தமிழ்நாட்டில் "தேசிய ஒருங்கிணைப்பு சுற்றுப்பயணம்" மேற்கொண்டுள்ள மணிப்பூரைச் சேர்ந்த மாணவர்கள் குழுவுடன் கவர்னர் ரவி கலந்துரையாடினார்.

## விவசாயிகள் மற்றும் மக்கள் சந்திப்பு



புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் ராயவரத்தில் விவசாயிகள் மற்றும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

## முதல்வர் ஸ்டாலினை சந்தித்து சிவசிதம்பரம் நன்றி



சென்னை மந்தைவெளி கிழக்கு வட்ட சாலைக்கு சீர்காழி கோவிந்தராஜன் பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்தமைக்காக அவரது மகன் சிவசிதம்பரம் நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் மயிலை வேலு எம்எல்ஏ உள்ளார்.

## தெப்பக்குளம் சீரமைக்கும் பணிகள்



கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயில் தெப்பக்குளத்தினை ரூ 49 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி சீரமைக்கும் பணிகள் நடந்த நிலையில், தொடர் மழையால் தெப்பக்குளத்தின் வடக்கு பக்க சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. இதை மேயர் மகேஷ் பார்வையிட்டு, தேவையான சீரமைப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ள அமைச்சருடன் மேயர் பேசி நடவடிக்கை எடுத்தார்.

## பால் பொருட்கள் உற்பத்தி ஆலையில் கனிமொழி எம்.பி. ஆய்வு



திருவைகுண்டம் அருகே அணியாபரநல்லூரில் உள்ள தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிறுவனத்தின் பால் பொருட்கள் உற்பத்தி ஆலையில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகளை, கனிமொழி எம்.பி. கலெக்டர் இளம்பகவத், அமிர்தராஜ் எம்எல்ஏ ஆய்வு செய்தனர்.

## இலவச கண் மருத்துவ முகாம்



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம், பெருவள்ளூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஊராட்சி மன்ற தலைவர் கந்தவேல் அவர்களின் ஏற்பட்டில் விழுப்புரம் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி இணைந்து நடத்தும் இலவச கண் மருத்துவ முகாமை நேற்று நவம்பர் 13 மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் எல் பி நெடுஞ்செழியன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

## ஆர்.நல்லகண்ணு பெயரில் கட்டப்படவுள்ள கூடுதல் கட்டடத்திற்கு கனிமொழி எம்.பி. அடிக்கல் நாட்டினார்.



திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு பெயரில் கட்டப்படவுள்ள கூடுதல் கட்டடத்திற்கு கனிமொழி எம்.பி. அடிக்கல் நாட்டினார். கலெக்டர் இளம்பகவத், அமிர்தராஜ் எம்எல்ஏ, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பங்கேற்றனர்.

## ரவுசு மணி

எடுக்கும் குறி தவறினாலும்

உன் முயற்சி அடுத்த வெற்றிக்கான பயிற்சி என்பதை நம்பினால் வெற்றியே...



எV. முத்து ராமகிருஷ்ணன்

## ரங்கோலி கோலம் வரைந்து, பேரணி



திருப்பூர் மங்கலத்தில் எஸ் ஐ ஆர் கணக்கெடுப்பு தொடர்பாக வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த ரங்கோலி கோலம் வரைந்து, பேரணி நடத்தப்பட்டது.

## பேரணாம்பட்டு நகர பகுதியில் நடந்து வரும் வாக்காளர் திருத்தப் பணிகளை நந்தகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**வேலூர்,நவ.14:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் சட்டமன்ற தொகுதி பேரணாம் பட்டு நகர பகுதியில் SIR குறித்த சிறப்பு தீவிர வாக்காளர்கள் திருத்தல் பணி நடைபெற்று வருகிறது.



அதை திமுக வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவருடன் பேர்ணாம்பட்டு நகர திமுக செயலாளர் ஜூபேர் அஹமத், மாவட்ட துணை செயலாளர் பிரபாத்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜ மார்த்தாண்டன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# சுற்றுலா: சிதம்பரத்தில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

சிதம்பரத்திற்கு ஒரு பயணத்தைத் திட்டமிடுகிறீர்களா? சிதம்பரத்தில் பார்க்க வேண்டிய சிறந்த சுற்றுலா தலங்களின் பட்டியல் இங்கே.



பல ஆண்டுகளுக்கு முன்பு, சிதம்பரம் கோயில் நகரம் அமைந்துள்ள பகுதி, பிச்சாவரம் வரை நீண்டிருந்த தில்லை அல்லது சதுப்புநில மரங்களால் நிரம்பியிருந்தது. இந்த மரங்களுக்கு உரிய மரியாதையுடன், சிதம்பரத்தில் உள்ள சிவன் கோயில் தில்லை அம்பலம் அல்லது தில்லையின் திறந்தவெளி மேடை, கலை மற்றும் கலாச்சார அரங்கம் என்று அழைக்கப்பட்டது. சிதம்பரம் என்பது சித்ரம்பலம் அல்லது சித் என்பதன் நவீனமயமாக்கப்பட்ட பதிப்பையும், வளிமண்டலத்தில் நிலவும் நித்திய ஞானத்தையும் குறிக்கலாம்.

புராணங்களின்படி, தைப்பூசத்தின் புனித நாளில் சிதம்பரத்தில், வியாக்ரபாதர் மற்றும் பதஞ்சலி முனிவர்களுக்கு ஒரு பிரபஞ்ச நடனத்தில் சிவன் தன்னை வெளிப்படுத்தினார். சிதம்பரம் சைவ மதத்தினருக்கான ஒரு முக்கிய யாத்திரை மையமாகவும், தெய்வீக கலை மற்றும் கலாச்சாரத்தின் மையமாகவும் உள்ளது, இது சிவ தாண்டவத்தின் அடையாளமாகும். சிதம்பரத்திலும் அதைச் சுற்றியும் நீங்கள் பார்வையிடக்கூடிய ஏராளமான கோயில்கள் உள்ளன, அவற்றுடன் சில சிறந்த சுற்றுலா இடங்களின் பட்டியலை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

### தில்லை நடராஜர் கோயில்

7 ஆம் நூற்றாண்டின் தேவார தமிழ் கவிதை வரிகளில் அழியாத, சிதம்பரம் தில்லை நடராஜர் கோயிலில் சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் மற்றும் விஜயநகரப் பேரரசின் வரலாற்றைக் குறிக்கும் பல கல்வெட்டுகள் உள்ளன. தங்க விமானம் (கோபுரம்) சோழ மன்னர் பராந்தகனால் அமைக்கப்பட்டது, மேலும் தங்கம் மற்றும் நகைகளின் தாராளமான காணிக்கைகளை பின்னர் வந்த மன்னர்கள் வழங்கினர். 50 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்தக் கோயில், இந்தியாவில் உள்ள சிவபெருமானுக்கான மிகப் பழமையான மற்றும் மிகவும் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றாகும் . ஒன்பது உயரமான நுழைவாயில்களைப் பாருங்கள், குறிப்பாக 40 மீட்டருக்கும் அதிகமான உயரமுள்ள கிழக்கு மற்றும் வடக்கு கோபுரங்கள் மற்றும் நடராஜராக (நடன மன்னர்) சிவனின் 108 நடன அசைவுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

காலை 6.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கும் இந்தக் கோயில், சிதம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ளது.

### எல்லை காளி கோயில்

புராணங்களின்படி, உக்ர காளி அல்லது கொடூரமானவள் என்ற வடிவத்தில் பார்வதி, பூமியில் உள்ள பாவிகளை அழித்து சிதம்பரத்தில் காத்திருக்க சிவனால் கட்டளையிடப்படுகிறார், அங்கு விகாரபாதர் மற்றும் பதஞ்சலிக்காக சிவன் பிரபஞ்ச நடனத்தை நிகழ்த்தும்போது, சிவகாமியாக அவருடன் சேர முடியும். மற்றொரு புராணக்கதையின்படி, சிவனுடன் ஒரு தெய்வீக நடனத்தில் ஒரு அடியை இழந்த பிறகு, கோபமடைந்த பார்வதி எல்லை அல்லது சிதம்பரத்தின் எல்லைக்குச் சென்றார். பிரம்மா அவளை பிரம்மா சாமுண்டீஸ்வரி அல்லது நான்கு வேதங்களைக் குறிக்கும் நான்கு முகங்களைக் கொண்ட பார்வதியாக சித்தரித்து சமாதானப்படுத்தினார். சிதம்பர யாத்திரை எல்லை காளி கோயிலுக்குச் செல்லாமல் ஒரு போதும் முழுமையடையாது என்று கூறப்படுகிறது.

கோயில் காலை 6.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும். இந்தக் கோயில் சிதம்பரத்தின் வடக்கு முனையில், பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ளது.

### உச்சினதர் சிவன் கோயில்

தமிழ் கவிஞர் திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல்களில் போற்றப்படும் உச்சினதார் கோயில், சிவனும் பார்வதியும் அகத்திய முனிவருக்கு முன் தோன்றிய இடம் என்று கூறப்படுகிறது. திருமண நாளில் சிவன் மற்றும் பார்வதியின் சிற்பத்தை நீங்கள் காணலாம். திருஞான சம்பந்தருக்கு 12 வயது இருக்கும்போது, அவரது திருமணம் நிச்சயிக்கப்பட்டது, திருமணக் குழுக்கள் திருமணத்தை நடத்துவதற்காக அச்சல்புரம் சிவன் கோயிலுக்குச் சென்றனர். நடுவில், சோர்வடைந்த மற்றும் பசியுள்ள யாத்ரீகர்கள் சிவபுரியில் ஓய்வெடுத்தனர், அங்கு சிவன் ஒரு கோயில் பூசாரி போல் நடித்து, அவர்களுக்கு ஒரு ஆடம்பரமான உணவை வழங்கினார்.

இதனால் கோயிலின் தலைமை தெய்வம் உச்சி (மதியம்) நாதர் அல்லது மத்தியானேஷ்வர் (நண்பகலின் கடவுள்) என்று அழைக்கப்பட்டது.

இந்தக் கோயில், பசுமையான, நெல் வயல்கள் நிறைந்த ஒரு நிலத்தில் அமைந்துள்ளது. முன்பு திருநெல்வோயில் என்று அழைக்கப்பட்டு, தற்போது சிதம்பரத்திலிருந்து தென்மேற்கே சுமார் 3 கி.மீ தொலைவில் சிவபுரி என்று அழைக்கப்படுகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### தேர்வு கிடையாது..! StartupTN திட்டத்தில் வேலைவாய்ப்பு!




நிறுவனம் : StartupTN

வகை : தமிழ்நாடு அரசு வேலை

காலியிடங்கள் : 07

பணியிடம் : சென்னை, தமிழ்நாடு

கடைசி தேதி : 20.11.2025

StartupTN திட்டத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.இதற்கான கல்வி தகுதி, சம்பளம், காலியிடங்கள் எண்ணிக்கை, தேர்வு செய்யும் முறை அனைத்தும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. பதவி: Project Leads சம்பளம்: As per Norms

காலியிடங்கள்: 05

கல்வி தகுதி: Bachelor Degree or Master Degree from a top tier institution.

2. பதவி: Associate Vice President சம்பளம்: As per Norms

காலியிடங்கள்: 02

கல்வி தகுதி: Bachelor Degree or Master Degree from a top tier institution.

வயது வரம்பு: 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப கட்டணம்: கட்டணம் இல்லை

தேர்வு செய்யும் முறை:

முக்கிய தேதிகள்: விண்ணப்பிக்க கடைசி தேதி: 20.11.2025

விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பதாரர்கள் https://startuptn.in/ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

## 2026ம் ஆண்டுக்கான அரசு விடுமுறை நாட்கள்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு



**சென்னை, நவ.14:**

2026ம் ஆண்டுக்கான அரசு விடுமுறை நாட்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமைச்செயலர் முருகானந்தம் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி 2026ம் ஆண்டில் 24 நாட்கள் பொது விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவை அரசு துறைகள், அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தும் என்றும், சில விடுமுறைகள் வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கே தனிப்பட்டவையாக பொருந்தும் எனவும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

பொது விடுமுறை பட்டியல்

* ஆங்கில புத்தாண்டு- ஜன.,01 (வியாழன்)
*பொங்கல் - ஜன.,15 (வியாழன்)
* திருவள்ளுவர் நாள்- ஜன.,16 (வெள்ளி)
* உழவர் திருநாள்- ஜன.,17 (சனி)
* குடியரசு நாள் - ஜன.,26 (திங்கள்)
* தைப்பூசம்- பிப்.,01 (ஞாயிறு)
*தெலுங்கு வருட பிறப்பு - மார்ச் 19 ( வியாழன்)
*ரம்ஜான் - மார்ச் 21 (சனி)
*மகாவீரர் ஜெயந்தி - மார்ச் 31 (செவ்வாய்)
*வங்கிகள் ஆண்டு கணக்கு - ஏப்.,01 (புதன்)
*புனித வெள்ளி - ஏப்.,03 (வெள்ளி)
*தமிழ்புத்தாண்டு - ஏப்.,14 (செவ்வாய்)
*பக்ரீத் - மே 28 (வியாழன்)
*மொகரம் - ஜூன் 26 (வெள்ளி)
*சுதந்திர தினம் - ஆக.,15 (சனி)
*மிலாதுநபி - ஆக.,26 (புதன்)
*கிருஷ்ண ஜெயந்தி - செப்.,04 (வெள்ளி)
*விநாயகர் சதுர்த்தி - செப்.,14 (திங்கள்)
*காந்தி ஜெயந்தி - அக்.,02 (வெள்ளி)
*ஆயுத பூஜை - அக்.,19 (திங்கள்)
*விஜயதசமி - அக்.,20 (செவ்வாய்)
*தீபாவளி - நவ.,08 (ஞாயிற்றுக்கிமை)
*கிருஸ்துமஸ் - டிச.,25 (வெள்ளி)

தைப்பூசம் மற்றும் தீபாவளி பண்டிகைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வருகின்றன.

## பழனி முருகன் கோவிலில் ரோப் கார் சேவை நிறுத்தம்



**பழனி, நவ.14:**

பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று ரோப் கார் சேவை இயங்காது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உலக புகழ்பெற்ற பழனி முருகன் கோவில், மலை மீது அமைந்துள்ளது. அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல படிப்பாதை, யானைப்பாதை பிரதான வழிகளாக உள்ளன. இதுதவிர பக்தர்கள் மலைக்கோவிலுக்கு எளிதில் சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளது. இதில் ரோப்கார் வழியாக விரைவாகவும். பழனி மலையின் இயற்கை அழகை பார்த்து ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலானோர் ரோப்காரில் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் இந்த ரோப்கார் சேவை பக்தர்களுக்கு சிறந்த சுற்றுலா அனுபவத்தை கொடுக்கிறது.

பழனி ரோப்கார் நிலையத்தில் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாதாந்திர, வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவது வழக்கம். அப்போது ரோப்கார் சேவை நிறுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படும். அதன்படி பழனி முருகன் கோவில் ரோப்கார் நிலையத்தில், பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று ரோப் கார் சேவை இயங்காது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே பக்தர்கள் மின்இழுவை ரெயில், படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோவிலுக்கு செல்லலாம் என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15,16-ம் தேதி ஆசிரியர் தகுதித் தேர்வு; 4.80 லட்சம் பேர் எழுதுகிறார்கள்

**கரூர், நவ.14:**

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தகுதித்தேர்வு நடத்தப்பட்டு அரசு பள்ளிகளில் காலியாக உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு தாள் -1 தேர்வும் பி.எட். முடித்த பட்டதாரிகளுக்கு தாள்-2. தேர்வும் நடத்த அறிவிக்கப்பட்டது. தொடக்கப்பள்ளி, நடு நிலைப்பள்ளி மற்றும் உயர் நிலைப்பள்ளிகளில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்காக இத்தேர்வு நடத்தப்படுகிறது. நவம்பர் 1 மற்றும் 2-ந்தேதி நடைபெறுவதாக இத்தேர்வு அறிவிக்கப்பட்டது.

கல்லறை திருநாள் என்பதால் இதனை வருகிற 15 மற்றும் 16-ந்தேதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி தமிழகம் முழுவதும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வை 4 லட்சத்து 80 ஆயிரம் பேர் எழுதுகிறார்கள். தாள்-1 தேர்வை ஒரு லட்சத்து 370 பேர் எழுத உள்ளனர். இதேபோல ஞாயிற்றுக்கிழமை தாள்-2 வது தேர்வு நடக்கிறது. இதனை 3 லட்சத்து 73 ஆயிரத்து 438 பேர் எழுதுகிறார்கள். தாள்- 1 தேர்வு 367 மையங்களிலும், தாள்-2 தேர்வு 1241 மையங்களிலும் நடைபெறுகிறது. இத்தேர்வு காலை 10 மணிக்கு தொடங்கி 1 மணி வரை நடைபெறும். தேர்வு கூடத்திற்கு 9.30 மணிக்குள் வர வேண்டும். அதற்கு மேல் வந்தால் அனுமதிக்க மாட்டார்கள் என்று ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் ராமேஸ்வர முருகன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மாற்றுத்திறனாளிகளுக்கு கூடுதலாக ஒரு மணி நேரம் வழங்கப்படும். அதாவது காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை தேர்வு நடைபெறும். தேர்வினர் கருப்பு 'பால் பென்' மூலம் எழுத வேண்டும். தேர்வினை கண்காணிக்க அனைத்து மாவட்டங்களுக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2 வருடத்திற்கு பிறகு இத்தேர்வு நடைபெறுகிறது. பறக்கும் படையும் அமைக்கப்பட்டுள்ளது. எவ்வித முறைகேட்டிற்கும் இடம் அளிக்காத வகையில் தேர்வு மையங்கள் தீவிரமாக கண் காணிக்கப்படும். இவ்வாறு கூறினார். தேர்வு கண்காணிப்பு அதிகாரியாக செங்கல்பட்டு மாவட்டத்திற்கு பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பனும், மதுரை மாவட்டத்திற்கு இயக்குனர் நரேசும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

## சாலையில் தரையிறங்கிய சிறிய ரக போர் விமானம்: புதுக்கோட்டையில் பரபரப்பு

**புதுக்கோட்டை, நவ.14:**

திருச்சி - புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் நார்த்தாமலை அருகே வானத்தில் பறந்து கொண்டிருந்த சிறிய ரக போர் விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று சாலையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.




திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வழியாக காரைக்குடி, சிவகங்கை ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய முக்கியமான தேசிய நெடுஞ்சாலை ஆக உள்ளது. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை அருகே இன்று சாலையில் பிற்பகல் அவசரமாக சிறிய ரக போர் விமானம் தரை இறக்கப்பட்டது.

சாலையில் தரையிறக்கப்பட்ட நேரத்தில் வாகனங்கள் எதுவும் செல்லாததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. போர் விமானத்தில் 2 பேர் இருந்ததாக கூறப்படுகிறது. போர் விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தரையறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தகவல் அறிந்ததும் கீரனூர் போலீஸார் மற்றும் வருவாய் துறையின் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். போர் விமானம் தரையிறக்கப்பட்ட தகவல் அறிந்து ஏராளமானோர் திரண்டு பார்வையிட்டனர். விமானம் அருகே யாரையும் நெருங்க விடாமல் போலீஸார் அனுப்பி வைத்தனர்.

போர் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரி செய்வதற்காக தஞ்சாவூர் விமான நிலையத்திலிருந்து பொறியாளர்கள் விரைந்து கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரூ.50 கோடியில் 'சென்னை சில்க்ஸ்' ஆடை உற்பத்தி ஆலை; 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு: முதலமைச்சர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்




**சென்னை, நவ. 14:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், திருவாரூர் மாவட்டத்தில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், எஸ்.சி.எம்.கார்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிகஎண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், 2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சிபெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளைமேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவாரூர் மாவட்டத்தில், இந்த திட்டம் நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. ஜவுளித்துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் எஸ்.சி.எம். கார்மெண்ட்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான எஸ்.சி.எம். கார்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், உலகப்புகழ்பெற்ற நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஆடைகள் தயாரிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் ஆடை உற்பத்தி அலகு அமைத்திட திட்டமிட்டுள்ளது. முதலமைச்சர் முன்னிலையில் இன்றையதினம், இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர், நா.முருகானந்தம், வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் பு. அலர்மேல்மங்கை, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம். சுப்ரமணியன், எஸ்.சி.எம். கார்மெண்ட்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.பி.கே. பரமசிவம், செயல் இயக்குநர் கௌசிக் குமரன், திட்ட மேலாளர் ஸ்ரீநிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

## சூரியனின் 'சோலார் கர்டன்ஸ்': நாசாவின் புதிய கண்டுபிடிப்பு!

*சூரியனைப் பற்றி புதிய தகவல்களை நாசா வெளியிட்டிருக்கிறது! டேனியல் கே. இனோயு சோலார் டெலஸ்கோப் மூலம் சூரியனின் மேற்பரப்பில் முன்பு பார்க்கப்படாத 'சோலார் கர்டன்ஸ்' (Solar Curtains) சூரியத் திரை எனப்படும் மெல்லிய கோடுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த அறிவியல் கண்டுபிடிப்பு, சூரியனின் காந்தப்புலம், சூரிய புயல்கள் மற்றும் அதன் மேற்பரப்பு மாற்றங்களைப் புரிந்துகொள்ள ஒரு புதிய வாய்ப்பைத் திறந்துள்ளது.*

*'சோலார் கர்டன்ஸ்' என்றால் என்ன?*

*சூரியனின் மேற்பரப்பில் புலப்படும் இந்த மெல்லிய கோடுகள் 'சோலார் கர்டன்ஸ்' -சூரியத் திரை என்று அழைக்கப்படுகின்றன. இவை சூரியனின் காந்தப்புலத்தை உருவாக்கும் முக்கிய காரணிகள். இந்த காந்தப்புலம் சூரியனின் மேற்பரப்பில் சில பகுதிகளை இருண்டதாகவோ அல்லது ஒளிர்வாகவோ மாற்றுகிறது. மேலும், சூரிய புயல்கள், திடீர் ஒளிப்பிழம்புகள் மற்றும் நமது செயற்கைக்கோள்களை பாதிக்கும் நிகழ்வுகளைப் புரிந்துகொள்ள இந்த கண்டுபிடிப்பு உதவுகிறது.*

*இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்ட டெலஸ்கோப்கள்: இந்த ஆய்வில் மொத்தம் நான்கு டெலஸ்கோப்கள் பயன்படுத்தப்பட்டன.*

**ஸ்விக்கி ட்ரான்ஸியன்ட் ஃபெசிலிட்டி: வெடிப்புகள் மற்றும் ஒளிர்வுகளை ஆராய.*

**ஹப்பிள் டெலஸ்கோப்: விரிவான படங்களைப் பிடிக்க.*

**ஜேம்ஸ் வெப் டெலஸ்கோப்: விண்மீன் திரள்களை ஆராய.*

**டேனியல் கே. இனோயு டெலஸ்கோப்: சூரியனின் விவரங்களை ஆராய.*

*குழந்தைகளுக்கும் இதைப் பற்றி தெரிய வேண்டுமா?*

*நிச்சயமாக! சூரியன் பூமியில் இருந்து தொலைவில் இருந்தாலும், அதன் நிகழ்வுகள் நம்மை பாதிக்கின்றன. சூரிய புயல்கள் நமது ஸ்மார்ட்ஃபோன் சிக்னல், ஜிபிஎஸ், செயற்கைக்கோள்கள் மற்றும் மின்சார வலையமைப்பை பாதிக்கலாம். இதனால், மின்சாரம் தடைபடலாம் அல்லது தொலைக்காட்சி ஒளிபரப்பு நின்று போகலாம். எனவே, விண்வெளியில் நடக்கும் இது போன்ற நிகழ்வுகளைப் பற்றி அறிந்திருப்பது அவசியம். குழந்தைகளுக்கு இயற்பியலில் அதிக ஆர்வத்தை உண்டு பண்ணும் விதமாக இது போன்ற உலக நிகழ்வுகள் எல்லாம் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்.*

*இந்த சூரிய கர்டன்ஸ் - சூரியத் திரை கண்டுபிடிப்பு, சூரியனின் செயல்பாடுகளை புரிந்துகொள்ள ஒரு புதிய வழியைத் திறந்துள்ளது. சூரிய புயல்களால் பூமியில் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே அறிந்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும். விண்வெளி மற்றும் பூமியைப் பற்றிய விழிப்புணர்வை அடுத்த தலைமுறைக்குப் பரப்புவது, நமது சமூகத்தை சிறப்பாக்கும்.*

# சிதம்பரம் அரசு பொது மருத்துவமனை ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்கு: கடலூர் கலெக்டர் ஆஜராக உத்தரவு

**சென்னை, நவ.14:**

சிதம்பரம் அரசு பொது ருத்துவமனையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்கில், கடலூர் மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி, சிதம்பரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் வரும் 18-ந் தேதி நேரில் ஆஜராக சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தைச் சேர்ந்த 73 வயதான முதியவர் சுப்பிரமணியன் ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், சிதம்பரம் நகராட்சி 4-வது வார்டில் அரசு பொது மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் ஏராளமான பொதுமக்கள் சிகிச்சைக்காக வருகை தருவர். ஆனால், மருத்துவமனைக்கு போதுமான அடிப்படை வசதிகள் இல்லை. ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசரகால வாகனங்களை நிறுத்துவதற்குக்கூட இடமில்லை. அந்த மருத்துவமனை வளாகத்தில் ஏராளமான ஆக்கிரமிப்புகள் உள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினால், மருத்துவமனை வளாகத்துக்கான அடிப்படை கட்டுமானங்களை செய்ய முடியும். இதுதொடர்பாகவும், ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரியும் 2023 ஜூன் 7-ந் தேதி முதல் 2024 மார்ச் 8-ந் தேதி வரை நான்கு மனுக்களை மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் தாசில்தார், சிதம்பரம் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி, சிதம்பரம் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அனுப்பினேன். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்புகளையும் அகற்றவில்லை. எனவே, சிதம்பரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்களையும், ஆக்கிரமிப்புகளையும் அகற்ற உத்தரவிட வேண்டும், என்று கூறியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத்தரப்பில் ஆஜரான அரசு பிளீடர் அறிக்கை தாக்கல் செய்தார். அதில், சம்பந்தப்பட்ட மருத்துவமனை வளாகத்தில் 56 ஆக்கிரமிப்புகள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், அவர் வாதிடும்போது, சம்பந்தப்பட்ட இடம் சிதம்பரம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் வருகிறது. எனவே, ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சிதம்பரம் நகராட்சிக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அப்போது சிதம்பரம் நகராட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர், சம்பந்தப்பட்ட நிலம் அரசு நிலம். அதனால், அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் நகராட்சிக்கு வரி செலுத்தி வருகிறார்கள், என்றார்.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், ஆக்கிரமிப்பில் உள்ள நிலம், யாருடைய கட்டுப்பாட்டுக்கு வருகிறது? என்பதில் பிரச்னை உள்ளது. எனவே, உரிய ஆவணங்களுடன் கடலூர் மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி, சிதம்பரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் வரும் 18-ந் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டனர். விசாரணையை அன்றைய தினத்துக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# ராமச்சந்திரா மருத்துவமனைக்கு ஐரோப்பிய அங்கீகாரம்




**சென்னை, நவ.14:**

போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையின் கதிர்வீச்சு துறைக்கு ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு, கதிரியக்க பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு நுட்பம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியமைக்காக ஐரோப்பிய பயிற்சி அங்கீகாரத் திட்ட சான்று கிடைத்துள்ளது.

இதுதொடர்பாக ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையின் கதிரியக்கவியல் துறை தலைவர் டாக்டர் பி.எம்.வெங்கடசாய் கூறியதாவது:

"அதி நவீன பெட் சிடி உள்பட பல்வேறு கதிரியக்க பரிசோதனைக் கருவிகள் இங்கு உள்ளன. ஆண்டுதோறும் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு துல்லியமான பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

ஐரோப்பிய பயிற்சி அங்கீகாரத் திட்டக் குழுவினர் அதை மதிப்பீடு செய்தனர். அவை அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட தர நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகள் வரை இந்த அங்கீகாரம் இருக்கும். அதன் பின்னர், மறு ஆய்வு செய்து மீண்டும் புதுப்பிக்கப்படும். ஆசியாவிலேயே இத்தகைய அங்கீகாரத்தைப் பெற்ற ஒரே மையமாக போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா விளங்குகிறது".

இவ்வாறு அவர் கூறினார்.

# காஞ்சிபுரம் அண்ணா பட்டு விற்பனை வளாகம்: ஸ்டாலின் திறந்தார்




**சென்னை, நவ.14:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் அமைந்துள்ள காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அண்ணா பட்டு விற்பனை வளாகத்தை 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக லாபகரமாக செயல்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் உள்ள இச்சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ள அண்ணா பட்டு விற்பனை வளாகம், தமிழ்நாடு அரசின் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ், 6597 சதுர அடி பரப்பளவில், 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு முதலமைச்சரால் இன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த விற்பனை வளாகத்தில் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அசல் பட்டு மற்றும் சரிகை சேலைகள், ஆரணி பட்டு சேலைகள், திருபுவனம் பட்டு சேலைகள், கோவை மென்பட்டு சேலைகள், சேலம் வெண்பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், திண்டுக்கல் Tie & Dye சேலைகள், பரமக்குடி பம்பர் காட்டன் சேலைகள்,

திருநெல்வேலி செடி புட்டா சேலைகள், விருதுநகர் அருப்புக்கோட்டை காட்டன் சேலைகள், நாகர்கோவில் காட்டன் வேட்டிகள், ஈரோடு பவானி ஜமக்காளம், போர்வை ரகங்கள், படுக்கை விரிப்புகள், வீட்டு உபயோக துணி ரகங்கள் உள்ளிட்ட கைத்தறி ரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்படும்.

இவ்விற்பனை வளாகம் குளிர்சாதன வசதி மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகம் புனரமைக்கப்பட்டதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை மேற்கொள்ள வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி துறை செயலாளர் வே.அமுதவல்லி, கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## க்ரைம் கார்னர்

### ஏலச்சீட்டு நடத்தி ரூ.2 கோடி மோசடி - சிட்பண்ட் நிறுவன உரிமையாளர் கைது

**சென்னை, நவ.14:**

சென்னை மண்ணடியில் உள்ள சவரிமுத்துதெரு, மற்றும் பி.வி.அய்யர் தெரு ஆகிய இடங்களில் சிகரம் மற்றும் சிற்பி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களை நடத்தி வந்தவர் ரவி(வயது 57). இவரது நிறுவனத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த ஜெயசந்திரன் மற்றும் அவரது மனைவி பிரேமலீலா ஆகியோர் கடந்த 2015-ம் ஆண்டு முதல் பலமுறை ஏலச்சீட்டில் பணம் கட்டி வந்துள்ளனர்.

இந்த நிலையில், அவர்களுக்கு முதலீடு மற்றும் DIVIDEND செட்டில்மெண்ட் செய்யும் வகையில் ரவி ரூ.2,34,83,125/- மதிப்பிலான காசோலையை கொடுத்துள்ளார். ஆனால் அந்த காசோலையை வங்கியில் செலுத்தியபோது சம்பந்தப்பட்ட கணக்கில் பணம் இல்லை என்று வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்த ஜெயசந்திரன் மற்றும் பிரேமலீலா, இந்த விவகாரம் தொடர்பாக சென்னை பெருநகர காவல் ஆணையாளரிடம் புகார் அளித்தனர். இந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய மத்திய குற்றப்பிரிவுபோலீசார், தலைமறைவாக இருந்த ரவியை தேடிப்பிடித்து கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தொடர்ந்து இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற நபர்களை தேடும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

### தூத்துக்குடியில் கார் டிரைவர் தூக்குப்போட்டு தற்கொலை

**தூத்துக்குடி, நவ.14:**

தூத்துக்குடி முத்தையாபுரம் கிருஷ்ணாநகர் 3வது தெருவைச் சேர்ந்த சொக்கலிங்கம் மகன் லட்சுமணன் (வயது 35), கார் டிரைவர். இவர் கடந்த சில வருடங்களுக்கு முன்பு செல்வி என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டாராம். லட்சுமணன் நேற்று வேலைக்கு சென்றவர் இரவு வீட்டுக்கு வந்தாராம். அப்போது மது போதையில் வந்த அவர் தனது அறையில் மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் பொறுப்பு சண்முகலட்சுமி, சப்-இன்ஸ்பெக்டர் முகிலரசன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று, அவரது உடலை மீட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து லட்சுமணன் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்ன காரணம் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### போலி ஆவணம் மூலம் ரூ.2.5 கோடி சொத்து அபகரிப்பு: தலைமறைவாக இருந்த இருவர் கைது

**சென்னை, நவ.14:**

போலி ஆவணம் மூலம் ரூ.2.5 கோடி சொத்து அபகரிக்கப்பட்ட வழக்கில் தலைமறைவாக இருந்த இருவர் கைது செய்யப்பட்டனர். கிண்டியைச் சேர்ந்தவர் அப்துல் காதர் (65). தொழில் அதிபரான இவருக்கு பணத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் சொத்தை அடமானம் வைத்து பணம் திரட்ட அப்துல் காதர் முடிவு செய்தார்.

இதையடுத்து நண்பர் மூலம் அறிமுகமான மடிப்பாக்கத்தில் வசிக்கும் டெல்லியைச் சேர்ந்த விநாயக ஆச்சார்யா (51) என்பவரிடம் கிண்டியில் உள்ள ரூ.2.5 கோடி மதிப்புள்ள சொத்தை அடமானம் வைத்தார். ஆனால், விநாயகா ஆச்சார்யா இந்த சொத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரித்து வேறு நபருக்கு விற்பனை செய்துள்ளார். இது தொடர்பாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அப்துல் காதர் புகார் தெரிவித்தார். இதையடுத்து, சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், மோசடி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கு தொடர்பாக தலைமறைவாக இருந்து வந்த விநாயக ஆச்சார்யா, கூட்டாளியான சேலத்தைச் சேர்ந்த சுஜாதா (48) ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் ஏற்கெனவே, கடந்த மார்ச் மாதம் 2 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பைக்கில் சென்ற தம்பதியை தாக்கி வழிப்பறியில் ஈடுபட்ட கொள்ளையன் கைது

**சென்னை, நவ.14:**

டிஜிபி அலுவலகம் அருகே பைக்கில் சென்று கொண்டிருந்த தம்பதியைத் தாக்கி வழிப்பறியில் ஈடுபட்ட, கொள்ளையன் கைது செய்யப்பட்டார். பழைய வண்ணாரப்பேட்டை, நல்லப்ப வாத்தியார் தெருவைச் சேர்ந்தவர் பாஸ்கர் (55). இவர் கடந்த 9-ம் தேதி மனைவி மலர்க் கொடி (53) மற்றும் மகளுடன் ராயப்பேட்டையில் உள்ள ஓட்டல் ஒன்றுக்கு சென்று உணவருந்தினார்.

பின்னர் மகளை அங்கேயே விட்டுவிட்டு, மனைவியுடன், பாஸ்கர் வீட்டுக்கு புறப்பட்டார். டிஜிபி அலுவலகம் அருகே காமராஜர் சாலை, ராணி மேரி கல்லூரி எதிரே பைக் சென்ற போது, மற்றொரு பைக்கில் வந்த நபர் பாஸ்கரின் மனைவி மலர்க்கொடி தோளில் மாட்டியிருந்த கைப்பையை பறித்து, இருவரையும் கீழே தள்ளிவிட்டு தப்பினார். இதில் இருவரும் படுகாயமடைந்தனர். இதைக் கண்டு அந்த வழியாகச் சென்ற வாகன ஓட்டிகள் இருவரையும் மீட்டு ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவல் அறிந்து மெரினா காவல் நிலைய போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், வழிப்பறியில் ஈடுபட்டது மயிலாப்பூர் நொச்சி நகரைச் சேர்ந்த ராமதாஸ் (32) என்பது தெரியவந்தது. இதையடுத்து ராமதாஸை போலீஸார் கைது செய்து, அவர் பறித்துச் சென்ற ரூ.7 ஆயிரத்துடன் கூடிய கைப்பையை மீட்டனர். ராமதாஸ் மீது ஏற்கெனவே ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

# அரியானா: அல்-பலா பல்கலைக்கழகத்தில் பதிவெண் இன்றி நிற்கும் மர்ம கார்; விசாரணைக்கு பறந்த காவல்துறையினர்!






பரீதாபாத், நவ.14:

டெல்லி செங்கோட்டை அருகே கடந்த திங்கட்கிழமை மாலை 6.52 மணியளவில் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே ஹூண்டாய் கார் ஒன்று திடீரென தீப்பிடித்து, எரிந்தது. இதன்பின்னர் அந்த கார் வெடித்து சிதறியது. இந்த சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பயங்கரவாத தாக்குதலாக இருக்க கூடும் என சந்தேகிக்கப்படும் இந்த சம்பவம் பற்றி என்.ஐ.ஏ. மற்றும் தேசிய பாதுகாப்பு படையினர் விசாரித்து வருகின்றனர்.

சம்பவம் நடந்ததும் அந்த இடத்தில் டெல்லி காவல் துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இதனை தொடர்ந்து டெல்லி விமான நிலையங்கள், ரெயில் நிலையங்கள், மெட்ரோ ரெயில் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் முக்கிய பகுதிகளில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. டெல்லி கார் வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளி டாக்டர் உமர் உன் நபி டெல்லிக்குள் நுழையும் சி.சி.டி.வி. காட்சிகள் வெளிவந்துள்ளன. அதில், உமர் சுங்க சாவடியில் கட்டணம் செலுத்தும் காட்சிகள் தெளிவாக பதிவாகி உள்ளன. அவர் பதர்பூர் எல்லை வழியே ஐ20 காரில் வருவதும் தெரிகிறது. இதுபோன்று 50 சி.சி.டி.வி. காட்சிகள் சிக்கியுள்ளன.


இந்த வழக்கில், உமருடன் பிரெஸ்ஸா ரக கார் மற்றும் ரெட் ஈகோஸ்போர்ட் காரும் காணாமல் போயுள்ளன. எனினும், ரெட் ஈகோஸ்போர்ட் காரை பரீதாபாத் போலீசார் கைப்பற்றி உள்ளனர். தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அரியானாவின் பரீதாபாத் நகரில் தவுஜ் பகுதியில் அல்-பலா பல்கலைக்கழகம் உள்ளது. இதில் பிரெஸ்ஸா நிறுவன கார் ஒன்று சந்தேகத்திற்குரிய வகையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இதுதொடர்பான தகவல் அரியானா போலீசுக்கு சென்றது.

இதனை தொடர்ந்து, அரியானா போலீசின் வெடிகுண்டு செயலிழப்பு குழுவினர் அடங்கிய வாகனம் ஒன்று விசாரணைக்காக பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்துள்ளது. இதுதொடர்பாக ஜம்மு மற்றும் காஷ்மீர் போலீசாரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேசிய பாதுகாப்பு மற்றும் ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்புக்கும், அதன் நீடித்த உறுதிப்பாட்டுக்கும் இசைவாக, அனைத்து இந்தியர்களையும், அவர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் நிலையான உறுதியை மந்திரிசபை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## டெல்லி கார் வெடிப்பு சம்பவம்: அசாமில் 15 பேர் கைது



புதுடெல்லி, நவ.14:

டெல்லி குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, சர்ச்சைக்குரிய வகையில் சமூகவலைதளத்தில் கருத்து பதிவிட்ட 15 பேர் அசாமில் கைது செய்யப்பட்டு உள்ளனர்.


டெல்லியில் கடந்த 10ம் தேதி செங்கோட்டை அருகே காரை வெடிக்கச் செய்து பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சூழலில் சர்ச்சைக்குரிய வகையில் சமூகவலைதளத்தில் கருத்து பதிவிட்ட 15 பேர் அசாமில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

டெல்லி கார் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சமூக ஊடகங்களில் சக்ச்சைக்குரிய பதிவுகள் வெளியிட்டதற்காக மாநிலம் முழுவதும் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரபிஜூல் அலி (போங்கைகான்), போரிட் உதின் லஸ்கர் (ஹைலகண்டி), இனாமுல் இஸ்லாம், பபோன் (லக்கிம்பூர்), இல் ஃபிருஜ் அகமது, ஷாஹில் இஸ்லாம், ஷோமன் சிக்தர், ரகிபுல் சுல்தான் (பார்பேட்டா), நாசிம் அக்ரம் (ஹோஜாய்), தஸ்லிம் அகமது (கம்ரூப்), பாப்பி ஹூசைன், அப்துர் ரோஹிம் (தெற்கு சல்மாரா) உள்ளிட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்களை பிடித்து தண்டிப்பதே மாநில அரசின் நோக்கம் என கூறியுள்ளார்.

## ‘பிரதமர் மோடி ஒரு ஆன்மிக குரு:’ பூடான் பிரதமர் புகழாரம்



திம்பு, நவ.14:

பிரதமர் மோடி 2 நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் பூடான் நாட்டுக்கு சென்றார். அதே நாளில், முன்னாள் மன்னரின் 70-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டார்.

தற்போதைய மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில், நேற்று தலைநகர் திம்புவில், காலச்சக்கர அபிஷேகம் செய்யும் சடங்கு நடந்தது. அதை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது ‘எக்ஸ்’ வலைத்தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கியேல் வாங்சுக்குடன் இணைந்து காலச்சக்கர அபிஷேக சடங்கை தொடங்கி வைத்ததில் பெருமை கொள்கிறேன். உலகம் முழுவதும் உள்ள புத்த மதத்தினருக்கு இது கலாசார முக்கியத்துவம்வாய்ந்த முக்கியமான சடங்கு.

தற்போது நடந்து வரும் சர்வதேச அமைதி பிரார்த்தனை திருவிழாவின் ஒரு பகுதியாக இது நடக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே வெளியிட்ட பதிவில், பிரதமர் மோடி ஒரு தேர்ச்சி பெற்ற ஆன்மிக குரு. அவர் காலச்சக்கர அபிஷேகத்தை தொடங்கிவைத்து, அதை ஆசிர்வதித்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## கர்நாடகாவில் பரபரப்பு; 50-க்கும் மேற்பட்ட டிராக்டர்களை கொளுத்திய கரும்பு விவசாயிகள்

பாகல்கோட், நவ.14:

கர்நாடகாவில் அதிகரித்து வரும் விலைவாசியை முன்னிட்டு, கரும்புக்கான கொள்முதல் விலையை உயர்த்த கோரி கரும்பு விவசாயிகள் கடந்த சில நாட்களாக போ ஈடுபட்டு வருகின்றனர். இதுதொடர்பாக முதலில் கரும்பு ஆலை உரிமையாளர்கள் மற்றும் விவசாய தலைவர்களுடன் முதல்-மந்திரி சித்தராமையா அடுத்தடுத்து கூட்டங்களை நடத்தினார்.

இதுபற்றி பிரதமர் மோடிக்கும் கடிதம் ஒன்றை எழுதினார்.

இந்நிலையில், இந்த விசயத்தில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் வெள்ளிக்கிழமை பெலகாவியில் வி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, அவர்கள் கற்களை வீசி எறிந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சமீபத்தில், கர்நாடக சர்க்கரை துறை மந்திரி சிவானந்த் பாட்டீல் பாதுகாப்பு வாகனம் மீது பெலகாவியில் காலணி ஒன்றும் வீசப்பட்டது.

இந்த நிலையில், பாகல்கோட் பகுதியில் கோதாவரி சர்க்கரை ஆலை முன்பு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 50-க்கும் மேற்பட்ட டிராக்டர்களை கரும்பு விவசாயிகள் தீ வைத்து கொளுத்தினர்.

இதனால் பரபரப்பான சூழல் ஏற்பட்டு உள்ளது.

# டெல்லி கார் வெடிப்பு: சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நிச்சயமாக தண்டனை நிறைவேற்றப்படும் - அமித்ஷா



புதுடெல்லி, நவ.14:

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்க பிரதமர் மோடி உறுதியேற்றுள்ளார் என அமித்ஷா தெரிவித்துள்ளார்.

டெல்லி செங்கோட்டை அருகே கடந்த திங்கட்கிழமை மாலை 6.52 மணியளவில் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே மெதுவாக வந்த ஹூண்டாய் ரக கார் ஒன்று திடீரென தீப்பிடித்து, எரிந்தது. இதன்பின்னர் அந்த கார் வெடித்து சிதறியது. மக்கள் அதிக அளவில் வந்து செல்லும் பகுதியில் ஏற்பட்ட இந்த சம்பவம் தொடர்பான பலத்த சத்தம், பல மீட்டர் தொலைவில் இருந்தவர்களுக்கும் கேட்டது. புகை வான்வரை பரவியது.

சாந்தினி சவுக் சந்தை உள்பட பல முக்கிய பகுதிகள் இதனருகே அமைந்துள்ளன. கார் வெடித்ததும், அந்த இடத்தில் கூடியிருந்த மக்கள் அலறியடித்து தப்பியோடினர். 7 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ பகுதிக்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. எனினும், வேன், ஆட்டோ மற்றும் கார் என 8-க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் சிக்கி சேதமடைந்தன. கார் பாகங்களும், மனித உடல்களும் பரவி கிடந்தன.

இந்த சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்தனர். இதுதவிர 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சம்பவ இடத்தில் டெல்லி காவல் துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். டெல்லி விமான நிலையம், ரெயில் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் முக்கிய பகுதிகளில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக முதலில் டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். பயங்கரவாதத்தோடு தொடர்புடைய சம்பவம் என்பதால் பின்னர் உள்துறை மந்திரி அமித்ஷா உத்தரவின்பேரில் இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டது. இந்த நிலையில், டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நிச்சயமாக தண்டனை நிறைவேற்றப்படும் என மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டெல்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின்போது அவர் கூறியதாவது;-

“டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சட்டப்படி கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என பிரதமர் மோடி உறுதியேற்றுள்ளார். அது நிச்சயமாக நிறைவேற்றப்படும். அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையின் மூலம், இந்தியாவில் இனி இதுபோன்ற செயல்களை செய்வதற்கு யாரும் நினைத்து கூட பார்க்க மாட்டார்கள். இதனை நிறைவேற்றுவதில் மத்திய அரசும், உள்துறை அமைச்சகமும் உறுதியாக உள்ளது.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# விளையாட்டு செய்திகள்

## சப்-ஜூனியர் தேசிய கால்பந்து தொடர்: தெலங்கானாவை வீழ்த்தி தமிழ்நாடு சாம்பியன்

சென்னை, நவ.14:

ஆடவருக்கான சப்-ஜூனியர் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூரில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப் போட்டியில் நேற்று தமிழ்நாடு - தெலங்கானா அணிகள் மோதின. இதில் தமிழ்நாடு அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. தமிழ்நாடு அணி சார்பில் 13-வது நிமிடத்தில் சவுவிக் ஹால்டரும், 45+1-வது நிமிடத்தில் அபிட்நேகோவும் கோல் அடித்து அசத்தினர்.

90 நிமிடங்களின் முடிவில் தமிழ்நாடு அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதன் பின்னர் காயங்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட 11-வது நிமிடத்தில் தமிழ்நாடு அணியின் ஜெர்மையா சுயகோல் அடித்தார். எனினும் அதன் பின்னர் தமிழ்நாடு அணி கோல் வாங்காமல் பார்த்துக் கொண்டது.

## விராட் கோலி, ரோஹித் சர்மாவுக்கு பிசிசிஐ-யின் புதிய கட்டளை!

புதுடெல்லி, நவ.14:

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து இந்தியாவுக்காக ஆட வேண்டுமெனில் ரோஹித் சர்மாவும் விராட் கோலியும் உள்நாட்டு கிரிக்கெட்டில் ஆடி தங்களை மேட்ச் ஃபிட் ஆக வைத்துக் கொள்ள வேண்டுமென்று பிசிசிஐ புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிட்னியில் நடைபெற்ற கடைசி ஒருநாள் போட்டியில் மூத்த வீரர்கள் விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மா ஆடிய அற்புத இன்னிங்ஸ்கள் இன்னும் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பெற்று விட்டன. இதனையடுத்து இனி ரோஹித், கோலியைப் பற்றி கம்பீர் அண்ட் கோ வாயைத்திறக்காது என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில் இந்த புதிய கெடுபிடியை அறிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

“இந்திய அணிக்காக தொடர்ந்து விளையாட வேண்டுமெனில் உள்நாட்டு கிரிக்கெட்டில் பங்கேற்க வேண்டும்.”-என்பதே பிசிசிஐ-யின் புதிய கட்டளையாகும். மூத்த வீரர்களான ரோஹித் சர்மா, விராட் கோலி இந்திய கிரிக்கெட்டுக்கு செய்த பங்களிப்புகளை மனதில் கொண்டாவது அவர்களை மரியாதையுடன் நடத்துமாறு பலதரப்புகளிலிருந்தும் அகார்க்கர்-கம்பீர் அண்ட் கோவுக்கு பலரும் கோரிக்கை விடுத்தவண்ணம் இருக்கின்றனர். இதனையடுத்து ரோஹித் சர்மா மும்பை கிரிக்கெட் சங்கத்திடம் தாம் விஜய் ஹசாரே கோப்பையில் விளையாடத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் விராட் கோலியின் பங்கேற்பு குறித்து இன்னும் தெளிவு இல்லை.

அஜித் அகார்க்கர் கூறுவது என்ன? - “சர்வதேச வீரர்கள் வாய்ப்பு கிடைக்கும்போது உள்நாட்டு கிரிக்கெட் ஆடவேண்டும். நீண்ட இடைவெளிக்குப் பிறகும் தங்களை கூர்மையாக வைத்துக் கொள்ள அதுவே வழி. என்று நாங்கள் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியுள்ளோம்.” என்று அஜித் அகார்க்கர் தன் சமீபத்திய நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளதும் ரோஹித் கோலிக்கு வேறு வழியில்லை என்பதை உறுதி செய்துள்ளது.

அதாவது, டெஸ்ட், டி20 வடிவங்களிலிருந்து ஓய்வு பெற்ற இருவரும் தங்களை சர்வதேசப் போட்டிகளுக்கு ஏற்ப தயார் செய்து கொள்வதற்கு உள்நாட்டு கிரிக்கெட் தவிர வேறு மார்க்கமில்லை என்று அஜித் அகார்க்கர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். அதே வேளையில் அஜித் அகார்க்கர் இன்னொன்றையும் வலியுறுத்தினார், உள்நாட்டு கிரிக்கெட் அவர்கள் ஆட வேண்டும் என்று கூறுவது எதற்காகவெனில், ஒவ்வொரு சர்வதேசப் போட்டியிலும் அவர்கள் மீது அழுத்தத்தை வைக்குமாறு சோதித்துக் கொண்டிருக்க முடியாது அவர்கள் மூத்த வீரர்கள் என்றார். எனவே அவர்கள் விளையாடத் தொடங்கியதும் அவர்களை மதிப்பிட முடியும், என்கிறார்.

விஜய் ஹசாரே டிராபியில் கோலி விளையாடினால் ஆடவிருக்கும் அவரது டெல்லி அணி ஆந்திராவை முதல் போட்டியில் எதிர்கொள்கிறது. மும்பை அணி சிக்கிம் அணியை எதிர்கொள்கிறது.

## ஹசன் ஜாய் 169 ரன்கள் விளாசல்: வங்கதேசம் 338 ரன்கள் குவிப்பு

சைல்ஹெட், நவ.14:

டாஸ் வென்று பேட் செய்த அயர்லாந்து அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 90 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 270 ரன்கள் எடுத்தது. பார்ரி மெக்கார்த்தி 21 ரன்களுடன் களத்தில் இருந்தார். நேற்று 2-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய அயர்லாந்து அணி 92.2 ஓவர்களில் 286 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. பார்ரி மெக்கார்த்தி 31, மேத்யூ ஹம்ப்ரிஸ் 0 ரன்களில் வெளியேறினர். வங்கதேச அணி தரப்பில் மெஹிதி ஹசன் மிராஸ் 3 விக்கெட்களை வீழ்த்தினார். ஹசன் முராத், தைஜூல் இஸ்லாம், ஹசன் மஹ்மூத் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். இதையடுத்து விளையாடிய வங்கதேச அணி 2-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 85 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 338 ரன்கள் குவித்தது. தொடக்க வீரரான ஷத்மான் இஸ்லாம் 80 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான மஹ்முதுல் ஹசன் ஜாய் 283 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகளுடன் 169 ரன்களும், மொமினுல் ஹக் 124 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 80 ரன்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கைவசம் 9 விக்கெட்கள் இருக்க 52 ரன்கள் முன்னிலை பெற்றுள்ள வங்கதேச அணி இன்று 3-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடுகிறது.

## ‘இஸ்லாமாபாத் கார் குண்டுவெடிப்புக்கு இந்தியாவே காரணம்’ - பாகிஸ்தான் பிரதமர் பகிரங்கம்

**இஸ்லாமாபாத், நவ.14:**

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றத்துக்கு வெளியே நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அளித்துள்ள பேட்டியில்,

“பாகிஸ்தானை நிலைகுலைய செய்யும் வகையில் இந்திய அரசின் ஆதரவு பெற்ற தீவிரவாத அமைப்பு இஸ்லாமாபாத்தில் இந்த தாக்குதலை நடத்தி உள்ளது. இதே அமைப்புதான் வானா பகுதியிலும் தாக்குதல் நடத்தியது. அதில் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவின் ஆதரவுடன் திட்டமிடப்பட்ட இந்த தாக்குதலுக்கு வெறும் கண்டனங்கள் போதாது” என்று தெரிவித்துள்ளார்.

## சர்வதேசச் சட்டத்தை அமெரிக்கா மீறுகிறது : பிரான்ஸ்

**பிரான்ஸ், நவ.14:**

கரீபியன் பிராந்தியத்தில் அமெரிக்க ராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் சர்வதேசச் சட்டத்தை மீறுவதாக உள்ளன என்று பிரான்ஸ் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜீன்-நோயல் பரோட் தெரிவித்துள்ளார். ஜி7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு கனடாவில் நடைபெற்றபோது அவர் இதனைக் கூறியுள்ளார். இதுவரை அமெரிக்க ராணுவம் கரீபியன் மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் பசிபிக் கடற்பகுதிகளில் 19 தாக்குதல்கள் நடத்தி 76 பேரை படுகொலை செய்துள்ளது.

## நிலைபாடு மாறிய டிரம்ப் ஹெச்1-பி விசாவுக்கு ஆதரவு

**வாஷிங்டன், நவ.14:**

ஹெச்1-பி விசாவிற்கு அதிக கட்டணம் நிர்ணயித்து இந்தியர்கள் உள்ளிட்ட வெளி நாட்டினர் அமெரிக்க வருகைக்கு எதிராக பேசி வந்த டிரம்ப் திடீரென தனது நிலைபாட்டை மாற்றியுள்ளார்.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் நாம் திறமையான ஊழியர்களை இங்கு கொண்டுவர வேண்டும். பல உயர் தொழில்நுட்பப் பணிகளுக்குத் தேவையான திறமையான பணியாளர்கள் அமெரிக்காவில் இல்லை. உலகம் முழுவதிலும் இருந்து திறமையானவர்களை அமெரிக்கா ஈர்ப்பது மிக அவசியம் என்று டிரம்ப் கூறினார்.

## துருக்கி ராணுவ விமான விபத்து: 20 பேர் பலி

**ஜார்ஜியா, நவ.14:**

துருக்கி நாட்டின் ராணுவ சரக்கு விமானம் ஜார்ஜியாவில் விபத்துக்குள்ளானது. அந்த விமானத்தில் 20 பேர்களும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர் என துருக்கி பாதுகாப்புத் துறை அமைச்சர் யாசர் குலர் அறிவித்துள்ளார். சி-130 ரக சரக்கு விமானம் அஜர்பைஜானில் இருந்து கிளம்பி துருக்கிக்கு செல்லும் வழியில் ஜார்ஜியா- அஜர்பைஜான் எல்லைக்கு அருகில் விழுந்து விபத்துக்குள்ளானது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக துருக்கி அறிவித்துள்ளது.

# 43 நாள் அரசு முடக்கம் முடிவுக்கு வந்தது: நிதி மசோதாவில் கையெழுத்திட்டார் அதிபர் டிரம்ப்

**வாஷிங்டன், நவ.14:**

அரசுத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யும் மசோதாவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டார். இதன்மூலம் கடந்த 43 நாட்களாக முடங்கியிருந்த அமெரிக்க அரசுத் துறைகள் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.



அமெரிக்காவில் அரசு துறைகளுக்கான பட்ஜெட் அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரும். இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் முந்தைய அரசின் திட்டங்கள் நீக்கப்பட்டதால் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி ஒப்புதல் தரவில்லை. தற்போது செனட் சபையில் ஆளும் குடியரசு கட்சிக்கு 53 பேரும், ஜனநாயக கட்சிக்கு 47 பேரும் உள்ளனர். குறைந்தபட்சம் 60 பேரின் ஆதரவு தேவை என்பதால் மசோதா நிறைவேறாமல் கடந்த 43 நாட்களாக அரசுத் துறை முடங்கியிருந்தது.

இதனால் அரசின் பல்வேறு துறைகள் முடங்கிய நிலையில், விமானக் கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர், மருத்துவத்துறை உள்ளிட்ட அத்தியாவசியப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்தனர். இருப்பினும் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததால், அவர்களும் பணிக்கு வராததால் விமானப் போக்குவரத்து கடந்த சில நாள்களாக முடங்கியது.

இந்த நிலையில் தங்களின் முக்கிய கோரிக்கைகள் ஏற்கப்பட்டதால், தங்களது கட்சி நிலைப்பாட்டை மீறி அரசுத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் சமரசம் செய்துகொள்ள சில ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் முன்வந்ததையடுத்து, இந்த மசோதா செனட் அவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 222 வாக்குகளும், எதிராக 209 வாக்குகளும் பதிவானது. அடுத்ததாக பிரதிநிதிகள் சபையில் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதிபர் டிரம்ப் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மசோதா நிறைவேறிய 2 மணி நேரத்துக்குப் பிறகு கையெழுத்திடும் விழா நடந்தது. ஓவல் அலுவலகத்தில் செலவீனங்களுக்கான மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டார். அப்போது பேசிய டிரம்ப், “கடந்த 43 நாட்களாக சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்காக கோடிக்கணக்கான டாலர்களைப் பறிக்க முயற்சித்த ஜனநாயகக் கட்சியினர், அமெரிக்க அரசை முடக்கினர். இன்று மிரட்டி பணத்தை பறிப்பதற்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம் என்ற தெளிவான செய்தியை நாங்கள் சொல்ல விரும்புகிறோம்” எனத் தெரிவித்தார். இந்த மசோதா ஜனவரி 30-ம் தேதி வரை அரசுக்கான நிதியுதவியை நீட்டிக்கும். இதனால் அரசின் அத்தனை துறைகளும் இனி செயல்பட ஆரம்பிக்கும். அனைத்து அரசு ஊழியர்களும் பணிக்கு திரும்புவார்கள், அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.

மசோதாவில் கையெழுத்திடும் முன்பு பேசிய டிரம்ப், நான் அமெரிக்க மக்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன், நீங்கள் இதை மறந்துவிடக் கூடாது. இடைக்காலத் தேர்தல்கள் வரும்போது ஜனநாயக கட்சியினர் நம் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் என்றார்.

# ஆப்கனில் 10-ல் 9 குடும்பங்கள் பசியால் வாடுகின்றன: ஐ.நா

**நியூயார்க், நவ.14:**

ஆப்கனிஸ்தானில் 10-ல் 9 குடும்பங்கள் பசியால் வாடுவதாகவும், கடனில் சிக்கித் தவிப்பதாகவும் ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத்திட்ட அறிக்கையில், ஆப்கனின் பொருளாதார நிலை குறித்து சில தரவுகளை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம்: சமீப காலமாக வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து ஆப்கானியர்கள் அதிக அளவில் நாடு திரும்பும் கட்டாயத்துக்கு ஆட்பட்டுள்ளனர். சுமார் 23 லட்சம் பேர் இவ்வாறு நாடு திரும்பி உள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பிய 1,500 குடும்பங்கள் உட்பட 49,000 குடும்பங்களில் நாடு தழுவிய அளவில் ஐநா மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி ஆப்கனிஸ்தான் மக்கள் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில், சமீப காலத்தில் வெளிநாடுகளில் இருந்து 23 லட்சம் பேர் ஆப்கனிஸ்தானுக்கு திரும்பி உள்ளனர். இதனால், பற்றாக்குறை இன்னும் அதிகரித்துள்ளது. சுகாதாரம், சுத்தமான குடிநீர், கல்வி ஆகியவை வெகுவாக சரிந்துள்ளன.

குறிப்பாக, கிராமப்புறங்களில் இன்னும் குறிப்பாக கிராமப்புற பெண்கள் மத்தியில் இவற்றுக்கான அணுகல் சாத்தியமற்றதாக உள்ளது.

ஆப்கனிஸ்தானில் 10-ல் 9 குடும்பங்கள் உண்ணும் உணவின் அளவை குறைப்பது, சொத்துகளை விற்பது, கடன் வாங்குவது போன்ற எதிர்மறை நடவடிக்கைகளின் மூலம் சமாளிக்கின்றன. ஆப்கனிஸ்தானிலேயே தொடர்ந்து இருந்து வரும் குடும்பங்களில் 81 சதவீத குடும்பங்களும், வெளி நாட்டில் இருந்து திரும்பிய குடும்பங்களில் 88 சதவீத குடும்பங்களும் கடனால் தவித்து வருகின்றன.

நங்கர்ஹார், குனார், சமங்கன் மாகாணங்களில் சமீபத்தில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கங்கள், திடீர் வெள்ளம், வறட்சி ஆகியவை இம்மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது. குடும்பத் தலைவர் இல்லாததால் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. வருமானம் ஈட்டும் ஆண்கள் இல்லாத நிலையில், பெண்கள் வேலைக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அத்தகைய குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐநா உயர் அதிகாரி கன்னி வக்னராஜா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட முதலீடுகள் காரணமாக சில பகுதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஐநா மேம்பாட்டு திட்டம் (UNDP), தனது கூட்டாளிகளுடன் இணைந்து கிழக்கு, வடக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வருகிறது.

இதன்மூலம் இப்பகுதிகளில் மின்சாரம், சுகாதாரம், குடிநீர், வேலைவாய்ப்பு ஆகியவை மேம்பட்டு வருகின்றன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரேசிலில் ஐ.நா. அவையின் 30ஆவது காலநிலை மாநாடு!




**பெலெம், நவ.14:**

பிரேசிலின் பெலெம் நகரில் ஐக்கிய நாடுகள் அவையின் 30 ஆவது காலநிலை மாநாடு நவம்பர் 10 அன்று துவங்கி நடந்து வருகிறது. இம்மாநாடு நவம்பர் 21 வரை நடைபெறும்.

ஐ.நா அவை காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக ஐ.நா. கட்டமைப்பு ஒப்பந்தம் அமைப்பின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளை உள்ளடக்கிய மாநாட்டை நடத்தி வருகிறது. 1992-ஆம் ஆண்டு காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா. கட்டமைப்பு ஒப்பந்தம், (UNFCCC) ரியோ மாநாட்டில் (RIO SUMMIT) ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்தியா உட்பட 198 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தை உலகளவில் எப்படிப் கட்டுப்படுத்துவது என்பதற்கான ஒரு கட்டமைப்பாக இந்த மாநாடு திகழ்கிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், முதல் மாநாடு 1995 ஆம் ஆண்டு ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்றது.

தற்போது 30-ஆவது மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடுகளில் உலக நாடுகளின் தலைவர்கள், அரசுப் பிரதிநி+திகள், விஞ்ஞானிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள். பூமியின் வெப்பநிலையை தொழிற் புரட்சிக்கு முன்பு இருந்த அளவைவிட 1.5 டிகிரி செல்சியஸ்-க்கு கீழே வைத்திருப்ப தும், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கை களின் முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்வதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக இம்மாநாட்டில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் கட்டுப்படுத்த சர்வதேச மற்றும் தேசிய அளவில் என் னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று விவாதிக்கப்படும்.

அதேபோல காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில், மக்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள உதவும் வகையிலான முன்னெச்சரிக்கை அமைப்புகளை உரு வாக்குவது குறித்தும் பேசப்படும். வளிமண்டலத்தில் வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்களைக் குறைப்ப தற்காக காடுகளை உருவாக்குவது, புதை படிவ எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங் களை அதிகரிப்பது போன்ற திட்டங்களும் விவாதிக்கப்படும். ஐ.நா.வின் உலக வானிலை ஆய்வு நிறுவனத்தின் கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டு வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான ஆண்டுகளில் ஒன்றாக உள்ளது. மேலும் சமீப மாதAங்களில் பலமான புயல்கள் வீசி பயங்கர சேதத்தை உரு வாக்கியுள்ளது. இந்த புயல்கள் இயல்பை விட அதிசக்தி வாய்ந்த புயல்களாக மாறுவதற்கும் காலநிலை மாற்றமே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தாண்டு நடைபெறும் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

## பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மரை பதவிநீக்க திட்டம்

**நியூயார்க், நவ.14:**

பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மரின் செல்வாக்கு அந்நாட்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்து வருவதாக சமீபத்தில் சில கருத்துக்கணிப்புகள் வெளியாயின. இதனையடுத்து அவரது பதவிக்கு லேபர் கட்சியில் போட்டி உருவாகலாம் என அவரது ஆதரவாளர்களால் எச்சரிக்கை விடப்பட்டது. இந்நிலையில் அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் ஸ்டார்மரை பதவி நீக்கம் செய்ய திட்டமிட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் அந்நாட்டில் புது குழப்பம் உருவாகியுள்ளது.

## ‘அமெரிக்காவுக்கு வந்து பயிற்சி அளித்துவிட்டு சொந்த நாட்டுக்கு சென்றுவிடுங்கள்’ - ட்ரம்ப்பின் எச்-1பி விசா பிளான்!

**வாஷிங்டன், நவ.14:**

அமெரிக்க வேலைகளுக்கு வெளிநாட்டு தொழிலாளர்களை எப்போதும் சார்ந்திருப்பதை விட, அதிகளவில் திறன் தேவைப்படும் வேலைகளுக்கு அமெரிக்கர்களுக்கு பயிற்சி அளிக்க, தற்காலிகமாக திறமையான வெளிநாட்டு தொழிலாளர்களை அமெரிக்காவுக்குக் கொண்டு வருவதே அதிபர் ட்ரம்ப்பின் எச்1பி விசாவுக்கான புதிய அணுகுமுறை என்று அந்நாட்டின் கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட் கூறினார்.



H-1B விசாவுக்கான கட்டுப்பாடுகளை அதிகரித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், திடீர் திருப்பமாக உலகம் முழுவதிலும் இருந்து திறமையாளர்களை அமெரிக்காவுக்கு அழைத்து வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ஸ்காட் பெசென்ட், “எச்-1பி விசாக்களுக்கான ட்ரம்ப்பின் புதிய அணுகுமுறை அமெரிக்காவின் உற்பத்தி திறனை மீட்டெடுக்கும் அறிவு பரிமாற்ற முயற்சி. பல ஆண்டுகளாக வெளிநாடுகளையே சார்ந்திருந்த பிறகு, அமெரிக்க உற்பத்தித் துறையை மீண்டும் கட்டியெழுப்புவதே ட்ரம்ப்பின் புதிய அணுகுமுறை.

20-30 ஆண்டுகளாக நாம் துல்லியமான உற்பத்தி வேலைகளை இங்கே செய்யவில்லை. இப்போது கப்பல் கட்டுமானம் மற்றும் செமி கண்டக்டர் தொழிலை அமெரிக்காவுக்கு மீண்டும் கொண்டு வர விரும்புகிறோம். இதற்கு அரிசோனாவில் பெரிய வசதிகள் இருக்கும்.

எனவே, அமெரிக்க தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்க அத்தகைய திறன்களைக் கொண்ட வெளிநாட்டு தொழிலாளர்களை மூன்று, ஐந்து அல்லது ஏழு ஆண்டுகளுக்கு இங்கு கொண்டு வருவதே அதிபரின் தொலைநோக்குப் பார்வை என்று நான் நினைக்கிறேன். இங்குள்ளவர்களுக்கு பயிற்சியளித்த பின்னர் அவர்கள் சொந்த நாட்டுக்கு செல்லலாம். அதன்பிறகு அமெரிக்க தொழிலாளர்கள் இந்த வேலைகளுக்கு பொறுப்பேற்பார்கள்.

நாங்கள் பல ஆண்டுகளாக இங்கு கப்பல்கள் அல்லது செமி கண்டக்டர்களை உருவாக்கவில்லை. எச்-1பி விசா திட்டத்துக்கான ட்ரம்ப்பின் புதிய அணுகுமுறை, முக்கியமான தொழில்களை அமெரிக்காவுக்கு திருப்பி கொண்டு வருவதற்கும், இறக்குமதிகளை நம்பியிருப்பதைக் குறைப்பதற்குமான முயற்சி. அதிபர் 2,000 டாலர் டிவிடெண்ட் வழங்குவதாக சொல்லியுள்ளார். இது வலுவான வர்த்தகக் கொள்கையின் நன்மைகளை குடும்பங்கள் உணர வைக்கும் செயல்.” என்று அவர் கூறினார்.

## ரஷ்யாவுக்கு வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 40% அதிகரிப்பு



**மாஸ்கோ, நவ.14:**

நடப்பு 2025-ம் ஆண் டின் முதல் 6 மாத காலத் தில் ரஷ்யாவின் மாஸ்கோ நகருக்கு சுற்றுலா சென்ற இந்தியப் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதன்படி, 2025 முதல் அரையாண்டில் 40,800 பயணிகள் இந்தியா விலிருந்து மாஸ்கோவுக்கு சுற்றுலா சென்றுள்ளனர். காமன்வெல்த் அமைப்பை (சிஐஎஸ்) சாராத நாடு களின் பயணிகள் மாஸ் கோவுக்கு சுற்றுலா செல்வ தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

2025 ஜனவரி முதல் ஜூன் வரையிலான கால கட் டத்தில் ஒட்டுமொத்த மாக சிஐஎஸ் நாடுகளுக்கு வெளியில் இருந்து 5 லட் சத்துக்கும் அதிகமான சுற் றுலாப் பயணிகள் மாஸ் கோவுக்கு வருகை தந்துள் ளனர். இது, கடந்த 2024-ம் ஆண்டை காட்டிலும் 10% அதிகம்.

ஆசிய நாடுகளில் இருந்து மாஸ்கோவுக்கு செல்லும் ஆர்வம் பலரிடம் அதிகரித்துள்ளது. அதன் விளைவாக, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வரு கிறது.

மாஸ்கோ உலகள வில் அனைவரையும் ஈர்க் கும் சுற்றுலாத் தலமாக விரிவடைந்து வருகிறது என்று மாஸ்கோ நகர சுற் றுலா குழு தெரிவித்துள் ளது. இ-விசா வசதி மற் றும் அங்கு நடைபெறும் கலாச்சார கொண்டாட்டங் கள் ஆகியவை உலகெங் கிலும் இருந்து சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்த்து வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.